සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
Employees' Trust Fund Board



# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT 2024

# Innovation in a *Sustainable Journey*

# பேண்தகு பயணத்தில் புத்தாக்கம்

தொடர்ந்து மாறிவரும் உலகளாவிய சூழலில், பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் சமூகப் பாதுகாப்பு அமைப்புக்களின் எதிர்கால இருப்பை உறுதிசெய்ய வேண்டியது அத்தியவசிய காரணியாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் (ETFB) இம்முறை வருடாந்த அறிக்கையின் அடிப்படையாக பேண்தகு பயணத்திற்கான புத்தாக்கம் என்பதாகும். எமது சேவை வழங்கலில் தொழில்நுட்பம், மூலோபாய சீர்திருத்தங்கள் மற்றும் தகவமைப்புக் கொள்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு நல்வாழ்வை உறுதி செய்வதே எமது இலக்காகும்.

பாரம்பரிய அமைப்புகளை மாத்திரம் நம்பி, சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவது கடினமான விடயமாகும். எனவே, அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் சவால்களை தடையின்றி வெற்றிகொள்வதற்கு டிஜிட்டல் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நீண்டகால பேண்தகு நிலைமையை உறுதிசெய்தல் போன்ற புத்தாக்க தீர்வுகளை நோக்கிப் பயணிக்க வேண்டியுள்ளது. சிரமங்கள் இன்றி சேவைகளை வழங்குவதன் மூலமும், நீண்ட காலத்திற்கு நிதியைப் பாதுகாப்பதன் மூலமும், நிலையான முதலீட்டு உத்திகளை வலுப்படுத்துவதன் மூலமும் இதைச் செய்ய முடியும். எமது உறுப்பினர் தளத்தை விரிவுபடுத்துவதன் மூலம், பரந்த அளவிலான ஊழியர்களுக்கு நிதியத்தின் நன்மைகளை விரிவுபடுத்துவதற்கான எதிர்பார்ப்பையும் புத்தாக்க முறைகள் மூலம் அடைந்துகொள்ள முடியும்.

உறுப்பினர் சமூகத்திற்குள் நம்பகத்தன்மையை வளர்ப்பதில் இது பேருதவியாக அமையும். அதன் மூலம் மன அழுத்தம் நிறைந்த பணிச்சூழலிலிருந்து நீங்கி புதிய அனுபவமுள்ள மற்றும் நட்புறவுமிக்க பணியாளர்கள் உருவாக்கப்படுகின்றனர். அனைத்து உறுப்பினர்களுக்கும் சிறந்த சேவையையும் சேவையின் முடிவில் நிதி பாதுகாப்பையும் வழங்குவதே எமது முக்கிய நோக்கமாகும். இந்தப் பெருமைமிக்க பயணத்தில் புத்தாக்கங்களில் கவனம் செலுத்தாவிடத்து நமது இலக்குகளை அடைவது கடினமாக அமையும்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதான நோக்கமாவது அதன் அங்கத்தவர்களது தொழில் வாழ்க்கையின் இறுதியில் அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும். இந்த நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு நிதியம் பின்வருமாறு செயற்படுவதற்கு உத்தேசிக்கின்றது :

(அ) நிதியீட்டம் மற்றும் முதலீட்டின் மூலம் ஊழியர் பங்குரிமை, நலனோம்பல் மற்றும் பொருளாதார சனநாயகம் என்பவற்றை ஊக்குவித்தல்.

(ஆ) பங்குரிமை ஊடாக முகாமைத்துவத்தில் ஊழியர்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்தல்.

(இ) ஊழியர்களின் பங்களிப்பின்றி ஓய்வூதிய நலன்களை வழங்குதல்.

(ஈ) இந்த நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

© ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை

# உள்ளடக்கம்


**142**
**எமது 44 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்**

143 அறிக்கையின் உள்ளடக்கம்
144 நாம் யாவர்
145 பிரதான நிதி நிலைமைகள்
146 பிரதான மைல்கற்கள்
148 பெறுமதி உருவாக்க மாதிரி
150 சபையின் பிரிவுகள் / கிளைகள் / அலகுகளின் தொழிற்பாடுகள்
152 செயலாற்றுகை மீளாய்வு

**154**
**கார்ப்பரேட் பணிப்பெண்**

155 தவிசாளரின் மீளாய்வு
159 முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
176 பணிப்பாளர் சபை
181 சிரேக்ஷ்ட முகாமைத்துவம்
186 முகாமைத்துவக் குழு
188 நிறுவன ஆளுகை
198 இடர் முகாமைத்துவம்

## 205
## நிதித் தகவல்கள்


206 விரிவான வருமானக் கூற்று

208 நிதி நிலமைப் பற்றிய கூற்று

209 அமைப்பு மாற்றம் பற்றிய கூற்று

211 காசுப் பாய்ச்சல் கூற்று

212 திறைசேரி பிணைமுறி தொகுப்பின் சந்தைப் பெறுமதி

214 பட்டியலிடப்பட்ட கடன்பத்திர அமைப்பின் சந்தைப் பெறுமதி

215 அமைப்பு முதலீட்டுக் கூற்று

219 முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்


## 256
## மேலதிக தகவல்கள்


257 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 2024

263 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பில் சபையின் அவதானிப்புகள்

411 பத்து வருட கால சாராம்சம்

412 நிதி நிலமை தொடர்பான கூற்று

413 புள்ளிவிபரவியல் பின்னிணைப்புகள்

416 எமது அடைவுகள்

# 44 ஆவது வருடாந்த அறிக்கை பற்றிய அறிமுகம்

# அறிக்கையின் உள்ளடக்கம்

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் 44 ஆவது வருடாந்த அறிக்கை இதுவாகும். 2024 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தை தாபனம் எவ்வாறு உருவாக்கியது என்பதற்கான விரிவான அறிக்கையொன்று இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் 44 ஆவது வருடாந்த அறிக்கை இதுவாகும். 2024 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தைத் தாபனம் எவ்வாறு உருவாக்கியது என்பதற்கான விரிவான அறிக்கையொன்று இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கம் 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தலைமை அலுவலகம் மற்றும் கிளை வலையமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. மிக அண்மைய வருடாந்த அறிக்கையான 2023 ஆம் ஆண்டின் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த அறிக்கையுடன் இவ்வறிக்கை ஒப்புநோக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் உள்ளடக்கம் நிறுவனத்திற்கும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும் முக்கியத்துவம்மிக்க அம்சங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

## அறிக்கையின் நோக்கம்

இவ்வறிக்கையானது தாபனத்தின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தனித்துவமிக்க பெறுமான உருவாக்கத்தினை தமது பிரபலமிக்க பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் மூலம் நிதியத்தின் தந்திரோபாயம், ஆளுகை மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்து சுருக்கமான தொடர்பாடலையும் இது வழங்குதுடன் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தடங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவினையும் நிரூபணஞ் செய்கின்றது.

இவ்வறிக்கையானது அளவு மற்றும் தர ரீதியான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்புநோக்குவதற்கு மற்றும் மேலதிக பகுப்பாய்வினை எளிதாக்குவதற்கு முடியுமான அளவு ரீதியான தரவுகளை வழங்குவதே எமது நோக்காகும். நிதிக் கூற்றுக்களும் அதனுடன் தொடர்பான குறிப்புக்களும் அரசாங்க கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தரவாத அறிக்கையும் இவ்வறிக்கையில் உள்ளது

## அறிக்கையின் இணக்கம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவன ஆளுகை தொடர்பான சிறந்த ஒழுக்க நெறிக் கோவை மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் என்பவற்றுடன் நிறுவனம் எவ்வாறு இணங்கி ஒழுகுகின்றது என்பது குறித்து கலந்துரையாடுகின்றது

## மூலோபாய நோக்கு

வருடம் பூராகவும் செயலாற்றுகைக்கு கவனம் செலுத்தி இந்த வருடாந்த அறிக்கை பங்குதாரர்களின் வளர்ச்சிக்காக சபையின் தற்போதைய மற்றும் எதிர்காலப் பணிகள் தொடர்பில் புரிந்துணர்வை வழங்குகின்றது.


**தொடர்புகொள்ள வேண்டிய உத்தியோகத்தர்**

**திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபை
தொலைப்பேசி : +94 11 7747250
தொலைநகல் : +94 11 7747209
மின்னஞ்சல் : finance@etfb.lk

# நாம் யாவர்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் திகதி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, தற்போது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. அரசாங்க ஓய்வூதியத்திற்கு உரித்தாகாத எல்லா அரச துறை ஊழியர்களும் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தில் அங்கத்தவர்களாவதுடன், அவர்களது தொழில் வழங்குநர்கள் அவ்வூழியர்களின் மொத்த உழைப்பிலிருந்து 3சூ இனை நிதியத்திற்கு மாதாந்தம் அனுப்ப வேண்டியுள்ளனர். எனவே ஊழியர் சேமலாப நிதியத்தைப் போலன்றி, தொழில் வழங்குநர் மாத்திரமே ஊழியர் ∴ அங்கத்தவர் சார்பாகப் பங்களிப்பொன்றை மேற்கொள்வதுடன் அங்கத்தவர்கள் பங்களிப்புச் செய்யாத ஒரு நலனாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் சுயதொழில் முயற்சியாளர்களினதும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது.

### சபையின் குறிக்கோள்கள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 07 ஆம்

அ) நிதியிடல் மற்றும் முதலீட்டில் பங்குபெறுவதன் ஊடாக ஊழியர் உடைமையாண்மை, ஊழியர் நலன்புரி, பொருளாதார சனநாயகம் ஆகியவற்றை ஊக்குவித்தல்

ஆ) தொழில் முயற்சிகளில் உரிமை பங்கினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது தான் பங்களிப்புச் செய்யாத நலன்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும்

ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

## எமது பொறுப்புக்கள்

### நோக்கு

நிறுவன ரீதியான திறமையினூடாக அனைத்து பங்குதாரர்களுக்கும் செயலூக்கமிக்க மற்றும் சாத்தியமிக்க முதன்மையான நம்பிக்கைப் பொறுப்பாக திகழ்தல்.

### செயற்பணி

நிதிசார் உறுப்பினர் நலன்கள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை பரந்த அளவில் வழங்குவதில் மிகவும் அக்கறையுள்ள மற்றும் விவேகமுள்ள நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்.

### பெறுமானங்கள்

- ஆக்கத்திறனமிக்க, புத்தாக்கமிக்க மற்றும் அர்ப்பணிப்புமிகு பணிக்குழாம்
- மக்கள் நேயமிகு வேலைச் சூழல்
- ஆதரவுமிக்க கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்
- சிறந்த அமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள்
- நிறைவான நிதி ஸ்தீரத்தன்மை மற்றும்
- மகிழ்ச்சிமிக்க வாடிக்கையாளர்கள்

# நிதிசார் **சிறப்பம்சங்கள்**

| | 2024 | 2023 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | இ.ரூபா ´000 | இ.ரூபா ´000 | % |
| **தொழிற்பாடுகள்** | | | |
| மொத்த வருமானம் | 65,987,907 | 67,792,678 | (2.7) |
| மொத்த வட்டி வருமானம் | 61,819,095 | 64,380,505 | (4) |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் | 2,811,307 | 2,833,648 | 0.8 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 63,176,600 | 64,959,030 | (2.7) |
| வரிச் செலவினம் | 8,678,062 | 9,016,645 | 3.76 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 54,498,538 | 55,942,384 | (2.6) |
| **நிதி நிலமைப் பற்றிய கூற்று** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 794,613 | 898,585 | (11.57) |
| நிதிச் சொத்துக்கள் FVTPL | 2,646,191 | 4,463,977 | (40.72) |
| நிதிச் சொத்துக்கள் FVTOCI | 14,708,973 | 10,764,966 | 36.64 |
| கடன் தீர்ப்புச் செலவின் மீதான நிதிச் சொத்துக்கள் | 563,248,506 | 499,504,778 | 12.76 |
| அங்கத்துவர் நிதியம் மற்றும் ஒதுக்குகள் | 585,984,840 | 518,804,839 | 12.95 |
| **அங்கத்தவர் நோக்கு** | | | |
| அங்கத்துவர் நிதியம் | 564,326,576 | 504,434,709 | 11.87 |
| வட்டி மற்றும் பங்கிலாபம் | 51,301,803 | 45,861,319 | 11.86 |
| வட்டி மற்றும் பங்கிலாபம் (%) | 10% | 10% | 0 |
| அங்கத்தவர் நலன்கள் | 452,742 | 549,153 | (17.56) |
| முதலீட்டின் மீதான நலன்கள் ROI | 11.92% | 13.82% | (1.9%) |
| பங்கின் மீதான நலன்கள் ROE | 10.20% | 11.61% | (1.41%) |
| சொத்துக்கள் மீதான நலன்கள் ROA | 9.77% | 11.31% | (1.54%) |

1

**மொத்த சொத்துக்கள்**
(ரூ.மில்.)
**591,256**
524,511 (2023)

2

**வருடத்தில் இலாபம்**
(ரூ.மில்.)
**54,498**
55,942 (2023)

3

**அங்கத்தவர் நிதியம்**
(ரூ.மில்.)
**564,327**
504,435 (2023)

# பிரதான மைல்கற்கள்

**1986**

மரண நலத்திட்டம் 100,000/-

**1989**

மரண நலத்திட்டம்

நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் : 200,000/-

**1991**

மரண நலத்திட்டம்

நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்

இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி: 200,000/-

**1992**

மரண நலத்திட்டம்

நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்

இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி

கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் ரூபா 18,000/-

**1994**

மரண நலத்திட்டம்

நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்

இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி

கண் வில்லை பொருத்தும் செலவிற்கான மீளளித்தல்

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் ரூ. 15,000/- 9,000 புலமைப் பரிசில்கள்

**1997**

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் (ரூ.25000 வீதம் ஒரு வருடத்திற்கு உச்சமாக ரூ.50,000 சேவைக்காலத்திற்குள்)

**2002**

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் "வியன" வீட்டுக் கடன் திட்டம்

## 2006

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" வீட்டுக் கடன் திட்டம்

சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 300,000/-

## 2010

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" வீட்டுக் கடன் திட்டம் | சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி | கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி ரூபா 12,000/- 5,000 புலமைப் பரிசில்கள்

## 2016

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" வீட்டுக் கடன் திட்டம் | சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி | கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி

கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் ரூபா 30,000/-

## 2022

மரண நலத்திட்டம் | நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் | "சிரமசுவ ரெக்கவரண" சிகிச்சைத் திட்டம் | "வியன" வீட்டுக் கடன் திட்டம் | கபொத (உ/த) மாணவர்களுக்கான நிதியுதவி | கண் வில்லை செலவிற்கான மீளளித்தல் | சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிதியுதவி ரூ. 350,000/- இதய சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி: 350,000/-

## 2023

மரண நலன் திட்டம் | நிரந்தர அங்கவீன நலன் திட்டம் | இருதய சத்திர சிகிச்சை நிதியுதவி | உள்ளக கண் வில்லைப் பொருத்தும் செலவுகளை மீளளிப்புச் செய்தல் | ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கு நிதியுதவி | சிரமசுவ ரெகவரண வைத்திய சாலை அனுமதி மருத்துவ காப்புறுதித் திட்டம் | "வியண" குறைந்த வட்டி வீடமைப்புக் கடன் | சிறுநீரகம் பொருத்தல் நிதியுதவி | க.பொ.த. உயர்தரம் பரீட்சைக்கு தோற்றும் பிள்ளைகளின் தொழிற் பயிற்சி பாடநெறிக்கு நிதியுதவி "நிபுணதா சவிய" ரூ. 50,000/-

## 2024

மரண நலன் கொடுப்பனவுத் திட்டம் | நிரந்தர அங்கவீன நலன் திட்டம் | இருதய சிகிச்சைக்கான நிதியுதவி | உள்ளக கண் வில்லைகள் பொருத்தும் செலவினங்களை மீளளித்தல் | தரம் ஐந்து பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கான நிதியுதவி | சிரமசுவ ரெகவரண வைத்தியசாலை அனுமதிக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் | "வியன" குறைந்த வட்டி வீடமைப்புக் கடன் திட்டம் | சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கான நிதியுதவி | க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள பிள்ளைகளுக்கு தொழிற் பயிற்சிப் பாடநெறிகளுக்கான நிதியுதவி "நிபுணதா சவிய" ரூ. 50,000 | அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கு தகைமைப் பெற்றுக்கொள்ளும் பிள்ளைகளுக்கான நிதியுதவி (விஷ்வ யாத்ரா - ரூ. 25,000)

# பெறுமதி உருவாக்க மாதிரி

## பெறுமதி இயலுமைகள் (உள்ளீடுகள்)

### முதலீட்டு மூலதனம்

- அங்கத்தவர் நிதியம் - 504 பில்லியன்

### அங்கத்துவ மூலதனம்

- மொத்த தொழில் வழங்குநர்கள் 79,895
- மொத்த அங்கத்தவர் கணக்குகள் 2,548,000
- சுயதொழில் மற்றும் குடிப்பெயர் ஊழியர்கள் 44,494

### ஊழியர் மூலதனம்

- மொத்த ஆளணி 837
- சபையில் 35% க்கும் மேலான ஆளணி 20 வருடத்திற்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர்கள்
- திறமை தகுதி மற்றும் தகைமைப்பெற்ற ஆளணி

### பங்குடமை மூலதனம்

- பிரிவின் பிரகாரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
- ஊழியர் சேமலாப நிதியம் (EPF)
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA)

### சமூக மற்றும் சமுதாய மூலதனம்

- தொழிலாளர் சனத்தொகை

## பெறுமதி உருவாக்கம் (செயன்முறை)

### தொலைநோக்கு, செயற்பணி மற்றும் பெறுமானங்கள்

### இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

### மூலோபயங்கள் மற்றும் செயற்பாடுகள்

### அடிப்படையான செயற்பாடுகள்

- சேகரிப்பு
- இணக்கம் மற்றும் செயற்படுத்தல்
- தொழிற்வழங்குநர் தொடர்புகள்
- அங்கத்துவ சேவைகள்
- முதலீடுகள

### இரண்டாம் நிலை செயற்பாடுகள்

- நிதியீட்டம்
- தகவல் தொழில்நுட்பம்
- மனிதவளம்
- உள்ளக கணக்காய்வு

### 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டம்

- நிறுவன நல்லாட்சி
- நிறுவன இடர் முகாமைத்துவம்

## உருவாக்கப்பட்ட பெறுமதி (வெளியீடுகள்)

### முதலீட்டாளர்கள்

- அங்கத்தவர் நிதியம் 564 பில்.
- முதலீட்டின் மீதான நலன்கள் 11.92%

### அங்கத்தவர்கள்

- வட்டி 3%
- பங்கிலாபம் 7%

### ஊழியர்கள்

- தனிப்பட்ட செலவினம் 1.4 பில்லியன்
- பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவு 4.4 மில்லியன்
- ஆளணிப் புரள்வு 7% க்கு குறைவு

### சமூகம்

- கோரிக்கை கொடுப்பனவு 33 பில்லியன்
- இருதய சிகிச்சை 127 மில்லியன்
- மரண நலன்கள் 122 மில்லியன்
- ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் 113 மில்லியன்
- உயர் கல்வி நிதி 2 மில்லியன்
- நிபுனதா சவிய 0.09 மில்லியன
- சிரமசுவ திட்டம் 19 மில்லியன்
- நிரந்தர அங்கவீனம் 20 மில்லியன்
- சிறுநீரகம் மாற்றுதல் 1 மில்லியன்
- கண்வில்லை பொருத்தல் 8 மில்லியன



# சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள்

## சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் தொடர்புகள் பிரிவு

தனியார் நிறுவனங்களிலும் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்கப் பெறாத அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் மொத்த வருவாயில் 3% இனைப் பங்களிப்புச் செய்வது கட்டாயமாகும். தொழில்தருநர்களிடமிருந்து உரிய நேரத்தில் பங்களிப்புக்களைச் சேகரித்தல், மேலதிக கட்டண அறவீடுகளைச் சேகரித்தல், தவறுபவர்களை/ பங்களிக்காதோரை அடையாளங்காணுதல், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன பங்களிப்புச் சேகரித்தல் படிமுறையுடன் தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகளாகும். சபையின் சேகரிப்பு இலக்குகளை அடைவதே சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புப் பிரிவின் பொறுப்பு ஆகும்.

## முதலீட்டுப் பிரிவு

சபையின் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முதுலீட்டுப் பிரிவு நிறுவனத்தின் முக்கிய வர்த்தக அலகாகும். முதலீடுகள் மற்றும் திரவத்தன்மையின் பாதுகாப்பினைப் பேணும் அதே வேளையில் உச்ச வருவாயை ஈட்டுவதே இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். முதலீட்டுத் தீர்மானங்களுக்கான வழிகாட்டியாக விரிவான முதலீட்டுக் கொள்கை ஒன்று உள்ளது.

## அங்கத்தவர் சேவைகள் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்களை வெளியிடுதல், பொது நலன்களின் (சாதாரண மற்றும் மரண நலன் கோரல்கள்) துரித செயலாக்கம் மற்றும் செயற்படு அங்கத்தவர்களுக்கான ஏனைய நலன்புரித் திட்டங்களைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இப்பரிவின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நிதிப் பிரிவு

நிதிப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுதிட்டம் மற்றும் பணிக்குழாத்தினரதும் ஏனையவற்றினதும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை அரச விதிகளுக்கு உட்பட்டவாறு தயாரித்தல், அரச கணக்காய்வு விடயங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

## நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவு

தற்போதைய போட்டிமிக்க வர்த்தகச் சூழலில் இன்றியமையாத நவீன மனித வள நுட்பங்கள் மற்றும் சிறந்த அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றை பின்பற்றுவதன் தேவை அறியப்பட்டுள்ளது. ஒரு சேவை நிறுவனமான நுவகு சபை மக்கள் மீது (ஊழியர்கள்) தங்கியிருக்கும் தன்மையானது மிகவும் உயர்வானது. எனவே, நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் பின்பற்றப்படும் வழிமுறைகள் மற்றும் காணப்படும் முறைமைகளை இற்றைப்படுவதற்கும் விருத்தி செய்வதற்கும் மற்றும் பணிக்குழாத்தினருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பிரதானமாக அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமையினை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பப் பிரிவை மறுசீரமைப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவ்வாறான முறைமைகள் தொடர்ச்சியாகவும் பொருத்தமாகவும் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாயுள்ளது. பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நேரடியாகவே தலைவருக்கு அறிக்கையிடுவார். உள்ளகக் கணக்காய்வின் ஏற்கனவே உள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் நம்பகத்தன்மையை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆய்வினை மேற்கொள் வேண்டும் என்றும் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயனுறுதிமிக்க கருவியொன்றாக உள்ளகக் கணக்காய்வின் வகிபங்கினை வலுவூட்டுவதற்கும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.

## சட்டப் பிரிவு

சட்டப்பிரிவானது சபையின் அனைத்து சட்ட விவகாரங்களுக்கும் ஆலோசனை சேவைகளை வழங்கும் அலகொன்றாகச் செயற்படுகின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவாக்கத்துடன் பிராந்திய மட்டத்திற்கு சட்ட நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. சட்டப் பிரிவானது பிரதிப் பொது முகாமையாளரின் (சட்டம்) கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.



# செயலாற்றுகை மீளாய்வு

## பெறுமதி சேர்க்கப்பட்ட வெளிப்படுத்தல்

சபையின் பெறுமதியை உருவாக்குதல் தொடர்பிலான பகுப்பாய்வு மற்றும் குழுமத்தின் பிரதான தரப்பினர்களுக்கு மத்தியில் உள்ள வேறாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2024 | 2023 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். | % |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | | | |
| பிரதான வியாபார முயற்சிகள் மூலம் உழைக்கும் வருமானம் | 65,353.78 | 67,118.20 | (2.63) |
| சேவை கிரயம் | (375.85) | (357.33) | (5.18) |
| **பிரதான வியாபார முயற்சிகள் மூலம் சேர்க்கப்பட்ட பெறுமதி** | **64,977.93** | **66,760.87** | **(2.67)** |
| வேறு வருமானங்கள் | 634.13 | 674.48 | (6) |
| கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான அறவீடுகள் | (4.91) | (51.45) | 90.5 |
| **பெறுமதியை சேர்த்தல்** | **65,607.15** | **67,383.90** | **(2.6)** |
| **ஊழியர்களுக்கு பெறுமதியை வேறாக்கல்** | | | |
| சம்பளம், வேதனம் மற்றும் வேறு நலன்கள் | 1,400.62 | 1,324.11 | 5.8 |
| **அங்கத்தவர்களுக்கு** | | | |
| அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | 15,390.53 | 13,758.50 | 11.86 |
| அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 35,911.28 | 32,102.82 | 11.86 |
| **அரசுக்கு** | | | |
| வரிச் செலவினம் | 8,678.06 | 9,016.65 | (3.76) |

| | 2024 | 2023 | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூ.மில்லியன். | ரூ.மில்லியன். | % |
| **சமூகத்திற்கு** | | | |
| அங்கத்தவர் நலன்கள் | 452.74 | 549.15 | (17.5) |
| | | | |
| **விரிவாக்கல் மற்றும் விருத்திக்காக** | | | |
| தடுத்துவைக்கப்பட்ட இலாபம் | 727.79 | 278.12 | 161.68 |
| தேய்மானம் மற்றும் கடன்கழிப்பு | 46.13 | 40.55 | 13.76 |
| ஈவுத்தொகை சமநிலை ஒதுக்கு நிதி | 3,000 | 10,314 | (70.91) |
| | | | |
| **வேறாக்கப்பட்ட மொத்தப் பெறுமதி** | **65,607.15** | **67,383.90** | **(2.64)** |

## சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி (EVA)

சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி நிறுவனமொன்றின் உண்மையான பொருளாதார இலாபத்தை எடுத்துக்காட்டும். சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி என்பது குறிப்பிடத்தக்க ஆபத்தான பங்குதாரர்களுக்கு தேவையான ஆகக் குறைந்த நலன்களை விஞ்சும் அல்லது குறையும் உழைப்பின் அளவு பற்றிய மதிப்பீடாகும்.

| | 2024 | 2023 |
|---|---|---|
| | ரூ.மில்லியன் | ரூ.மில்லியன் |
| **முதலீட்டு மூலதனம்** | | |
| பொதுவான அங்கத்தவர் நிதியம் | 534,380.64 | 482,032.66 |
| சேர்க்க : கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம் | 30.10 | 35.02 |
| | **534,410.74** | **482,067.68** |
| | | |
| **முதலீட்டு மூலதனம் மீதான நலன்கள்** | | |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 54,498.54 | 55,942.38 |
| சேர்க்கப்பட்ட கடன் மற்றும் வேறு நட்டங்களுக்கான திரண்ட இழப்பீட்டு ஒதுக்கம் | (4.91) | (51.45) |
| **முதலீட்டு மூலதனத்தின் மீதான மொத்த நலன்கள்** | **54,493.63** | **55,890.93** |
| | | |
| முதலீட்டு மூலதனத்தின் சூழ்நிலை கிரயம் | (49,697.40) | (79,824.61) |
| **சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி** | **4,796.23** | **(23,933.68)** |

*2024 சாதாரண பாரமில் – 9.30% 12 மாத பொதுத் திறைசேரிப் பட்டியல் மீது கணக்கிடப்பட்டுள்ளது. (2023 - 16.59%)

# கார்ப்பரேட் பணிப்பெண்



# தவிசாளரின் மீளாய்வு

2024 ஆம் ஆண்டின் பொருளாதார செயல்திறனைப் அவதானிக்கும் போது, 2023 ஆம் ஆண்டில் வங்கி வட்டி விகிதங்கள் 14.5 இலிருந்து 10.0 ஆகவும், திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி விகிதங்கள் (91 நாட்கள்) 14.51% இலிருந்து 8.2% ஆகவும், 364 நாள் உண்டியல்களுக்கான வட்டி விகிதங்கள் 12.93% இலிருந்து 8.96% ஆகவும் குறைந்துள்ளன. மேலும் இவற்றின் பெறுபேறுகள் சபையின் நிதியத்தை நேரடியாகப் பாதித்தன. இருப்பினும், மூலதனச் சந்தையில் ஏற்பட்ட விரிவாக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டில் மூலதனச் சந்தை மூலம் ரூ. 3.5 பில்லியனை நிதியத்திற்கு சேர்க்க முடிந்தது. அதற்கமைய, சபையின் நிகர சொத்துக்கள் ரூ. 518.8 பில்லியனில் இருந்து ரூ. 585.9 பில்லியனாக 12.9% வளர்ச்சியடைந்தது

### அன்புள்ள பங்குதாரர்களே,

இலங்கையின் இரண்டாவது பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியமான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை அதன் பணிப்பாளர்கள் சபையின் சார்பாக முன்வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நமது நாடு ஒட்டுமொத்தமாக பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒரு திருப்புமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் நேரத்தில், 2024 ஆம் ஆண்டிற்கான இந்த வருடாந்த அறிக்கையை நாம் சமர்ப்பிக்கின்றோம். உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளுக்கு நாம் கவனம் செலுத்தும்போது, நாம் கடந்து செல்லும் இந்தக் காலகட்டம் ஓரளவு சவாலானது என்பதையும் நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமின்மை முடிவுக்கு வந்து, இந்த ஆண்டின் இறுதிக்குள் அது முற்றிலும் நிலையான அரசியல் சூழ்நிலையைக் கொண்ட நாடாக மாறியுள்ள போதிலும், உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் கொந்தளிப்புகளுக்கு மிகவும் உணர்திறனுள்ள வகையிலும், அத்தகைய சூழ்நிலைகள் நம்மீது ஏற்படுத்தும் விளைவுகள் குறித்து பொறுப்புடன் செயல்பட வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. ஆயினும், 2024 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் செயலாற்றுகை சவாலான சூழ்நிலைகளிலும் கூட நிலையான நிதி முகாமையையும் உகந்த சேவை வழங்கலை வழங்குவதற்கான சபையின் திறனையும் நிரூபிக்கின்றது.

### நிதியத்தின் வளர்ச்சி மற்றும் நிதிச் செயலாற்றுகை

2023 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.504,435 பில்லியனாக இருந்த இந்த நிதியம், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 11.9% அதிகரித்து ரூ.564,327 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் வட்டி மற்றும் பங்கிலாபத் தொகையில் ஏற்பட்ட 11.9% வளர்ச்சியும் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பங்களிப்பு சேகரிப்பில் ஏற்பட்ட 12.9% வளர்ச்சியும் சலுகைகளைப் பெற்றுக்கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் வெளியிடப்பட்ட உறுப்பினர் கணக்கு நிலுவைகளின் பெறுமதி 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 இல் குறைவாக காணப்படல் என்பன இதற்கு ஏதுவாகின. முன்னைய ஆண்டை விட உறுப்பினர் கணக்கு நிலுவைகளின் விநியோகத்தில் ஏற்பட்ட அளவு குறைவையும் ஒரு வகையில் பொருளாதார குறிகாட்டியாகக் கருத முடியும். மேலும் இந்தப் போக்கு நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட நேர்மறையான போக்குகள் காரணமாக தனியார் துறை ஊழியர்களின் சேவை முடிவுறுத்தல் எண்ணிக்கையில் ஏற்பட்ட அளவு குறைவையும் பிரதிபலிக்கின்றது.

2023 ஆம் ஆண்டில் ரூ.515.2 பில்லியனாக இருந்த முதலீட்டுத் தொகுப்பு, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.581.1 பில்லியனாக 11.33% அதிகரிப்பைக் காட்டியது. அதே நேரத்தில் திறைசேரிப் பிணைமுறிகள் மற்றும் உண்டியல்கள் மீதான முதலீடு 14% அதிகரித்துள்ளது. பங்குச் சந்தை முதலீடுகள் 13% அதிகரித்துள்ளன. சபையின் முதலீட்டுத் தொகுப்பை நிர்வகிக்கும் போது, சபையின் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கையின் கட்டமைப்பிற்குள் இருந்த வண்ணம் நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல், மூலதனச் சந்தையில் உள்ள போக்குகளுக்கான உணர்திறன் மற்றும் குறுகிய கால நிதி இலாபங்களைப் பெற்றுக்கொள்ளல் எனும் மூலோபாய அணுகுமுறைகளின் நேர்மறையான தாக்கத்தை அடையாளம் காண முடியும்.

2024 ஆம் ஆண்டின் பொருளாதார செயல்திறனைப் அவதானிக்கும் போது, 2023 ஆம் ஆண்டில் வங்கி வட்டி விகிதங்கள் 14.5 இலிருந்து 10.0 ஆகவும், திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி விகிதங்கள் (91 நாட்கள்) 14.51% இலிருந்து 8.2% ஆகவும், 364 நாள் உண்டியல்களுக்கான வட்டி விகிதங்கள் 12.93% இலிருந்து 8.96% ஆகவும் குறைந்துள்ளன. மேலும் இவற்றின் பெறுபேறுகள் சபையின் நிதியத்தை நேரடியாகப் பாதித்தன. இருப்பினும், மூலதனச் சந்தையில் ஏற்பட்ட விரிவாக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டில் மூலதனச் சந்தை மூலம் ரூ.3.5 பில்லியனை நிதியத்திற்கு சேர்க்க முடிந்தது. அதற்கமைய, சபையின் நிகர சொத்துக்கள் ரூ.518.8 பில்லியனில் இருந்து ரூ.585.9 பில்லியனாக 12.9% வளர்ச்சியடைந்தது. நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு உணர்திறன் இருந்தபோதிலும், சபையினால் நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய முடிந்தது என்பதை இந்தத் தரவுகள் காட்டுகின்றன. அது ஒருபுறம், சபை நிறுவப்பட்ட முதன்மை நோக்கமான நாட்டின் உழைக்கும் சமூகத்தின் சமூகப் பாதுகாப்பு வலை வலுவாக இருப்பதை உறுதி செய்வதற்கான சபையின் பங்களிப்பாகும்,

### அங்கத்துவ நலன்களை உறுதிப்படுத்தல்

மதிப்பீடு செய்யப்பட்டதற்கு அமைய, 2023 ஆம் ஆண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அனைத்து உறுப்பினர்களுக்கும் 10% வட்டி மற்றும் பங்கிலாபத் தொகை சதவீதத்தை சபையினால் செலுத்த முடிந்தது. அதன் உறுப்பினர்களுக்கு சட்டரீதியான சலுகைகள் மற்றும் பல நலத்திட்டங்களை வழங்கும் ஒரு சிறப்பு நிதியாக, 2024 ஆம் ஆண்டில், பொது கணக்கு மீதிகளின் விநியோகத்தின் கீழ் 193024 உறுப்பினர்களுக்கு ரூ.33.4 பில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிதியின் மீதான உறுப்பினர்களின் நம்பிக்கை சபையினால் வலுப்படுத்தப்படுகின்றது.

மேலும், தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு ரூ.453 மில்லியன் நலத்திட்டங்களை விநியோகிப்பதன் மூலம், உறுப்பினர்களின் சுகாதாரத் தேவைகளுக்கும், அவர்களது குடும்பங்களின் பிள்ளைகளினது கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் தேவைகளுக்கும் அவர்களின் உறுப்பினர் கணக்குகளில் உள்ள மீதியைப் பாதிக்காமல் பங்களிப்புச் செய்வதற்கு சபையால் இயலுமாகியது. இதன் மூலம் அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சபையின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

### நிர்வகிக்கப்படும் கம்பனியின் செயலாற்றுகை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் துணை நிறுவனமான லங்கா உப்பு நிறுவனம், 2024 ஆம் ஆண்டில் ரூ.536 மில்லியன் பங்கிலாபத் தொகையைப் பெற்றது. இது மொத்த நிதியின் விரிவாக்கத்திற்கு சாதகமாக பங்களித்தது. 1997 ஆம் ஆண்டில், ரூ.452.8 மில்லியனை முதலீடு செய்வதன் மூலம் மொத்த பங்குகளில் 90% ஐ கையகப்படுத்தியதால் சபையின் சொத்தாக மாறிய இந்த துணை நிறுவனத்தில் செய்யப்பட்ட முதலீடு இப்போது முழுமையாக ஈடுசெய்யப்பட்டுள்ளது. மேலும் அது இப்போது சபையின் ஒரு நிகர சொத்தாக மாற்றமடைந்துள்ளது.

### புதிய அரசாங்கத்தின் டிஜிட்டல்மயமாக்கல் கொள்கையுடன் இணங்கிச்செல்லல்.

சபையின் நலன் கொடுப்பனவுகள், பொது நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் போன்றவை பல்வேறு மென்பொருள் மற்றும் அமைப்புகள் மூலம் கணிசமான காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைந்த கணினி அமைப்பு (Core System) மூலம் செயல்படுத்த வேண்டியதன் காரணமாக, பல ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கணினி அமைப்பு அபிவிருத்தித் திட்டம், அதன் எதிர்பார்க்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விரும்பிய இலக்குகளை அடைய முடியவில்லை. அதற்கமைய, இந்த அமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கும், அமைப்பைச் செயற்படுத்துவதற்கு நிறைவுசெய்யப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கும் இடையிலான இடைவெளி குறித்து நடைமுறைச் செயற்பாடுகள் மூலம் புரிதலைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் நிகழ்ச்சித்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தேவை மற்றும் சாத்தியக்கூறுகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

எனினும், புதிய அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கைக்கு ஏற்ப உறுப்பினர்களுக்கு நிறுவனத்தின் சேவைகளை வழங்க வேண்டியதன் அவசியத்தை சபை அடையாளம் கண்டுள்ளது. மேலும் இது ஒரு முன்னுரிமைப் பணியாகவும் கருதப்படுகின்றது. எனவே, திட்டத்தின் எதிர்கால செயற்பாடுகளை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவுசெய்வதற்கும், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அதன் சேவை நலன்களை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### மனித மூலதனம்

ஒரு நிறுவனத்தில் கிடைக்கும் மனித வளங்கள், அந்த நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளின் குறுகிய கால மற்றும் நீண்டகால திசையை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். மனித வளங்கள், பணிப்பாளர்கள் சபையினால் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளும், அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள், கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கும் ஏற்ப செயல்பட வேண்டும் என்றும், அவர்களின் படைப்பாற்றல் திறன்களை வளர்த்து, அந்த முன்னேற்றங்களை சேவைகளை வழங்குவதில் பயன்படுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக, அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவது ஒரு அத்தியாவசிய காரணியாகும். மேலும் சேவை வழங்கலின் தன்மை மற்றும் வினைத்திறன் என்பன அதன் மூலம் தீர்மானிக்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை விட பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும், உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சேவை சிறப்பாக உள்ளதாக பல்வேறு வெளிப்புற கருத்துக்கள் தெரிவிக்கின்றன. இன்னும் சிறந்த சேவையை வழங்குவதற்காக, தற்போதுள்ள ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும், தற்போது வெற்றிடமாக உள்ள அத்தியாவசிய பதவிகளை நிரப்புவதற்கு அதிகாரிகளை நியமிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, மனிதவளத் துறையில் சபை எதிர்கொள்ளும் சவால், தற்போதுள்ள சம்பள அளவுகளின் எல்லைகள் மற்றும் சில அத்தியாவசிய பதவிகளுக்கு தகுதியான பணியாளர்களை ஈர்ப்பதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் உள்ள சில நிபந்தனைகள் ஆகும். வெளிவாரி ஊழியர் சந்தையில் திறமையான மனித வளங்கள் இருந்த போதிலும், அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் அத்தகைய நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அமைப்பு மற்றும் சேவை நிலைமைகளுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட ஏற்றத்தாழ்வு இருப்பது அவதானிக்கப்படுகின்றது. அனைத்து சட்டப்பூர்வ நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடிய தேசிய கொள்கைகளுக்கு ஏற்ப சீரான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தாலும், அத்தகைய நிலைமைகள் சில நிறுவனங்களில் குறிப்பிட்ட பதவிகளுக்கு அதிகாரிகளை ஈர்ப்பதை எதிர்மறையாகப் பாதிக்கும் என்பதாலும் இது மிகவும் சவாலான சூழ்நிலையாகும். அதற்கமைய, மிகவும் நடைமுறைச் சூழ்நிலை என்னவென்றால், தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் ஈர்க்கக்கூடிய மனித வளங்களை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலமும், அவர்களுக்கு அதிக பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும் மனித வளங்களை மேம்படுத்த முடியும். இதற்காக, ஒரு குறிப்பிட்ட பயிற்சித் திட்டம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்படுகின்றது. மேலும் 2024 ஆம் ஆண்டில் பயிற்சித் திட்டத்தை செயற்படுத்த முடியும் என்பது ஒரு நேர்மறையான சூழ்நிலையாகும்.

மனிதவள அபிவிருத்தியைப் பாதிக்கும் மற்றொரு முக்கிய காரணி, உள்நாட்டில் நிலவும் உள்ளக கலாச்சார நிலைமைகள் ஆகும். வருடாந்த இடமாற்றங்களை முறையாக செயற்படுத்தாத காரணத்தினால், சில அதிகாரிகள் ஒரே பிரிவில் நீண்ட காலமாக பணியாற்றுவதால் அது சில உளவியல் நிலைமைகளுக்கு வழிவகுக்கும். எனவே, இது உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு விடயம் என்பது அவதானிக்கப்படுகின்றது.

அரசாங்க நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் நிறுவனங்கள் பராமரிக்கும் அறிக்கையிடல்

மற்றும் வெளிப்படுத்தல்களில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமூகப் பொறுப்பு மற்றும் பெருநிறுவன ஆளுகை ஆகியவற்றின் தரங்களை அளவிடுவதற்காக, இலங்கை பொது நிதிக் கணக்காளர்கள் சங்கம் (APFASL) ஏற்பாடு செய்த 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த வருடாந்த அறிக்கை விருதுகள் போட்டியில், ஒட்டுமொத்த அரசதுறை நிறுவனங்கள் பிரிவில் வெள்ளி விருதை எமது சபை வென்றது. இது சபையின் மனிதவள அபிவிருத்தி நிலையை எடுத்துக்காட்டும் ஒரு விடயமாகக் கருத முடியும்.

## நிறுவனத்தின் எதிர்கால நோக்கு

நிறுவனத்தின் மூலோபாயத் திட்டம், மிகவும் பகுத்தறிவு அடிப்படையில் மறுபரிசீலனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் நிறுவனத்தின் நீண்டகால இலக்குகள் குறித்து விசேட கவனம் செலுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் உத்தியோகத்தர்களின் செயல்திறனை உறுதி செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய செயல்திறன் குறிகாட்டிகளை உருவாக்குதும், அதற்கு ஏற்ற வகையில் ஊழியர்களை மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும். உள்ளக நிர்வாகத்தை பாதிக்கும் சட்டக் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்து இற்றைப்படுத்தல் மற்றும் நிறுவனத்திற்குள் அந்தச் சட்டக் கட்டமைப்பு எந்த சார்பும் இல்லாமல் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கணினி அமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை முறையான திட்ட முகாமைத்துவ முறைகளின் கீழ் செயற்படுத்துவதற்கும், விரும்பிய நோக்கங்களை மிக விரைவாக அடைவதற்கும், அதை நாளாந்த சேவை வழங்கும் செயற்பாட்டில் ஒருங்கிணைப்பதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு இணையாக, அனைத்து உறுப்பினர் சேவைகளையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து சேவை மையத்தை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருகைத்தரும் உறுப்பினர்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க சேவை வழங்கலை உறுதி செய்ய முடியும்.

நிறுவனத்திற்குள் நீண்டகாலமாக நிலவும் சம்பள முரண்பாடுகளை பல்வேறு தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ள நிலையில், இந்த சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. முறையான ஆய்வுக்குப் பின்னர் நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை கவனம் செலுத்தி வருகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக அரச நிறுவனங்களில் வெற்றிடங்களை நிரப்பும் செயற்பாட்டில் காணப்பட்ட வரையறைகள் காரணமாக, கணிசமான எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் உள்ளன. மேலும் அந்தப் பதவிகளுக்கு பொருத்தமான அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது சேவை வழங்கல் செயற்பாட்டில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள இடைவெளிகளைக் குறைக்க உதவும்.

அதற்கிணங்க, தற்போதுள்ள மனித வளங்களை திறம்பட பயன்படுத்தல், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல், சமத்துவத்தை உறுதி செய்தல் மற்றும் வலுவான சட்ட கட்டமைப்பை நிறுவுதல் ஆகியவற்றின் மூலம் உகந்த சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதன் மூலம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை நிறுவப்பட்டதற்கான பரந்த நோக்கத்தை அடைவதில் விசேட கவனத்தை செலுத்துவது சபையின் பொறுப்பு என நாம் கருதுகின்றோம்.

## ஞாபகமூட்டல்

சட்டப்பூர்வ மற்றும் சட்டமுறையான கடமையாகக் கருதாமல் சமூகக் கடமையாகவும் பொறுப்பாகவும் கருதி ஊழியர்களின் சார்பாக செலுத்த வேண்டிய பங்களிப்புகளை செலுத்துவதிலும் உறுப்பினர் கணக்குகளின் துல்லியத்தை உறுதி செய்வதிலும் எமது சபையுடன் கைகோர்த்து இந்த நிதியின் உறுதிப்பாட்டுக்காக செயற்படும் தொழில் வழங்குநர் சமூகத்தின் பங்களிப்பு மகத்தானது. சுமார் 2.6 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட நிதியத்தின் உறுப்பினர் சமூகம் எமது சபையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்களது உரிமைகள் சபையினால் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை என்மை எப்போதும் ஊக்குவிக்கின்றது.

நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ள ஊழியர்கள் தங்கள் பொறுப்புகளை சரியாகப் புரிந்துகொண்டு சேவை வழங்கலில் ஈடுபட்டுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இது மற்ற ஒத்த நிறுவனங்களை விட சிறந்த நிறுவனமாக இருப்பதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கியுள்ளது. இந்த நிதியத்தின் உறுப்பினர்களாகவும், நிதியத்தின் நலனுக்காகவும் தங்கள் கடமைகளை தவறாமல் நிறைவேற்றும் ஒரு ஆளணி இருப்பது நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு பேருதவியாக உள்ளது.

நிறுவனத்தின் விடயப் பரப்பு உரித்தாகும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர், செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளும், நமது நிறுவன நிர்வாகத்தை சரியாகவும் முறையாகவும் மேற்கொள்வதற்கு வழங்கிய வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மிகவும் நேர்மறையானவை. மேலும் 2024 ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்கும் இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் எமது நன்றியின் பங்காளிகளாக உள்ளனர்.

இறுதியாக, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பையும் பொதுமக்களின் விருப்பங்களையும் முழுமையாகப் புரிந்துகொண்டு, நிறுவனத்தின் விவகாரங்களை சரியான திசையில் வழிநடத்த தங்களது அறிவுசார் மற்றும் ஆக்கப்பூர்வமான பங்களிப்புகளை முனைப்புடன் வழங்கி வருகின்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபையின் பணிப்பாளர் சபைக்கு எனது மரியாதையையும் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**சோமசிறி ஏக்கநாயக்க**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி



# முகாமைத்துவ
# கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

**வருடாந்த மீளாய்வு : 2024**

இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடிக்குப் பின்னர் நிலைப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்து நேர்மறையான முடிவுகளைக் காட்டுவதற்கு ஆரம்பித்தது. 2024 ஆம் ஆண்டில் படிப்படியாக வலுவான மீட்சியை நோக்கி அது நகர்ந்தது. 2024 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை நடத்துதல், இலங்கை மத்திய வங்கியால் ஒற்றை இலக்க வட்டி விகிதத்தை அறிமுகப்படுத்தப்படல் மற்றும் 2024 டிசம்பர் மாதத்தில் பிட்ச் மதிப்பீடுகளால் (Fitch Ratings) நாட்டின் செயல்படாத கடன் மதிப்பீட்டை வரையறுக்கப்பட்ட இயல்புநிலை (RD) மதிப்பீட்டிலிருந்து (CCC+) மதிப்பீட்டிற்கு மேம்படுத்தல் போன்ற முக்கியமான மைல்கற்கள், இலங்கையின் பொருளாதாரத்தில் முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தன.

நிதிக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்து, அதன் நெகிழ்வான பணவீக்க இலக்கு, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. கடந்த ஆண்டை விட வலுவான செயல்திறனை அது காட்டியது. இலங்கைப் பொருளாதாரத்தில் பணப்புழக்க நிலை அதிகரித்தது. மேலும் நெகிழ்வான பணவீக்க விகிதக் கொள்கையின் கீழ், இலங்கை ரூபாய் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தொடர்ந்து உயர்ந்தது. 2024 ஆம் ஆண்டில் ஆரம்ப கணக்கு மீதி மிகையாக பதிவு செய்யப்பட்டது. இது பொது நிதிக்கு ஒரு நேர்மறையான அறிகுறியாகும். 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து செயல்படுத்தப்பட்ட நிதிக் கொள்கை சரிசெய்தல் நடவடிக்கைகள் மிகவும் நிலையான பொருளாதார சூழலை உருவாக்கியுள்ளன. இது நிலையான பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுத்தது. எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, 2023 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வரும் பணவாட்டப் போக்கு, வாழ்க்கைச் செலவு மற்றும் உற்பத்திச் செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்துள்ளது. இது ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சவாலான உலகளாவிய சூழல் இருந்தபோதிலும், பொருளாதாரத்தின் வெளித் துறை உயர் மட்ட நிலைத்தன்மையைக் காட்டியது. பொருளாதார நெருக்கடியின் அழுத்தங்களிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளில், இலங்கை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் (IMF-EFF) திட்டத்தையும் கடன் மறுசீரமைப்பையும் வெற்றிகரமாக செயல்படுத்தின. IMF-EFF திட்டத்தின் மூன்றாவது தவணையைப் பெறுவதில் அரசாங்கத்தின் வலுவான செயல்திறனின் அடிப்படையில் மிகவும் நேர்மறையானதாக காணப்பட்டது. இதன் விளைவாக 2024 டிசம்பர் மாதத்தில் முடிவடைந்த

ஆண்டிற்கான அனைத்து அளவுசார் இலக்குகளும் அடையப்பட்டன.

### 2024 ஆம் ஆண்டில் பொருளாதார பணவீக்கம்

2024 செப்டம்பர் மாதம் முதல், பொருளாதாரத்தில் பணவீக்கம் பணவாட்டக் கட்டத்தில் நுழைந்தது. அது ஆண்டின் மீதமுள்ள மாதங்களில் மேலும் தீவிரமடைந்து. 2024 டிசம்பர் இறுதிக்குள் -1.7% பணவாட்டக் கட்டத்தை எட்டியது. இருப்பினும், பெறுமதி சேர் வரி (VAT) அதிகரிப்பு, VAT விலக்களிப்பிலிருந்து பல செலவினப் பொருட்கள் நீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் பணவீக்கத்தில் ஏற்பட்ட சிறிய அதிகரிப்பை பிரதிபலித்தது. 2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் ஏற்பட்ட பணவீக்க அதிகரிப்பு, 2024 மார்ச் மாதத்தில் செய்யப்பட்ட மின்சாரக் கட்டணக் குறைப்பால் மேலும் தணிந்தது.

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் (ஆண்டு சதவீதப் புள்ளிகள்)**




*மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

### சந்தை வட்டி வீதம்

2023 ஜூன் முதல் செயல்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த பணவியல் கொள்கை நடவடிக்கைகள் 2024 முழுவதும் சந்தை வட்டி விகிதங்களில் வீச்சிப் போக்கிற்கு பங்களித்தன. 2024 நவம்பர் மாதம் முதல் இரட்டைக் கொள்கை வட்டி விகித முறையிலிருந்து ஒற்றை இலக்கக் கொள்கை விகித முறைக்கு மாறுவதற்கான சிறந்த கொள்கை முடிவும் சந்தை வட்டி விகிதங்களில் மேலும் வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. ஆண்டு முழுவதும், சராசரி எடையிடப்பட்ட அழைப்புப் பண விகிதம் (AWCMR) பணவியல் கொள்கை முடிவுகளை மேலும் தளர்த்துதல், உள்நாட்டு பணச் சந்தையில் மேம்பட்ட பணப்புழக்க நிலைமை காரணமாக அது கீழ்நோக்கிய போக்கில் காணப்பட்டது. இதன் விளைவாக, அரசாங்க பிணையப் பத்திரங்களின் மீதான உழைப்பின் பயன்பாட்டு வீதம் அதிகரிக்கும் போக்கு மந்தமான நிலையில் காணப்பட்டது.

சராசரி பாரமில் வைப்பு விகிதம் (AWDR) மற்றும் சராசரி பாரமில் நிலையான வைப்பு விகிதம் (AWFDR) எழுமாற்றாக 4.1% இலிருந்து 5.6% ஆகக் குறைந்த காரணத்தினால் 2024 ஆம் ஆண்டில், உரிமம் பெற்ற வணிக வங்கிகள் (LCBs) ரூபாய் அடிப்படையில் வட்டி தாங்கும் வைப்புத்தொகைகளுக்கான வட்டி விகிதங்களில் குறிப்பிடத்தக்க குறைப்பை அனுபவித்தன. மேலும், 2024 ஜனவரி முதல் 2024 டிசம்பர் வரை, ஒரு வருட திறைசேரி உண்டியல் வட்டி விகிதம் முறையே 12.93% இலிருந்து 8.96% ஆகக் குறைந்தது. ஒட்டுமொத்தமாக, இந்தக் கொள்கை நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் நிதியத்தின் வட்டி வருமானத்தைக் குறைப்பதற்கு பங்களித்தன.

இந்த நிகழ்வுகளின் சங்கிலித் தொடரில் மேம்பட்ட பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பதிலளிக்கும் விதமாக வட்டி விகிதங்களை இயல்பாக்குவதை நோக்கி படிப்படியாக மாறுவதைக் குறிக்கின்றது. அதே நேரத்தில் தனியார் துறை கடன் வளர்ச்சிக்கு சாதகமான சூழலைப் பேணுகின்றது.

**கொள்கை வட்டி விகிதங்கள்**




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*







*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

# முதலீடு

### முதலீடு பற்றிய நிகர பகுப்பாய்வு : 2024

2024 ஆம் ஆண்டில், முதலீட்டு நடவடிக்கைகள் சவாலான சந்தை நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இதில் கடன் மறுசீரமைப்பு, பொருளாதார மீட்சி செயல்முறை தொடர்பாக இலங்கை மத்திய வங்கி எடுத்த கொள்கை முடிவுகள் மற்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னைய ஆண்டின் முதல் அரையாண்டில் அரசியல் நிச்சயமற்ற தன்மை என்பன அடங்கும். முதலீட்டுக் கொள்கையால் வழிநடத்தப்பட்டு, சபை அதன் முதலீடுகளின் பாதுகாப்பின் முக்கிய நோக்கத்திற்கு ஏற்ப, மிகவும் பாதுகாப்பான வைப்புத்தொகைகளில் கணிசமாக முதலீடு செய்யும் நோக்கத்துடன் அதன் சொத்து ஒதுக்கீட்டை முன்னுரிமைப்படுத்தியது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தற்போதைய பொருளாதார சீர்திருத்த செயல்முறையின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்படும் கொள்கை தளர்வு நடவடிக்கைகளால் அதிகரித்த சந்தை வட்டி விகிதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிப் போக்கு, சபையின் நிலையான வருமான பத்திர முதலீட்டு விடயத்துடன் தொடர்புடைய வருவாயை மோசமாக பாதித்தது. 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அரசாங்க மற்றும் நிறுவன கடன் கருவிகள் மூலம் வருவாயை நேரடியாகப் பாதித்த பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டுவதற்காக அறிமுகம் செய்யப்பட்ட எதிர்பாராத ஒரே இரவில் உயர்த்தப்பட்ட வட்டி கொள்கை விகிதங்கள் பரவலாக நிராகரிக்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டில் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை எச்சரிக்கையான அணுகுமுறையைப் பின்பற்றியது. பங்குச் சந்தையின் விதிவிலக்கான நேர்மறையான செயல்திறன் காலத்தில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை வருமானத்தை ஈட்டுவதில் குறிப்பாக சுறுசுறுப்பாக இருந்தது. ஒட்டுமொத்தமாக, 2024 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட வருமானமான ரூ. 61.9 பில்லியனுக்கு பதிலாக மொத்த வருமானம் ரூ.65.87 பில்லியனை சபையினால் ஈட்ட முடிந்தது. அதற்கமைய, அனைத்து சவால்களுக்கும் மத்தியிலும், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அதன் உறுப்பினர்களுக்கு 10% மொத்த வருமான நலன்களை வழங்குவதை அறிவிக்க முடிந்தது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மொத்த முதலீட்டுப் பிரிவு 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.581 பில்லியனாக அதிகரித்தது. இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 515 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 12.78% அதிகரிப்பாகும். மேலும், 2023 ஆம் ஆண்டில் ரூ.1.8 பில்லியனாக இருந்த பங்கு வருமானம் 2024 ஆம் ஆண்டில் ரூ.2.8 பில்லியனாக அதிகரித்து. இது 56% வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது பன்முகப்படுத்தப்பட்ட துறைகளைக் கொண்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பங்கு முதலீட்டு பிரிவின் விசேட செயலாற்றுகையின் பிரதிபலிப்பாகும்.

## 2024.12.31 ஆம் திகதிக்கு முதலீட்டுத் தொகுப்பின் விரிவாக்கம் மற்றும் அமைப்பு

2024.12.31ஆம் திகதிக்கு முதலீட்டுத் தொகுப்பின் விரிவாக்கம்




2024.12.31 ஆம் திகதிக்கு முதலீட்டுப் பிரிவின் அமைப்பு




## நிலையான வருமானப் பத்திரங்களில் முதலீடு

2024 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிலையான வருமானப் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீடுகள், ரூ.562.3 பில்லியனாக காணப்பட்டன. இது அதன் மொத்த முதலீட்டுத் தொகுப்பில் 96.76% ஆகும். இதில் 95% அரசாங்க திறைசேரிப் பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. 2023 ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டில் சந்தை வட்டி விகிதங்கள் கணிசமாகக் குறைந்துள்ளன. பல்வேறு காலகட்டங்களில் அரசாங்க திறைசேரி பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் நிதியை முதலீடு செய்வதன் மூலம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் அதன் உறுப்பினர்களின் நிதியங்களுக்கு நிலையான சராசரி வருமானத்தை பராமரிக்க முடிந்தது.

2024 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நிலையான வருமானப் பத்திரங்களில் மொத்தமாக ரூ.62 பில்லியன் வருமானத்தை ஈட்ட முடிந்தது, இது 2023 உடன் ஒப்பிடும்போது 3.2% இன் சிறிய குறைவாகக் கருதப்படுகின்றது. நாட்டின் பொருளாதார மீட்சி செயல்முறையை நிலைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட சீரமைப்பு நடவடிக்கைகளின் தாக்கமே இந்தக் குறைவுக்கு முக்கிய காரணமாகும்.




## பங்கு முதலீடு

2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், அரசாங்கம் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று வலுவான ஆட்சியைப் பெற்ற பின்னணியில், 2024 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிதி நடவடிக்கைகளில் அதிக வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்த மேம்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு மத்தியில், இலங்கை பங்குச் சந்தை கவர்ச்சிகரமான அதிகரிப்பை பதிவு செய்தது. மேலும், இலங்கை மத்திய வங்கி ஒற்றை இலக்க கொள்கை வட்டி விகித ஆட்சிக்கு மாறி வருகின்றது. மேலும் பொருளாதாரத்தின் மீட்சியை ஆதரிப்பதற்கும் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் அதன் பணவியல் கொள்கை விகிதத்தை 8% இல் பராமரித்து வருகின்றது. இந்த நடவடிக்கை நிதிச் சந்தை நம்பிக்கை மற்றும் ஸ்திரத்தன்மையை வளர்ப்பதிலும், வங்கித் துறையில் முதலீட்டாளர் நம்பிக்கையை அதிகரிப்பதிலும் ஒரு வலுவான காரணியாக இருந்து வருகின்றது. அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (ASPI) 2024 இல் எழுமாற்றாக 49% வளர்ச்சியடைந்து, 2024 டிசம்பர் மாதத்தில் 15,944 புள்ளிகளை தாண்டியது. இது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 10,654 புள்ளிகளுடன் ஒப்பிடும்போது. 2023 நிதியாண்டில் சராசரி நாளாந்த வருமானம் ரூ.1,696 மில்லியனாக அதிகரித்தது. 2024 நிதியாண்டில் 2,240 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது சந்தை செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கின்றது.

2024 ஆம் ஆண்டின் இறுதியில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் மொத்த நிதியில் 2.31% பங்கு முதலீட்டை பராமரிக்க முடிந்தது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள பல நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டு, அவற்றின் பாரிய பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கும் நிலைமைகள் இருந்தபோதிலும், அவற்றின் வணிக நடவடிக்கைகள் அதிகரித்தன. இதன் விளைவாக, பல நிறுவனங்கள் 2024 நிதியாண்டிற்கான பங்கிலாபத் தொகையை அறிவிக்க முடிந்தது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2024 நிதியாண்டிற்கான அதன் பங்கிலாபத் தொகை முதலீட்டுப் பிரிவில் ரூ.2,427 மில்லியன் பங்கிலாபத் தொகை மற்றும் மூலதன ஆதாயங்களை ஈட்ட முடிந்தது. இது 2023 ஆம் ஆண்டை விட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்தது. மேலும், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட அனைத்து பங்கு விலை குறியீட்டு பெறுமதிகளின் சாதகமான செயல்திறன் காரணமாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்கு முதலீட்டுப் பிரிவு ரூ.4.8 பில்லியனால் அதிகரித்துள்ளது.




## எதிர்கால நோக்கு

2024 ஆம் ஆண்டளவில், கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்த இலங்கையின் பொருளாதாரம், மீட்சிக்கான அறிகுறிகளைக் காட்டியது, 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 5% வளர்ச்சியை எட்டியது. இது தொழில்நுட்பத்துறை துறையில், குறிப்பாக கட்டுமானம் மற்றும் உணவுபான உற்பத்தியில் ஏற்பட்ட மீட்சி மற்றும் சுற்றுலா தொடர்பான சேவைகளில் வலுவான செயல்திறன் ஆகியவற்றால் உந்தப்பட்டது.

வட்டி விகிதங்களின் தாராளமயமாக்கலின் கீழ் எதிர்பார்க்கப்படும் ஆரோக்கியமான தனியார் துறை கடன் வளர்ச்சியுடன் பணவியல் கொள்கை இணக்கமாக காணப்பட்டது. வெளிவாரித் துறையை எடுத்து நோக்கினால் 2025 ஆம் ஆண்டில் ஓரளவு நடைமுறைக் கணக்கு மிகையை நிர்வகிக்கக்கூடிய சுற்றுலா சேவைகள், பணம் அனுப்புதல் மற்றும் சேவை ஏற்றுமதிகள் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட போதிலும், வர்த்தகப் பற்றாக்குறை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது, எதிரகாலத்தை நோக்குகையில், வெளிப்புறக் கணக்கு நிர்வகிக்கக்கூடிய பற்றாக்குறைக்கு மாறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதே நேரத்தில் நிதிக் கணக்கு கடன் நிலைத்தன்மை மற்றும் IMF-EFF திட்டத்தின் தொடர்ச்சியான செயல்படுத்தலால் ஆதரிக்கப்படும் நிகர வரவுகளைப் பதிவு செய்யும். இலங்கை மத்திய வங்கி நெகிழ்வான மாற்று விகிதங்களைப் பராமரிக்கும் அதே வேளையில் வெளிநாட்டு இருப்புக்களை தொடர்ந்து உருவாக்கும். நிதிச் செயல்திறன் வலுவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது புதிய சட்டம் மற்றும் தொடர்ச்சியான மேம்பாடுகளால் ஆதரிக்கப்படுகின்றது. நிதித்துறை ஸ்திரத்தன்மை மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, சிறந்த கடன் திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் ஒழுங்குமுறை மேம்பாடுகள் மீள்தன்மையை உறுதி செய்கின்றன. கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டம் நடுத்தர கால பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்கான முக்கிய காரணிகளாக செயல்படும்.

கடன் மறுசீரமைப்புக்குப் பின்னைய சகாப்தத்திலும், தற்போதைய பொருளாதார மீட்சி செயல்முறையிலும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் உறுப்பினர்களுக்கு ஒரு முன்னோடிப் பணிகளாக 'நிபுணதா சவிய' மற்றும் 'விஸ்வ யாத்ரா' போன்ற புதிய நன்மைத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வருடாந்த உறுப்பினர் சலுகைகளை வழங்குவதற்கு அப்பால் அதன் தரமான சேவைகளை மேம்படுத்தியுள்ளது. அதற்கு இணைவாக, ஏற்புடைய அபாயங்களைத் திறம்படக் குறைத்து, வருமானத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், அதன் முதலீட்டுத் தொகுப்பை பல்வகைப்படுத்த நிறுவனத் துறையில் வாய்ப்புகளை அடையாளம் காண்பதில் சபை விழிப்புடன் உள்ளது. எதிர்காலத்தை நோக்கி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைக்குரிய முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறியும் ஆர்வத்துடன், நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் நீண்டகால நிலைத்தன்மையுடன் கைகோர்த்துச் செயல்படும் அதே வேளையில், நேர்மறையான கண்ணோட்டத்துடன் தொடர்ந்தும் செயற்படுகின்றது.

# பங்களிப்புத் தொகை அறவீடு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அறவீடு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரிவு, தொழில் வழங்குநர்களிடமிருந்து அறவிட வேண்டிய பங்களிப்புத் தொகைகளை சரியான நேரத்தில் அறவிடுவதற்கும், தாமதமான பங்களிப்புகளுக்கு மேலதிகக் கட்டணம் அறவிடுவதற்கும் பொறுப்பாக உள்ளது. செலுத்தப்படும் பங்களிப்புத் தொகைகள் துல்லியமாகக் கணக்கிடப்பட்டு அறிக்கை செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக, சம்பந்தப்பட்ட முக்கிய பங்குதாரர்களான தொழில் வழங்குநர்கள், வங்கி நிறுவனங்கள் மற்றும் தபால் திணைக்களத்துடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

மேலும், இந்தப் பிரிவு புதிய தொழில் வழங்குநர்களைக் கண்டறிந்து இந்த நிதியின் கீழ் அவர்களைப் பதிவு செய்யும் பணிகளையும் மேற்கொள்கின்றது. தற்போதுள்ள அமைப்பின் கீழ், தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவு, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே தொழில் வழங்குநர் எண்ணின் கீழ் தொழல் வழங்குநர்களைப் பதிவு செய்கின்றது மற்றும் ஒரு எளிய விண்ணப்பத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொழில் வழங்குநர் கணக்குகளைத் தயாரிக்கின்றது. அதற்கமைய, சபை நேரடியாக தொழில் வழங்குநர்களைப் பதிவு செய்வதில்லை. மேலும், பிராந்திய அலுவலகங்களால் நடத்தப்படும் கள ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், தொழில் வழங்குநர்களின் கோரிக்கைகளின் அடிப்படையிலும் புதிய தொழில் வழங்குநர் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தப் பிரிவு தொழில் வழங்குநர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உறுப்பான்மையை ஊக்குவிப்பதற்கும் செயல்படுகின்றது.

அதற்கமைய, சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரிவு, நிர்ணயிக்கப்பட்ட செயல்திறன் இலக்குகளை அடைவதற்கு சபையின் பிராந்திய அலுவலக வலையமைப்புடன் இணைந்து செயல்படுகின்றது.

| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| செயலிலுள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை | 75,731 | 69,094 | 64,026 | 75,485 | 79,895 |
| செயலூக்கமுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 2,680,000 | 2,430,091 | 2,455,609 | 2,592,923 | 2,548,200 |
| சுயதொழிலில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 41,867 | 41,517 | 41,113 | 43,640 | 44,494 |
| புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கை | 220 | 228 | 241 | 274 | 291 |

## தனது ஊழியர்களுக்கு பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டிய தொழில் வழங்குநர்கள்

நிரந்தர ஓய்வூதியத்திற்கு தகுதியற்ற அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள ஊழியர்கள் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சட்டத்தின்படி சட்டப்பூர்வ அடிப்படையில் நிதியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர், மேலும் வெளிநாடுகளில் பணிபுரியும் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் தங்கள் சொந்த முயற்சியில் நிதியத்தில் உறுப்பினராவதற்கு விண்ணப்பிக்க முடியும்.

அதற்கமைய, இந்த நிதியம் இலங்கையில் நிரந்தர ஓய்வூதியத்திற்கு தகுதியற்ற அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய ஓய்வூதியம் மற்றும் பிற நலன்புரி சலுகைகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது சம்பந்தமாக, தொழில் வழங்குநர்கள் தங்கள் நிரந்தர ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல், சாதாரண மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கும், தினசரி அல்லது துண்டு வீத அடிப்படையில் ஊதியம் பெறும் ஊழியர்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புகளை செலுத்த வேண்டும். இருப்பினும், தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களின்படி பதிவுசெய்யப்பட்ட தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கைக்கும் அவர்களின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இந்த நிதியத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக, சபை ஏற்புடைய நிறுவனங்களிலிருந்து புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெற்று, அந்தத் தகவலின் அடிப்படையில் கள விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

சபையினால் வழங்கப்படும் ஓய்வூதிய சலுகைகளுக்கு மேலதிகமாக வழங்கப்படும் நலன்கள் தொழில் வழங்குநர்களினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தொடர்ந்து பங்களிப்புகளைச் செலுத்தும் உறுப்பினர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றன. எனவே, உறுப்பினர்கள் சலுகைகளைப் பெறுவதற்காக, பங்களிப்புக்களை தாமதமின்றி தொழில் வழங்குநர்களினால் தொடர்ந்தும் செலுத்தப்படுகிறதா என்பதை எங்கள் உத்தியோகத்தர்கள் கண்காணித்து வருகின்றனர்.

## பிராந்திய அலுவலகங்கள் மூலம் பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புகளை செலுத்த வேண்டிய புதிய தொழில் வழங்குநர்களை அடையாளம் கண்டு பரிந்துரைப்பதற்கும், ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட தொழில் வழங்குநர்களால் பங்களிப்புகள் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் உள்ளடக்கியதாக நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 19 பிராந்திய அலுவலகங்கள், தொழில் வழங்குநர்களைக் கண்காணிக்க ஆண்டுதோறும் 40,000 முதல் 45,000 வரை கள ஆய்வுகளை நடத்தியுள்ளன. இவற்றில், சுமார் 70% பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதாகப் முறைப்பாடுகள் அளிக்கப்பட்ட நிறுவனங்களின் அடிப்படையில் நடத்தப்பட்டுள்ளன. கள ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்ட புதிய தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு சராசரியாக சுமார் 3,000 ஆகும்.

2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மொத்த கள ஆய்வுகளின் எண்ணிக்கை 27,940 மற்றும் பங்களிப்புகளை செலுத்தாதவர்களாகக் கண்டறியப்பட்ட தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கை 22,641 ஆகும். மேலும், கள விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையில், நிதியத்தில் பதிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 18,922 ஆகும்.

## பங்களிப்புத் தொகைகளை இணைய வழியில் செலுத்தும் முறை (Online)

நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் 2022.12.22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இல. 2311/39 இல் வெளியிடப்பட்ட கட்டளைகளின்படி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு நிதியை அனுப்பும்போது, 15 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்கள், 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் கணினி அமைப்பு அல்லது கைடயக்க இலத்திரனியல் சாதனம் மூலம் இணைய

வழிமுறையில் பங்களிப்புகளை அனுப்புதல் வேண்டும். அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகளில் 82மூ இணையவழி அமைப்பு மூலம் செய்யப்பட்டுள்ளன, இது மொத்த செயலில் உள்ள தொழில் வழங்குநர்களின் எண்ணிக்கையில் 19% ஆகும். அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்துவதற்கான தற்போதைய ஏற்பாடுகளின்படி, மேற்குறிப்பிடப்பட்ட உத்தரவின் பிரகாரம் பங்களிப்புகள் மற்றும் பணம் அனுப்பும் அறிவிப்புகளை இணைய வழியில் செலுத்துவதில் தொழில் வழங்குநர்களுக்கு மிகுந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது, மேலும் இது மிகவும் வசதியான மற்றும் பொருத்தமான முறையாக பரிந்துரைக்கப்படுகின்றது. ஏனெனில் இது ஒரே நேரத்தில் பணம் அனுப்பும் அறிவிப்புகள்/உறுப்பினர் தகவல்களை வழங்க அனுமதிக்கிறது. அதன்படி, 15 க்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களும் இந்த முறையைப் பயன்படுத்தி பங்களிப்புகள் மற்றும் பணம் அனுப்பும் அறிவிப்புகளை அனுப்ப ஊக்குவிக்கப்படுகின்றன.

அதற்கமைய, இந்த முறையின்படி பங்களிப்புகளை இதுவரை செலுத்தாத தொழில் வழங்குநர்களை அவ்வாறு செய்வதற்கு தூண்டுவது முன்னுரிமையாகக் கருதப்படுகின்றது.

பின்வரும் 2 முறைகளைப் பயன்படுத்தி (Online) முறை மூலம் பங்களிப்புகளை செலுத்துவதற்கான வசதிகள் தொழில் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1. **இலத்திரனியல் வங்கி முறைமை** (E-Bank/Online Banking)

   இணைய வழியில் இலத்திரனியல் வங்கி முறைமை (E-Bank/Online Banking) மூலம் பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு பின்வரும் வணிக வங்கிகள் மூலம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

   - இலங்கை வங்கி
   - மக்கள் வங்கி
   - கொமர்ஷல் வங்கி
   - சம்பத் வங்கி
   - செலான் வங்கி
   - நேஷன் ட்ரஸ்ட் வங்கி
   - டிஎப்சீசீ வங்கி
   - ஹற்றன் நெஷனல் வங்கி
   - தேசிய அபிவிருத்தி வங்கி

2. **நேரடியான வைப்பு** (Direct Debit)

   நேரடியான வைப்புக்கள் (Direct Debit) ஊடாக பங்களிப்புத் தொகைகளை எந்தவொரு வணிக வங்கி ஊடாகவும் செய்ய முடியும்.

   மேலே குறிப்பிடப்பட்ட இணைய வழிமுறைக்கு மேலதிகமாக, காசோலைகள், காசுக் கட்டளைகள் மற்றும் காசாக பாரம்பரிய முறைகள் மூலம் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகங்களுக்கு பணம் செலுத்த முடியும், ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையை செயல்படுத்தும் முயற்சியாக இந்த முறைகள் ஊக்கப்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக, இணைய வழியாக பணம் அனுப்புவதற்கு இணைய வழிமுறைகளைப் பயன்படுத்துவது செயல்முறையை எளிமையாகவும் வினைத்திறனாகவும் மாற்றும்.

அதற்கிணங்க, இணைய வழியில் மற்றும் பாரம்பரிய முறையில் பங்களிப்புத் தொகைகளை செலுத்தல் பற்றிய பகுப்பாய்வு

| # | செலுத்தும் முறை | 2023 | | | 2024 | | | வளர்ச்சி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொழில் வழங்குநர் எண்ணிக்கை (சாதாரண பெறுமானம்) | பெறுமதி (ரூபா.மில்) | % | தொழில் வழங்குநர் எண்ணிக்கை (சாதாரண பெறுமானம்) | பெறுமதி (ரூபா.மில்) | % | தொழில் வழங்குநர் எண்ணிக்கை (சாதாரண பெறுமானம்) | பெறுமதி (ரூபா.மில்) | % |
| **இணைய வழிமுறை (Online)** | | | | | | | | | | |
| 1 | இணைய வங்கி முறை | 9,396 | 27,925 | 74.56% | 10,618 | 32,227 | 76.65% | 1,222 | 4,302 | 15.40% |
| 2 | நேரடி வைப்புக்கள் | 191 | 1,853 | 4.95% | 209 | 2,273 | 5.41% | 18 | 419 | 22.62% |
| | மொத்தம் (1+2) | 9,587 | 29,778 | 79.51% | 10,827 | 34,500 | 82.05% | 1,240 | 4,721 | 15.85% |
| **பாரம்பரிய முறைகள்** | | | | | | | | | | |
| 3 | காசோலைகள் | 37,224 | 7,309 | 19.52% | 39,074 | 7,051 | 16.77% | 1,851 | -258 | -3.53% |
| 4 | காசுக் கட்டளைகள் | 2,510 | 71 | 0.19% | 2,767 | 86 | 0.20% | 258 | 15 | 20.66% |
| 5 | பணம் | 2,654 | 293 | 0.78% | 4,128 | 409 | 0.97% | 1,473 | 116 | 39.44% |
| | மொத்தம் (3+4+5) | 42,388 | 7,673 | 20.49% | 45,969 | 7,546 | 17.95% | 3,582 | -128 | -1.66% |
| **முழு மொத்தம்** | | **51,975** | **37,451** | **100.00%** | **56,796** | **42,046** | **100.00%** | **4,822** | **4,593** | **12.26%** |

# அங்கத்தவர் சேவைகள் பிரிவு

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முக்கிய நோக்கம், ஊழியர் உரிமைகள், ஊழியர் நலன் மற்றும் நிர்வாகத்தில் ஊழியர் பங்கேற்பை மேம்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களின் பொருளாதார ஜனநாயகத்தை மேம்படுத்துதல் என்பனவாகும். அங்கத்தவர் சேவைகள் பிரிவு 7 பிரிவுகளைக் கொண்டுள்ளது மற்றும் அவற்றின் முக்கிய செயற்பாடுகளாக அங்கத்தவர் கணக்குகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த கணக்கு அறிக்கைகளை வழங்குதல் மற்றும் அங்கத்தவர்களுக்கு சட்டரீதியான சலுகைகள் மற்றும் சட்டத்தால் குறிப்பிடப்படாத நலன்புரி சலுகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் என்பனவாகும்.




*Figure 1– Organization Structure of Member Service Division*

## அங்கத்தவர் உரிமைக் கொடுப்பனவுகள் (சட்டமுறையான நலன்கள்)

சட்டமுறையான சலுகைத் தொகையின் கீழ், ஒரு உறுப்பினர் தனது பணி நீக்கத்திற்குப் பிறகு அல்லது 60 வயது நிறைவடைந்தவுடன், பணி நீக்கத்திற்கு உட்பட்டு தனது கணக்கு இருப்பைத் திரும்பப் பெறலாம். மேலும் உறுப்பினர் இறந்தால், கணக்கு இருப்பு உறுப்பினரின் வாரிசுகள், பின்னுரித்தாளிகள் அல்லது பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்.

2023 ஆம் ஆண்டில், 240,888 உறுப்பினர்களுக்கு ரூ.38 பில்லியன் தொகை வழங்கப்பட்டது. மேலும் 2024 ஆம் ஆண்டின் இறுதியில், 195,896 உறுப்பினர்களுக்கு ரூ. 34 பில்லியன் தொகை வழங்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உறுதிப்படுத்தப்பட்டு ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போக்கு குறைந்தது. மேலும், கோவிட் 19 தொற்றுநோயால் மூடப்பட்ட வணிகங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால் 2024 ஆம் ஆண்டில் உறுப்பினர்களால் உரிமைகளை திரும்பப் பெறுவதில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டது. இந்தக் குறைவு 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அது 12.8% சதவீதமாக காணப்பட்டது.




*Figure 2 - Annual Disbursement of Statutory Benefits by Year (2020–2024)*

## நலன்புரி நன்மைகள் (சட்டத்தில் குறிப்பிடப்படாத நலன்கள்)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையை நிறுவுவதன் முக்கிய நோக்கங்களாக, உறுப்பினர்களின் நலனை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் பொருளாதார ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் என்பன பிரதானமானவையாகும். அதற்கமைய, 1986 ஆம் ஆண்டு 'தானியங்கி ஆயுள் காப்புறுதி சலுகை (இறப்பு நலன்) திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது முதல் 2024 ஆம் ஆண்டு அரசாங்க பல்கலைக்கழக கல்வியில் பதிவு செய்யும் எமது சபையில் செயலில் உள்ள உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு 'விஸ்வ யாத்ரா' என்ற பெயரில் ரூ.25,000.00 நிதி மானியம் வரையிலான 11 நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

உறுப்பினர் கணக்கு இருப்பில் இருந்து எந்தத் தொகையையும் கழிக்காமல் மருத்துவ உதவி வழங்குதல், சலுகை வட்டி விகிதத்தில் வீட்டுக் கடன்களை வழங்குதல் மற்றும் எங்கள் உறுப்பினர்களின் குழந்தைகளின் எதிர்காலத்தை வலுப்படுத்த கல்வி உதவித்தொகைகளை வழங்குதல், தேவைப்படும் நேரத்தில் எமது உறுப்பினர்களின் எதிர்காலத்தை வலுப்படுத்த நாம் பணியாற்றி வருகின்றோம்.




*Figure 3: Welfare Benefits Disbursement Summary (2023 & 2024)*




*Figure 4: Breakdown of Scholarship Disbursements in 2024 – Grade 5 and A/L (previous benefit scheme) – 2024*

இந்த நலன்கள் அனைத்தும், சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாகப் பதிவுசெய்து சபையில் உறுப்புரிமையைப் பெற்ற உறுப்பினர்களுக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நலத்திட்டங்களுக்கான செலவை அனைத்து உறுப்பினர்களும் விகிதாசாரப்படி ஏற்றுக்கொண்டாலும், தேவைப்படும் நேரங்களில் அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களால் உதவுவதற்கு முடிகின்றமை அனைத்து உறுப்பினர்களின் அமைதியான பெருமையாக மாறியுள்ளது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில், நிபுணதா சவியா மற்றும் விஸ்வ யாத்ராவின் நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி, சலுகைகளுக்கான பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் சபையின் நலத்திட்டங்களுக்கு ஒரு புதிய அத்தியாயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய தொழில் தகுதி (NVQ) நிலை 3,4 மற்றும் 5 பாடநெறிகளைத் தொடர்வதற்கு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை திறமையான மற்றும் தகுதிவாய்ந்த நபராக உள்ளூர் மற்றும் சர்வதேச வேலைச் சந்தையில் பெருமையுடன் நுழைவதற்கு ரூ. 50,000.00 நிதியுதவி வழங்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், இந்த நலன்கள் மூலம் உறுப்பினர்களின் 05 பிள்ளைகளுக்கு ரூ.91,142.00 தொகை வழங்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், உயர்தரப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற அரசாங்க பல்கலைக்கழகங்களில் சேரும் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு ரூ.25,000.00 நிதியுதவி வழங்கப்பட்டது, மேலும் 504 பிள்ளைகளுக்கு ரூ.12,600,000.00 தொகை வழங்கப்பட்டுள்ளது. நலன்புரி சலுகைகளில் ஒரு தனித்துவமான மைல்கல்லாக, உறுப்பினர் நலன்புரி சலுகைகளை விரிவுபடுத்தும் விஸ்வ யாத்ரா சலுகை அறிமுகப்படுத்தப்பட்டதை நான் முக்கிய ஒரு மைல்கல்லாகக் கருதுகின்றேன்.

### அங்கத்தவர் கணக்குகளைப் பேணிவரல்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில் வழங்குநர்கள் ஒவ்வொரு ஊழியரின் மாதாந்த மொத்த வருவாயில் 3% க்கு சமமான தொகையை சபைக்கு அனுப்புதல் வேண்டும். சுயதொழில் செய்பவர்கள் மாதத்திற்கு ரூ.500.00 மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மாதத்திற்கு ரூ.2000.00 ஐ சபைக்கு அனுப்புவதன் மூலம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உறுப்பினரின் கணக்கின் இருப்புக்கு சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதத்திற்கு மேலதிகமாக உறுப்பினர் கணக்குகள் ஆண்டுதோறும் பங்கிலாபத் தொகையால் அதிகரிக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடு 15 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான பெரிய வகை உறுப்பினர் கணக்குகளாலும், 15க்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கான சிறிய வகை உறுப்பினர் கணக்குகளாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின பிரிவு 8 (அ) இன் படி, ஒவ்வொரு செயலில் உள்ள உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கு மீதி, ஒவ்வொரு நிதி ஆண்டையும் தொடர்ந்து வரும் ஆண்டின் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் வருடாந்த கணக்கு அறிக்கை மூலம் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும்.

2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், எமது சபையில் செயலில் உள்ள 2,602,200 உறுப்பினர் கணக்குகளில், 2,366,715 கணக்குகள் புதுப்பிக்கப்பட்டு, உறுப்பினர் கணக்கு அறிக்கைகள் அவர்களின் தொழில் வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், சுமார் 14,986,000 செயலற்ற உறுப்பினர் கணக்குகள் உள்ளன, மேலும் சுமார் 14,188,299 கணக்குகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும், சபையினால் பராமரிக்கப்படும் இலத்திரனியல் சேவை (E-service) மூலம் குறுஞ்செய்தி மூலம் உறுப்பினர்கள் தங்கள் தனிப்பட்ட கணக்கு இருப்பை அறிய தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம், உறுப்பினர்கள் தங்கள் கணக்குத் தகவல்களை அணுகுவதை விரிவுபடுத்தும் பொருட்டு சபை ஒரு தனித்துவமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மனிதவள முகாமைத்துவம்

## Our Employees

ஓய்வுபெறுகை மற்றும் பதவி விலகல் காரணமாக 2023 ஆம் ஆண்டில் 882 ஆக இருந்த ஆளணி எண்ணிக்கை சிறு மாற்றத்துடன் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆளணி எண்ணிக்கை 837 ஆகும்.

| மட்டம் | தோழில் தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சிரேஸ்ட | பொது முகாமையாளர் | 1 | - | 1 |
| | மேலதிக பொது முகாமையாளர் | - | - | - |
| | பிரதிப் பொது முகாமையாளர் | 7 | - | 7 |
| | உதவிப் பொது முகாமையாளர் | 4 | 1 | 5 |
| | முகாமையாளர் | 21 | 19 | 40 |
| | **மொத்தம்** | **33** | **20** | **53** |
| மூன்றாம் நிலை | கனிஸ்ட முகாமையாளர் | 26 | 30 | 56 |
| | முகாமைத்துவ உதவியாளர் | 76 | 103 | 179 |
| | **மொத்தம்** | **102** | **133** | **235** |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் 2-2 | 4 | 2 | 6 |
| | முகாமைத்துவ உதவியாளர் 1-2 | 283 | 140 | 423 |
| | **மொத்தம்** | **287** | **142** | **429** |
| ஆரம்ப நிலை | ஆரம்ப மட்டம் | 114 | 12 | 126 |
| | **மொத்தம்** | **114** | **12** | **126** |
| **மொத்தம்** | | **532** | **305** | **837** |

### ஆளணி வயது அடிப்படையில்

| ஆளணி வயது அடிப்படையில் (2024.12.31 திகதிக்கு) வயதுப் பிரிவு வருடங்கள் மொத்தம் | | |
|---|---|---|
| 21-25 | 1 | 1% |
| 26-30 | 74 | 08% |
| 31-35 | 116 | 13% |
| 36-40 | 148 | 18% |
| 41-45 | 126 | 15% |
| 46-50 | 93 | 11% |
| 51-55 | 165 | 20% |
| 55 க்கு மேல் | 114 | 14% |
| **மொத்தம்** | **837** | **100%** |

### ஆளணி தொழில் தரம் அடிப்படையில்

| | தோழில் தரம் | மொத்தம் | % |
|---|---|---|---|
| சிரேஸ்ட | பொது முகாமையாளர் | 1 | 0.12% |
| | மேலதிக பொது முகாமையாளர் | 7 | 0.84% |
| | பிரதிப் பொது முகாமையாளர் | 5 | 0.11% |
| | உதவிப் பொது முகாமையாளர் | 40 | 4.78% |
| | **மொத்தம்** | **53** | **6.33%** |
| மூன்றாம் நிலை | கனிஸ்ட முகாமையாளர் | 56 | 6.70% |
| | முகாமைத்துவ உதவியாளர் 4 | 179 | 21.39% |
| | **மொத்தம்** | **235** | **28.08%** |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் 2-2 | 6 | 0.72% |
| | முகாமைத்துவ உதவியாளர் 1-2 | 417 | 49.82% |
| | **மொத்தம்** | **423** | **50.54%** |
| ஆரம்ப நிலை | ஆரம்ப மட்டம் | 126 | 17.32% |
| | **மொத்தம்** | **126** | **15.05%** |
| **மொத்தம்** | | | **100.00%** |

### ஆளணி பாலினம் அடிப்படையில்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஆளணி ஆண் மற்றும் பெண் வீதம் 2024 ஆம் இறுதியில் 51.3:48.7 ஆக காணப்பட்டது.

| ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|
| 429 | 408 | 837 |
| 51.3 % | 48.7% | 100% |

### ஆளணி வயதின் அடிப்படையில்

| | |
|---|---|
| பிரதான அலுவலகம் | 505 |
| கிளை அலுவலகங்கள் | 332 |
| மொத்தம் | 837 |

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்கள் 837 பேரில் 505 பேர் பிரதான அலுவலகத்திலும் 332 பேர் கிளை அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றனர்.

| விபரம் | நிறைவேற்றுத் தரம் | நிறைவேற்றுத் தரம் அல்லாத | மொத்தம் |
|---|---|---|---|
| ஓய்வுபெறுகை | 10 | 04 | 14 |

### ஊழியர் இடமாற்றங்கள்

சபையின் இடமாற்றக் கொள்கைக்கு அமைய சபையில் ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரே பிரிவில் கடமையாற்றிய ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

### சம்பளம் மற்றும் நலன்கள்

சபையின் அனைத்து ஊழியர்களும் நிரந்தரப் பதவி வகிக்கின்றனர். நியதிச்சட்ட நிறுவனமொன்றில் ஊழியர்கள் என்ற ரீதியில் அவர்கள் தமது அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக பல நலன்களை அனுபவிக்கின்றனர்.

| | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 | வித்தியாசம் % |
|---|---|---|---|
| சம்பளம் | 533,429 | 562,996 | 5.25% |
| வாழ்க்கைச் செலவுப்படி | 163,397 | 82,437 | (98.21)% |
| உணவுக் கொடுப்பனவு | 11,941 | 12,898 | 7.42% |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 38,885 | 27,417 | (41.83)% |
| லீவுக்கான சம்பளம் | 16,260 | 12,165 | (33.66)% |
| **மொத்தம்** | **763,911** | **697,913** | **(9.46)%** |

### நலன்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்கள் வழங்கப்படும் பல சலுகைகளுக்கு தகுதியுடையவர்கள்.

தரம் அடிப்படையிலான ஊக்கத்தொகை, மருத்துவக் கட்டணத் திருப்பிச் செலுத்தும் வசதிகள், வருடாந்த போனஸ் மற்றும் பல்வேறு கடன்கள், உயர் கல்வித் தகுதிகளுக்கான சம்பள உயர்வுப் நலன்கள் மற்றும் நிரந்தர ஊனம் அல்லது ஊழியரின் இறப்புக்கான இழப்பீடு ஆகியவை உள்ளடங்கும்.

| | 2024<br>ரூ. '000 | 2023<br>ரூ. '000 | வித்தியாசம்<br>% |
|---|---|---|---|
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 141,870 | 131,941 | (7.53)% |
| சீருடைகள் மற்றும் தையல் செலவுகள் | 24,616 | 16,801 | (46.52)% |
| விசேட ஓய்வூதிய போனஸ் கொடுப்பனவு | 1,600 | 900 | (77.78)% |
| தேனீர் மற்றும் ஏனைய ஆளணி நலன்புரிச் செலவினங்கள் | 16,569 | 16,019 | (3.43)% |
| லீவு தினங்களுக்கான கொடுப்பனவு | 19,489 | 28,144 | 30.75% |
| வருடாந்த போனஸ் கொடுப்பனவு | 78,113 | 80,801 | 3.33% |
| மருத்துவச் செலவினங்களை மீளளித்தல் | 116,584 | 128,197 | 9.06% |
| வீட்டுக் கடனுக்கான வட்டி | 7,015 | 8,963 | 21.73% |
| வட்டிச் செலவினம் | 39,439 | 38,786 | (1.68)% |
| தற்போதைய சேவைச் செலவு | 14,511 | 9,548 | (51.98)% |
| ஊ.சே.நி | 104,594 | 95,466 | (9.56)% |
| ஊ.ந.பொ.நி. | 20,941 | 19,157 | (9.31)% |
| தோலைப்பேசிப் பட்டியல்களை மீளளிப்புச் செய்தல் | 3,690 | 4,007 | 7.91% |
| **மொத்தம்** | **589,031** | **578,730** | **(1.78)%** |

### ஊக்குவிப்புக் கொடுப்பனவு

அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு மாதாந்த அடிப்படையில் வழங்கப்படும் வருகைத்தரு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

### மருத்துவ வசதிகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்களின் மருத்துவ வசதிகளுக்கு பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

- ஒரு ஊழியருக்கு ரூ. 75,000.00 வரை வருடாந்த வெளி நோயாளர் வைத்திய சேவைகளுக்கான நிதி மீளளிப்பு
- ஒரு ஊழியருக்கு வருடாந்தம் ரூ. 125,000.00 வரையில் வைத்தியசாலை அனுமதிக்கான செலவுகள் மீளளிப்பு.

### ஊழியரின் நிரந்தர அங்கவீனம் அல்லது மரணத்திற்கான நட்டஈடு

| சம்பவம் | தரம்/ பதவி | நட்டஈட்டின் அளவு |
|---|---|---|
| ஊழியரின் மரணம் | தவிசாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் | 1,500,000.00 |
| | உயர் முகாமைத்துவம் (2-1), (1-3) மற்றும் (1-1) | 1,450,000.00 |
| | நடுத்தர முகாமைத்துவம் (1-3) | 1,350,000.00 |
| | கனிட்ட முகாமைத்துவம் (1-1) | 1,250,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (4) | 1,125,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (2-2), (1-2) | 1,000,000.00 |
| | ஆரம்ப மட்டம் (1), (2), (3) | 875,000.00 |

| சம்பவம் | தரம்/ பதவி | நட்டஈட்டின் அளவு |
|---|---|---|
| நிரந்தர அங்கவீனம் | தவிசாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் | 1,750,000.00 |
| | உயர் முகாமைத்துவம் (2-1), (1-3) மற்றும் (1-1) | 1,700,000.00 |
| | நடுத்தர முகாமைத்துவம் (1-3) | 1,650,000.00 |
| | கனிட்ட முகாமைத்துவம் (1-1) | 1,500,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (4) | 1,350,000.00 |
| | முகாமைத்துவ உதவியாளர் (2-2), (1-2) | 1,200,000.00 |
| | ஆரம்ப மட்டம் (1), (2), (3) | 1,050,000.00 |

### வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு

டிசம்பர் மாதத்தில் வழங்கப்படும் வருடாந்த போனஸ் கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி உள்ளடங்களாக இரண்டு மாதகால அடிப்படைச் சம்பளத்திற்கு சமனாக வழங்கப்படும்.

### கடன்

**விசேட கடன்**

| | |
|---|---|
| கடன் தொகை | ரூ.100,000.00 |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | தவணைகள் 60 |
| வட்டி | வருடாந்த 4.2% |

**வீட்டுக் கடன்**

| | |
|---|---|
| கடன் தொகை | ரூ. 3,000,000.00 |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 25 வருடங்கள் அல்லது 60 வயது பூர்த்தியடைதல் |
| வட்டி | 1 ஆவது ரூ. 2,000,000 வருடத்திற்கு 4.2% மீதி ரூ. 1,000,000 வருடத்திற்கு 7.0% |

**விசேட இடர் கடன்**

| | |
|---|---|
| கடன் தொகை | 12 மாத சம்பளம் |
| மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 120 தவணைகள் |
| வட்டி | வருடாந்தம் 4.2% |

**வாகனக் கடன்**

எந்தவொரு ஊழியருக்கும் துவிச்சக்கர வண்டிக் கடன், வாகனக் கடன், முச்சக்கர வண்டிக் கடன் மற்றும் மோட்டார் சைக்கிள் கடன் ஆகியவற்றில் ஒரு கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | கடன் தொகை | ரூ. 3,000,000.00 |
| | வட்டி | 15 வருடங்கள் |
| | கடன் தொகை | வருடாந்தம் 4.2% |
| முச்சக்கர வண்டி | கடன் தொகை | ரூ. 1,250,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 15 வருடங்கள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |
| மோட்டார் சைக்கிள் | கடன் தொகை | ரூ. 500,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 10 வருடங்கள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |
| துவிச்சக்கர வண்டி | கடன் தொகை | ரூ. 25,000.00 |
| | மீளமைக்கப்பட்ட காலப் பகுதி | 36 தவணைகள் |
| | வட்டி | வருடாந்தம் 4.2% |

# தகவல் தொழில்நுட்ப பிரிவு

2024 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, டிஜிட்டல் உட்கட்டமைப்பை நவீனமயமாக்குதல், சைபர் பாதுகாப்பை மேம்படுத்துதல், பணியாளர் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகத்தை சீரமைப்பது ஆகியவற்றில் பல முக்கியமான மைல்கற்களை எட்டியுள்ளது. இந்த முயற்சிகள், தேசிய கொள்கைகள் மற்றும் நிறுவனத் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் மாற்றத்திற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துகின்றன.

## பிரதான கருத்திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம்

- **மென்பொருள்-வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பை (SD-WAN) வெற்றிகரமாக செயல்படுத்தல். :**

  2024 ஆம் ஆண்டில், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் தலைமையகம், தரவு மையங்கள் மற்றும் நிறுவனம் முழுவதும் உள்ள பிராந்திய அலுவலகங்களை மையமாக நிர்வகிக்கப்படும் இணைப்புகள் வழியாக இணைக்கும் மென்பொருள்-வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பு (SD-WAN) சேவையை வெற்றிகரமாக செயற்படுத்தியது. இந்த பாதுகாப்பான, உயர் செயல்திறன் கொண்ட வலையமைப்புச் சேவை, சாதுரியமான வழிகள், இணைய டொமைன்கள் மூலம் பயன்பாடு-விழிப்புணர்வு அணுகல், முன்னுரிமை அமுலாக்கம், நெரிசல் கட்டுப்பாடு மற்றும் கிளை-நிலை தடுப்புச் சுவர், சைபர் பாதுகாப்பு கொள்கைகளை அமலப்படுத்தல் ஆகியவற்றை செயற்படுத்துகின்ற அதே நேரத்தில் செயற்பாட்டுத் திறன் மற்றும் வலையமைப்பு தெரிவுநிலையை மேம்படுத்துகின்றது.

- **இலங்கை அரசாங்க இணையத்தளச் சேவைக்கான (LGN) அணுகலை விருத்திசெய்தல் :**

  மென்பொருள் வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பு (SD-WAN) உள்கட்டமைப்பு மூலம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அனைத்து பிராந்திய அலுவலகங்களும் இப்போது அதன் தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்ட இலங்கை அரசாங்க இணைய சேவைகள் (LGN) இணைப்பைப் பாதுகாப்பாக அணுக முடியும். இலங்கை அரசாங்க இணைய சேவைகள் (LGN) சூழலுக்குள் வழங்கப்படும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முக்கிய கணினி அமைப்பை அணுகுவதற்கு இது அவசியமானது.

## தகவல் தொழில்நுட்பத் துறையில் திறன் விரிவாக்கம்

- **மனித வளப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு மூலோபாய ரீதியாக பணியாளர்களை நியமித்தல் :**

  2024 ஆம் ஆண்டில், தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு 07 புதிய ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர். அதில் தகவல் தொழில்நுட்பத்தின் பிரதிப் பொது முகாமையாளர் உட்பட

இந்த பணியாளர்கள் அமைப்பின் முக்கிய செயல்பாட்டுப் பகுதிகளான அமைப்பு நிர்வாகம், மென்பொருள் அபிவிருத்தி, வலையமைப்பு மற்றும் வன்பொருள் ஒத்துழைப்பு சேவைகள் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்டனர். இது நிறுவனத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த மனிதவளப் பற்றாக்குறைக்கு ஒரு தீர்வாக அமைந்ததுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் டிஜிட்டல் அமைப்புகளின் முகாமைத்துவத் திறனை வலுப்படுத்தவும் உதவியது.

### திறன் விருத்தி மற்றும் ஊழியர் அபிவிருத்தி

- **மென்பொருள் - வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பு (SD-WAN) மற்றும் (Wi-Fi) இணைய உள்கட்டமைப்பு பற்றிய பயிற்சி :**

  மெஹவர பியஸ கட்டிட வளாகத்தில் புதிதாக செயல்படுத்தப்பட்ட மென்பொருள்-வரையறுக்கப்பட்ட பரந்த பகுதி வலையமைப்பு (SD-WAN) மற்றும் நிறுவன (Wi-Fi) இணைய உள்கட்டமைப்பை நிர்வகிப்பதில் உதவுவதற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு விசேட பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டன.

- **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரான்மை (ICTA) மூலம் வழிநடாத்தப்படும் நேஓவபுநபெழஎ (நெக்ஸ்ட்ஜென்கவ்) பற்றிய அடிப்படைப் பாடநெறி :**

  தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) தலைமையிலான NextGenGov திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ஊழியர்கள் பங்கேற்றனர். இது டிஜிட்டல் நிர்வாகம், புத்தாக்கம் மற்றும் அரசாங்கத்துறையில் மாற்றம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

- **மேலதிகப் பயிற்சி நடவடிக்கைகள் :**
  - சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு குழு (ஊநுசுவ) கொள்கை அமர்வுகள்
  - பயர்வால் பாதுகாப்பு மற்றும் நெட்வொர்க் நிர்வாகம்
  - டிஜிட்டல் உருமாற்ற செயல்முறைகளுடன் தொடர்புடைய தொழில்நுட்ப பயனர் பயிற்சி

### எதிர்காலத்திற்கான எதிர்கால நோக்கு

- **தேசிய சைபர் பாதுகாப்பு கொள்கையை நடைமுறைப்படுத்தல்:**

  MOT/2023/01 சுற்றறிக்கையின்படி, சைபர் பாதுகாப்புக் கொள்கையை செயல்படுத்தும் செயல்முறையின் ஒரு படியாக, ஊழியர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தகவல் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகளின் (ITGC) ஆரம்ப மீளாய்வை நிறைவுசெய்துள்ளது. அடுத்த கட்டத்தில், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் செயல்முறைகளிலும் இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு குழுவின் (CERT) பரிந்துரைகளின்படி ஏற்புடைய தழுவல்களைச் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

- **தேசிய சைபர் பாதுகாப்பு செயற்படுத்தல் நிலையத்துடன் (NCSOC) ஒன்றிணைதல்.**

  ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தற்போது இலங்கை கணினி அவசரநிலை பதிலளிப்பு குழுவை (CERT) தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மையத்துடன் (NCSOC) ஒருங்கிணைக்கும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது. அதனால் (Elasticsearch Enterprise SIEM) தொழில்நுட்பம் மூலம் 24 மணி நேர கண்காணிப்பு, அச்சுறுத்தல் கண்டறிதல், சம்பவ பதில், இடர் முகாமை மற்றும் அச்சுறுத்தல் நுண்ணறிவை வழங்குகின்றது.

- **சென்டினல் வன் ஈ.டி.ஆர். (SentinelOne EDR (Endpoint Detection and Response) பரிசோதனை மற்றும் பதிலளிப்பு முறையை நிறுவுதல் :**

  தேசிய சைபர் பாதுகாப்பு செயற்பாட்டு மையத்துடன் (NCSOC) வரவிருக்கும் ஒருங்கிணைப்பின் ஒரு பகுதியாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சென்டினல்வன் EDR (SentinelOne EDR (Endpoint Detection and Response) பரிசோதனை மற்றும் பதில் அமைப்பை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அது அனைத்து கணினி சாதனங்களிலும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான எண்ட்பாயிண்ட் பாதுகாப்பு மற்றும் மென்பொருள் அச்சுறுத்தல் பாதுகாப்பிற்கான தானியங்கி பதில் திறன்களை உறுதி செய்யும்.

- **புதிய அடிப்படை கட்டமைப்பு அபிவிருத்தி**

  பாதுகாப்பான, இணைய அடிப்படையிலான மற்றும் உறுப்பினர்களை மையமாகக் கொண்ட தளமாக வடிவமைக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் புதிய முக்கிய அமைப்பின் அபிவிருத்தி, சபையின் டிஜிட்டல் உருமாற்ற உத்தியின் முக்கிய தூ ணாகும். இந்த அமைப்பு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டு வருகின்றது. மேலும் இது இலங்கை அரசாங்க (Cloud) கிளவுட்டில் (LGC) வழங்கப்படுகின்றது. இது இலங்கை அரசாங்க வலையமைப்பு (LGN) மூலமாகவும் அணுகக்கூடியது. இந்த அமைப்பு தற்போது அடுத்த குறிப்பிட்ட கட்டத்திற்கு, அதாவது செயற்பாட்டு ஏற்றுக்கொள்ளல் பரிசோதனை (OAT) மற்றும் இணையான செயல்படுத்தலுக்கு தயாராக உள்ளது. அந்தக் கட்டத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முழு உற்பத்திக்கு அனுப்பப்படுவதற்கு முன்பு, இந்த நடவடிக்கை அமைப்பின் செயற்பாடு மற்றும் செயற்பாட்டு ஒருங்கிணைப்பை முறையாக உறுதிசெய்யும். இந்த இறுதி செயற்படுத்தல் கட்டம் வெற்றிகரமாக முடிந்த பிறகு, அமைப்பு உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்படும்.

- **ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் ஆலோசனைக் குழுவின் மூலம் செயற்படுத்தப்படும் மூலோபாய உட்கட்டமைப்பு திட்டமிடல் செயன்முறை.**

  அரசாங்கத்தின் தேசிய டிஜிட்டல்மயமாக்கல் கொள்கைக்கு இணங்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதன் டிஜிட்டல் உட்கட்டமைப்பை தரப்படுத்தவும் மூலோபாய ரீதியாக சீரமைக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இது தொடர்பாக, உள்கட்டமைப்பு மேம்பாடுகள் குறித்து சிரேட்ட நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்கவும், தேவையான பரிந்துரைகளை வழங்கவும், வளர்ந்து வரும் டிஜிட்டல் நிர்வாக கட்டமைப்புகளுக்கு ஏற்ப ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து பரிணமிப்பதை உறுதி செய்வதற்கும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு ஆலோசனைக் குழு நியமிக்கப்படும்.

# நிதிப் பிரிவு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிப் பிரிவு ஒரு பரந்த மற்றும் முக்கிய பங்கை வகிக்கின்றது. அதனை சுருக்கமான குறிப்பிடுவதற்கு அதன் பிரதான செயற்பாடுகளை பின்வருமாறு சாராம்சப்படுத்த முடியும் :

**கணக்குகளைத் தயாரித்தல்** : நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அனைத்து நிதி நடவடிக்கைகளும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்யப்படுவதோடு, மாதாந்த மற்றும் வருடாந்த நிதிநிலைமை அறிக்கைகளைத் தயாரிக்கும் பணி அவர்களால் கையாளப்படுகின்றது.

**வருடாந்த வரவுசெயலவுத்திட்டம்** : வருமானம் மற்றும் செலவினங்களை முன்னறிவித்தல் மற்றும் நிதி ஆதாரங்கள் வினைத்திறனுடன் ஒதுக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய வருடாந்த வரவுசெலவுத்திட்ட செயற்பாட்டை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக உள்ளனர்.

**கொடுப்பனவு முகாமை** : அரசாங்கத்திற்கு வரி செலுத்துதல் மற்றும் நிதி விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தல் உட்பட ஊழியர்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு பணம் செலுத்துவதை முகாமை செய்தல் மற்றும் செயலாக்குதல் ஆகியவற்றில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**அரசாங்க கணக்காய்வு ஒருங்கிணைப்பு** : தேவையான மற்றும் தொடர்புடைய அனைத்து தகவல்களும் வழங்கப்படுவதையும், கணக்காய்வு தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதையும் உறுதி செய்வதன் மூலம் அரசாங்க கணக்காய்வுகளுக்கு வசதியளித்தல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணி அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நிறுவனத் திட்டத்தைத் தயாரித்தல்** : நிறுவனத்தின் மூலோபாய திசையை மற்றும் இலக்குகளை கோடிட்டுக் காட்டும் நிறுவனத் திட்டத்தின் அபிவிருத்திப் பணிக்கு அவர்கள் பங்களிப்புச் செய்கின்றனர்.

**முகாமைத்துவ தகவல் அறிக்கைகள்** : நிதிச் செயல்திறன் பற்றிய சிறந்த புரிதலை வழங்குவதற்கும் நிறுவனத்தில் முடிவெடுக்கும் செயற்பாட்டை ஆதரிப்பதற்கும் பல்வேறு முகாமைத்துவத் தகவல்களையும் அறிக்கைகளையும் தயாரிப்பதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக, நிதி ஒருமைப்பாட்டை பராமரிப்பதிலும், மூலோபாய திட்டமிடலை ஒத்துழைப்பு வழங்குவதிலும் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதிலும் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

2024 டிசம்பர் 02 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைப்பெற்ற இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அரசாங்கத்துறைப் பிரிவான இலங்கையின் பொது நிதிக் கணக்காளர்களின் சங்கத்தினால் வழிநடாத்தப்பட்ட இலங்கையின் அரசாங்கத் துறையில் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை விருதுப் போட்டியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சபை வெற்றி பெற்றது. இலங்கையின் அரச நிதிக் கணக்காளர்களின் சங்கத்தினால் வருடாந்த அறிக்கை பிரிவில் நியதிச்சட்ட சபைகள், அதிகாரசபைகள் மற்றும் ஆணைக்குழுக்களுக்கான பிரிவில் தங்க விருதையும் ஒட்டுமொத்த போட்டிக்கான வெண்கல விருதையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு வழங்கப்பட்டது. இந்தப் போட்டியில் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு விருது கிடைத்தது. பெருநிறுவன அறிக்கையிடல் மற்றும் நிதி வெளிப்படுத்தல் துறையில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சமூகப் பொறுப்பு மற்றும் பெருநிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரத்தை வெளிப்படுத்திய பொதுத்துறை நிறுவனங்கள் இந்த விருதுகள் மூலம் பாராட்டப்படுகின்றன.






# சட்டப் பிரிவு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டப் பிரிவு, சபையின் அனைத்து சட்ட விடயங்களுக்கும் ஆலோசனைச் சேவைப் பிரிவாகச் செயல்படுகிறது. அத்தோடு, 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்கத் தவறும் தொழில் வழங்குநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கின்றது. சட்டப் பிரிவு தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) மேற்பார்வையின் கீழ் செயல்படுகிறது. உதவிப் பொது முகாமையாளர் (சட்ட), சட்ட முகாமையாளர்கள் மற்றும் சட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அதன் துணைப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தவிசாளர்:.பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு சட்டப் பிரிவு நேரடியாக அறிக்கை அளிக்கின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு நிறுவப்பட்ட பின்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் நிலுவைத் தொகையை அறவிடுவது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் பிராந்திய மட்டத்திற்கு பரவலாக்கப்பட்டன.

ஏற்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து தேவையான தகவல்களைப்பெற்றுகள ஆய்வுகள்மூலம்கண்டறியப்பட்ட திரட்டப்பட்ட பங்களிப்புகள் / மேலதிகக் கட்டணங்களைச் செலுத்தத் தவறிய தொழில்வழங்குநரகளுக்கு எதிரான சட்ட அமலாக்கத்தின் மூலம் தொடர்புடைய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதை உறுதி செய்வதே சட்டத் துறையின் முக்கிய நோக்கமாகும். குழு ஊழியர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் தொழிலாளர் சட்டத்தின் புதிய போக்குகள் குறித்த பயிற்சி அமர்வுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் சட்டப் பிரிவினால் நடத்தப்படுகின்றன.

# உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வு என்பது நிர்வாகத்திற்கான ஒரு சேவையாக செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்வதற்கு ஏற்கனவே உள்ள நிறுவனத்திற்குள் ஒரு சுயாதீனமான மதிப்பீட்டுச் செயற்பாடாகும். இது ஒரு நிறுவனத்திலுள்ள வளங்களை திறமையான மற்றும் பயனுள்ள பயன்பாட்டிற்கு பங்களிக்கும் செயற்பாடாக, உள்ளக கட்டுப்பாடுகள், நிதி மற்றும் பிற விடயங்களின் செயல்திறனை அளவிடுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் ஒரு ஒழுங்குமுறை அமைப்பாக காணப்படுகின்றது.

பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) கணக்காய்வு மற்றும் உத்தரவாதப் பிரிவின் தலைவராக கணக்காய்வுக் குழுவின் மூலம் சபைக்கு அறிக்கையிடுகின்றார். மேலும் அனைத்து நிர்வாக விடயங்களுக்கும் அவர் சபையின் தவிசாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மட்டுமே அறிக்கை அளிக்கிறார். பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) கணக்காய்வுக் குழுவுடன் இணைந்து பணிகளுக்கு முன்னுரிமை அளித்து, கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்து, கணக்காய்வுக் குழு மூலம் கண்டறியப்பட்ட முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் தகவல்களைத் கணக்காய்வுக் குழுவின் மூலம் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகின்றார்.

ஒரு நிறுவனத்திற்குள் நிலையான மற்றும் திறமையான அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் இருப்பதை உறுதி செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். உள்ளக நிர்வாகம் என்பது நிதி, சொத்துக்கள் மற்றும் முதலீடுகளைப் பாதுகாத்தல் பதிவுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்தல், செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தல், கொள்கைகள், விதிமுறைகள், ஒப்பந்தங்கள் மற்றும் உத்தரவுகளுக்கு இணங்குவதைக் கண்காணித்தல் உள்ளிட்ட மொத்த செயன்முறையையும் உள்ளடக்கியது.

## சபையின் 44 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இரத்தான நிகழ்வு













## பொசோன் பக்திப் பாடல்கள் - 2024



# பணிப்பாளர்கள் சபை

## 2024 டிசம்பர் 31ஆம் திகதியில்



**திரு. சோமசிறி ஏகநாயக்க**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச துறையில் மூலோபாய திட்டமிடல், கொள்கை செயற்படுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள திரு. சோமசிறி ஏகநாயக்க மிகவும் திறமையான தொழிற்துறை நிபுணர் ஆவார். தற்போது அவர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தவிசாளராக உள்ளார். தனது அரச சேவை வாழ்க்கையில், புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ரன்மினிதென்ன தேசிய டெலிசினிமாப் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கிய பதவிகளை வகித்து, பல அரசாங்க நிறுவனங்களில் முக்கிய பங்கை ஆற்றியுள்ளார். கருத்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, மாத்தளை மாவட்ட செயலகம் மற்றும் தொழில் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கும் திரு. சோமசிறி ஏகநாயக்க தனது சேவைகளை வழங்கியுள்ளார்.

திரு. ஏகநாயக்க, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் இளங்கலைப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் கலாநிதிப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஊடகத் துறையில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் நிர்வாகம், தலைமைத்துவம் மற்றும் கொள்கை வகுத்தல் ஆகிய துறைகளில் சர்வதேச பயிற்சித் திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். பௌத்த தலைமைத்துவ குணங்களைக் கொண்ட திரு. ஏகநாயக்க, புத்தாக்க மூலோபாயங்கள் மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய முன்னேற்றத்தை மேம்படுத்தும் தொலைநோக்கைக் கொண்டுள்ளார்.



**திரு. இந்திக பத்தேவிதான**
பணிப்பாளர்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. இந்திக பத்தேவிதான, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றி, வரி நிர்வாகத் துறையில் 17 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள தொழிற்துறை நிபுணர் ஆவார். தற்போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சிரேட்ட பிரதி ஆணையாளராகப் பணியாற்றி வருகின்றார். மதுவரித் திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக எட்டு ஆண்டுகள் சேவை மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியல் தற்காலிக உதவி விரிவுரையாளராக குறுகிய காலம் பணியாற்றியது உட்பட அவரது தொழில் வாழ்க்கை பல்வேறு பணிகளை உள்ளடக்கியது. வரிக் கொள்கை, வருவாய் நிர்வாகம், சட்ட நடைமுறைகள் மற்றும் அலுவலக முகாமை ஆகியவற்றில் வலுவான அடித்தளத்துடன், வரிவிதிப்பு மற்றும் நிர்வாகத் துறையில் அவரது பங்களிப்பு தன்னிகரற்றது.

திரு. பத்தேவிதான, களனிப் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியலில் விசேட (சிறப்பு) பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தையும் (LLB) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அவரது தொழில்முறை மேம்பாட்டின் ஒரு பகுதியாக, இந்தியாவில் வரிக் கொள்கை மற்றும் மலேசியாவில் ஈ - நிர்வாகம் மற்றும் மாற்ற முகாமை குறித்து பயிற்சி பெற்றுள்ளார். சட்ட வழக்குச் சட்டம், நீதிமன்ற நடைமுறைகள் மற்றும் அலுவலக நிர்வாகம் ஆகியவற்றில் உள்நாட்டுப் பயிற்சியையும் பெற்றுள்ளார். வரி இணக்கம், வருமான சேகரிப்பு மற்றும் சட்ட கட்டமைப்புகளில் அவரது நிபுணத்துவம் தேசிய நிதி நிர்வாகத்திற்கு தொடர்ந்து சிறந்த ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.



## திரு. எஸ்.எப்.எச். பெர்னாந்து

பணிப்பாளர்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. சுசந்த பெர்னாந்து ஒரு புகழ்பெற்ற தொழில்முறை கணக்காளர் ஆவார், மேலும் இலங்கையிலும், இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலும் தனியார் மற்றும் பொதுத் துறைகளில் பல சிரேட்ட பதவிகளை வகித்துள்ளார். நன்கு அறியப்பட்ட பட்டியலிடப்பட்ட நிறுவனமான (Bartleet Finance Ltd.) நிறுவன நிர்வாக பணிப்பாளராக இருந்த அவர், பார்ட்லீட் மல்லோரி ஸ்டாக் புரோக்கர்ஸ் லிமிடெட், (Bartleet Mallory Stockbrokers Ltd.) பார்ட்லீட் அண்ட் கம்பெனி லிமிடெட் (Bartleet and Company Ltd.) மற்றும் பார்ட்லீட் டிரான்ஸ்கேபிடல் லிமிடெட் (Bartleet Transcapital Ltd.) உள்ளிட்ட பார்ட்லீட் குழுமத்தின் பல துணை நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். கூட்டுத்தாபனத் துறைக்கு அவர் செய்த பங்களிப்புகளுக்கு மேலதிகமாக, நாட்டின் பல தேசிய நிறுவனங்களிலும் சிரேட்ட பதவிகளை வகித்தார். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம் (NIBM) மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் துணை நிறுவனமான ஜெயா கண்டெய்னர் டெர்மினல்ஸ் லிமிடெட் (Jaya Container Terminals Ltd.) ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றினார். திரு. சுசந்த பெர்னாந்து இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் பணிப்பாளராகவும், சுற்றுலா அமைச்சரின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். அவுஸ்திரேலியாவில் (BDS Corporation) கார்ப்பரேசனின் நிதிக் கட்டுப்பாட்டாளராகவும், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இக்ட்ரோஹேட்டிங் (Ictrohating Group of Companies) குழும நிறுவனங்களின் குழு கணக்காளராகவும் பணியாற்றியது அவரது சர்வதேச அனுபவத்தில் அடங்கும். அவர் தேசிய தொழில் ஆலோசனைக் குழுவின் (NLAC) உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார் மற்றும் களுத்துறை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக விளையாட்டுத் துறைக்கு மகத்தான பங்களிப்புகளைச் செய்துள்ளார்.



## திரு. அதுல ஹரிச்சந்திர

பணிப்பாளர்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. அதுல ஹரிச்சந்திரா, வங்கித் துறையில் நிபுணத்துவம் பெற்ற, 20 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான தொழில்முறை அனுபவமுள்ள ஒரு புகழ்பெற்ற தொழிற்துறை நிபுணர் ஆவார். நிதிச் சந்தைகள் மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் வலுவான தலைமைத்துவத்தின் மூலம் அவர் சிறப்பான சேவையை வழங்கியுள்ளார். அவர் தற்போது இலங்கையில் உள்ள ஒரு புகழ்பெற்ற வெளிநாட்டு வங்கியில் சிரேட்ட முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

நிதிச் சந்தைகள், திறைசேரி இடர், வர்த்தக இடர் மற்றும் செயல்பாட்டு இடர் முகாமை ஆகிய துறைகளில் வலுவான பின்னணியைக் கொண்ட அனுபவம் வாய்ந்த நிபுணர் ஆவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதிப் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் (Masters of Financial Economics - MFE) மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் இளங்கலை – சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார. (Bachelor of Arts - Honors). மேலும், திரு. அதுல ஹரிச்சந்திர, நிதிச் சந்தை செயல்பாடுகளில் ACI செயல்பாட்டுச் சான்றிதழ் (ACI Operations Certificate in Financial Market Operations), (பிரான்ஸ்), தயாரிப்புகள் மற்றும் சந்தை இடர்களில் (KESDEE intermediate Certificate in Products & Market Risk) இடைநிலைச் சான்றிதழ் (USA), மற்றும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து தரவுத்தள முகாமையில் டிப்ளோமா (Diploma in Database Management (CBSL) உள்ளிட்ட பல சர்வதேச தொழில்முறை தகுதிகளைக் கொண்டுள்ளார். பகுப்பாய்வு சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்கள் பற்றிய கூர்மையான புரிதலுடன், திரு. அதுல ஹரிச்சந்திர, தொழில்முறை மற்றும் நெறிமுறைகளின் மிக உயர்ந்த தரங்களைப் பேணி நிறுவன வெற்றியை முன்னெடுப்பதில் உறுதியாக செயற்படுகின்றார்.

# பணிப்பாளர்கள் சபை

## 2024 டிசம்பர் 31ஆம் திகதியில்



### திரு. இந்திக பிரேமரத்ன

பணிப்பாளர்

பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

திரு. இந்திக பிரேமரத்ன, பேரினப் பொருளாதார திட்டமிடல், பொது முதலீடு மற்றும் வெளிநாட்டு வளங்கள் முகாமை ஆகியவற்றில் விரிவான அனுபவமுள்ள ஒரு சிரேட்ட அரசாங்கத்துறை நிபுணர் ஆவார். அவர் தற்போது பேரினப் பொருளாதார திட்டமிடல் பிரிவு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொழில், வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பிரிவின் பணிப்பாளராக பணியாற்றி வருகின்றார். இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக அரசாங்க சேவையில் பணியாற்றும் திரு. பிரேமரத்ன, நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார், அங்கு அவர் சர்வதேச கூட்டாளர்களுடன் அபிவிருத்தி நிதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் கட்டமைப்பதிலும் முன்னணிப் பங்காற்றியுள்ளார். வெளிநாட்டு நிதிகளால் நிதியளிக்கப்பட்ட முக்கிய கருத்திட்டங்களை திரு. பிரேமரத்ன மேற்பார்வையிட்டுள்ளார் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு மூலோபாய மேற்பார்வையை வழங்கியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பிளிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் (கொள்கை), களனி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் மற்றும் ஜப்பானின் (IDE Advanced School) அபிவிருத்தி ஆய்வுகளில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். அவர் களனி பல்கலைக்கழகத்தில் அறிவியல் இளங்கலை (சிறப்பு) பட்டத்தையும் பெற்றுள்ளார், மேலும் சர்வதேச நாணய நிதியம் (IMF), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் லீ குவான் யூ பொதுக் கொள்கை கல்லூரி (Lee Kuan Yew School of Public Policy) போன்ற நிறுவனங்களில் கருத்திட்ட முகாமை, நிதிக் கொள்கை மற்றும் பொது நிதி முகாமை ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிப் பாடநெறிகளை நிறைவு செய்துள்ளார்.

திரு. பிரேமரத்ன மத்திய கலாச்சார நிதியம் உட்பட பல பணிப்பாளர் சபைகளில் பணியாற்றியுள்ளார். அரசாங்கத் துறையில் இணைவதற்கு முன்னர் அவர் ஒரு பிரபலமான நிறுவனத்தில் முகாமைத்துவ பயிற்சியாளர்/ உற்பத்தி நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றினார், மேலும் தனியார் துறையிலும் பணியாற்றி அனுபவத்தைப் பெற்றுள்ளார். அர்ப்பணிப்புள்ள கொள்கைத் திட்டமிடுபவரான திரு. இந்திக பிரேமரத்ன, மூலோபாய பொது முதலீடு மற்றும் நிதி நிர்வாகம் ஆகிய துறைகள் மூலம் இலங்கையின் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டமிடலுக்கு தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து வருகின்றார்.



### திருமதி கே.ஏ.பி. டி சில்வா

பணிப்பாளர்

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி டி சில்வா, களனி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகத்தில் இளங்கலைப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இலங்கை பட்டய நிதி கணக்காளர்கள் (CPFA) தகுதியைப் பெற்றுள்ளார். அவர் தற்போது வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம நிதி அதிகாரியாகவும், சீ.டபிள்யு.ஈ. கட்டுமானம் மற்றும் பொறியியல் தனியார் லிமிடெட்டின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். வெளியுறவு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களத்தில் பிரதம கணக்காளராக பணியாற்றியுள்ளார். திருமதி டி சில்வா, நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதிப் பொது முகாமையாளராகவும் (நிதி) பொது சேவை ஆணைக்குழுவின் நிதி பிரதிச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.



**திரு. ஜூட் டினால் பீரிஸ்**
பணிப்பாளர்
இலங்கை தொழில் வழங்குநர் கூட்டமைப்பின் பிரதிநிதி

திரு. டினால் பீரிஸ் வணிகத் துறையில், குறிப்பாக அலுமினியம், இரும்பு, ஒட்டுப் பலகைகள், கட்டிடப் பொருட்கள், நெசவு மற்றும் ஆடை உற்பத்தி போன்ற பல கைத்தொழில் துறை கம்பனிகளுடன் தொடர்புடைய பல வருட அனுபவமுள்ள ஒரு திறமையான தொழிலதிபர் ஆவார். அவர் ஒரு பொறியியலாளர் மற்றும் இலண்டன் வணிகப் பாடசாலையில் வர்த்தக முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவர். அவர் பல பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவராகவும் பணிப்பாளராகவும் உள்ளார். திரு. டினால் பீரிஸ் மனித வளங்களில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் மற்றும் இலங்கை தொழில் வழங்குநர் கூட்டமைப்பின் கவுன்சில் உறுப்பினராகவும் உள்ளார்.



**திரு. சன்ன திசாநாயக்க**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. சன்ன திசாநாயக்க, வங்கித் துறையில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் ஒரு அனுபவம் வாய்ந்த வங்கி அதிகாரி ஆவார். மேலும் வங்கி ஊழியர்களின் உரிமைகள் மற்றும் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் தொழிற்சங்கத் தலைவராகவும் அவர் அறியப்படுகின்றார். அவர் தற்போது இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார், வங்கித் துறையில் நியாயமான தொழில் நடைமுறைகள் மற்றும் ஊழியர் நலன்களை மேம்படுத்துவதில் முன்னணிப் பங்காற்றுகின்றார். UNI (UNI Global Union) உலகளாவிய ஒன்றியத்தின் கீழ் உள்ள ஒரு அமைப்பான UNI (UNI Sri Lanka License Council) இலங்கை உரிமக் குழுவின் தலைவராகவும் பணியாற்றுகின்றார், மேலும் உலகளாவிய தொழிலாளர் தரநிலைகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு உறுதிபூண்டுள்ள சர்வதேச தளங்களில் இலங்கை தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். திரு. சன்ன திசாநாயக்க தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் (NLAC) உறுப்பினராகவும் உள்ளார். இந்தப் பொறுப்பில், பல்வேறு தொழில்களில் பல்வேறு தொழில் கொள்கைகள் மற்றும் சுமூகமான வேலை நிலைமைகளை அறிமுகப்படுத்த கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். வங்கித் துறை மற்றும் தொழில் உறவுகளில் அவரது அனுபவம், இலங்கையில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நியாயமான பணியிட சூழலுக்கான அவரது அயராத அர்ப்பணிப்பு மெச்சத்தக்கது.

# பணிப்பாளர்கள் சபை

## 2024 டிசம்பர் 31ஆம் திகதியில்



**திரு. கனிஸ்க நிரோஷன்**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

திரு. கனிஸ்க நிரோக்ஷன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தில் வர்த்தக முகாமைத்துவத்தில் இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்ற ஒரு தொழில்முறை நிபுணர் ஆவார். தொழிலாளர் உரிமைகள் நலனில் அர்ப்பணிப்புள்ள தலைவராக, தற்போது இலங்கையில் முன்னணி தொழிற்சங்கமான, தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் நிறுவனங்களுக்கு இடையேயான ஊழியர் சங்கத்தின் பிரதித் தலைவராக உள்ளார். தொழிலாளர் உரிமைகள் துறையில் அவரது தலைமைத்துவமும் அனுபவமும் தேசிய எல்லைகளைக் கடந்தது. அவர் உலக தொழிற்சங்க கூட்டமைப்பின் உறுப்பினராக உள்ளார். மேலும் அவர் பிராந்திய மற்றும் சர்வதேச மன்றங்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளில், சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் அனைத்து சீன தொழிற்சங்க கூட்டமைப்பினால் (ACFTU) ஏற்பாடு செய்யப்பட்ட முக்கிய தொழிற்சங்க பேச்சுவார்த்தை மாநாடுகளில் அவர் முனைப்புடன் பங்கேற்றுள்ளார்.

# நிறுவனக் குழு
# முகாமைத்துவம்

## சிரேஷ்ட முகாமைத்துவம்



**திரு. சோமசிறி ஏகநாயக்க**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி



**திரு. ஆர்.கே. ஜயலத்**
பொது முகாமையாளர் (பதில் கடமை)

அரச துறையில் மூலோபாய திட்டமிடல், கொள்கை செயற்படுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்தி முயற்சிகளில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள திரு. சோமசிறி ஏகநாயக்க மிகவும் திறமையான தொழிற்துறை நிபுணர் ஆவார். தற்போது அவர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தவிசாளராக உள்ளார். தனது அரச சேவை வாழ்க்கையில், புத்தசாசனம், சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ரன்மினிதென்ன தேசிய டெலிசினிமாப் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கிய பதவிகளை வகித்து, பல அரசாங்க நிறுவனங்களில் முக்கிய பங்கை ஆற்றியுள்ளார். கருத்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத் திணைக்களம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, மாத்தளை மாவட்ட செயலகம் மற்றும் தொழில் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கும் திரு. சோமசிறி ஏகநாயக்க தனது சேவைகளை வழங்கியுள்ளார். திரு. ஏகநாயக்க, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் இளங்கலைப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் கலாநிதிப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஊடகத் துறையில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் நிர்வாகம், தலைமைத்துவம் மற்றும் கொள்கை வகுத்தல் ஆகிய துறைகளில் சர்வதேச பயிற்சித் திட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். பௌத்த தலைமைத்துவ குணங்களைக் கொண்ட திரு. ஏகநாயக்க, புத்தாக்க மூலோபாயங்கள் மற்றும் கொள்கை சீர்திருத்தங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய முன்னேற்றத்தை மேம்படுத்தும் தொலைநோக்கைக் கொண்டுள்ளார்.

பொது முகாமையாளர் (பதில் கடமை) திரு. ஆர்.கே. ஜயலத் அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளங்கலை (சிறப்பு) மற்றும் களனி பல்கலைக்கழகத்தில் முதுகலைப் (பொருளாதாரம்) பட்டம் பெற்றுள்ளார். பின்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை முகாமைத்துவ நிறுவனத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். திரு. ஜயலத் அவர்கள் அரச கணக்குகள் மற்றும் நிதி நிறுவனத்தில் வியாபார நிர்வாகத்தில் டிப்ளோமா பெற்றுள்ளார். அத்தோடு, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் மனித வள முகாமைத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

# பிரதி பொது முகாமையாளர்கள்



**கே.எஸ். திரு. வெலிவிட்ட**
பிரதிப் பொது முகாமையாளர்
(உள்ளக கணக்காய்வு)

திரு. கே.எஸ். வெலிவிட்ட அவர்கள் பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) பதவியை வகிக்கின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பிரயோக கணக்கியலில் இளங்கலை விஞ்ஞானி பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் நிதிக் கணக்காளர்கள் நிறுவனம் ஆகியவற்றின் இணை உறுப்பினராக உள்ளார். மேலும், அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதியியல் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தையும், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் தகவல் அமைப்புகள் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு கணக்காய்வில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தனியார் மற்றும் பொது நிறுவனங்களில் நிதி மற்றும் கணக்காய்வுத் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். திரு. வெலிவிட்ட அவர்கள் தான் தெரிவுசெய்த துறையில் ஒரு திறமையான நிறைவேற்று அதிகாரி ஆவார்.



**திரு. டபிள்யூ.ஜி.கே. ரத்நாயக்க**
பிரதிப் பொது முகாமையாளர்
(அங்கத்தவர் சேவைகள்)

பிரதிப் பொது முகாமையாளர் (அங்கத்தவர் சேவைகள்) திரு. டபிள்யு.ஜீ.கே. ரத்நாயக்க ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவத்தில் இளங்கலை விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் ஆகிய இரண்டிலும் இணை உறுப்பினராக உள்ளார். மேலும், அவரது பதவிக்கு மேலதிகமான பெறுமதியைச் சேர்த்துள்ளார். அவர் இங்கிலாந்தில் உள்ள பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் இரண்டாம் ஐஜ கட்டத்திற்கு பகுதியளவு தகுதி பெற்றுள்ளார்.



**திரு எம்.ஏ.கே. அளுத்கமகே**
பிரதிப் பொது முகாமையாளர்
(முதலீடு)

திரு. எம்.ஏ.கே. அலுத்கமகே தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (முதலீடு) ஆகிய பதவிகளில் கடமையாற்றுகின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்பு) பட்டத்தையும், களனி பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலதிகமாக, இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மற்றும் இலங்கை முகாமைத்துவ நிறுவகத்தின் உறுப்பினரான திரு. அலுத்கமகே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மையப் பகுதியொன்றை கண்காணிக்கும் அதிகாரியாக காணப்படுகின்றார்.



**திரு. எச்.எம்.ஏ. ஜயந்த குமார**

பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)

திரு. எச்.எம்.ஏ. ஜயந்த குமார தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) பதவியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் சட்டப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டமும் (சிறப்பு) கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகளில் முதுகலைப் பட்டமும் பெற்ற திரு. ஜயந்த குமார அவர் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலைப் பட்டமும் பெற்றுள்ளார். திரு. ஜயந்த குமார இலங்கை உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு மற்றும் சத்தியப்பிரமாண ஆணையாளர் ஆவார். கம்பனி செயலாளராகவும் பதிவு செய்துள்ளார்.



**திரு. ஆர்.ஜே.சி.எஸ் சம்பத் குணவர்தன**

பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

திரு. ஆர்.ஜே.சி.எஸ் சம்பத் குணவர்தன அவர்கள் நிருவாகம் மற்றும் மனித வளங்களின் பிரதிப் பொது முகாமையாளராகப் பணிபுரிகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கான டிப்ளோமா பட்டம் பெற்றவர். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழில் கல்வியில் பட்டமும் பெற்றுள்ளார். திரு. குணவர்தன களனிப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் மற்றும் வணிகக் கற்கைகளில் முதுமாணிப் பட்டம் பெற்று தனது திறமைகளை மேலும் வெளிக்காட்டியுள்ளார். அவர் தான் பணிபுரியும் நிறுவனத்தில் பிரதான பிரிவொன்றுக்கு மிகவும் பொருத்தமானவராக காணப்படுகின்றார்.



**திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன**

பிரதிப் பொது முகாமையாளர (நிதி)

திரு. கே.டி.ஏ.பி. கருணாரத்ன பிரதிப் பொது முகாமையாளர (நிதி) பதவியை வகிக்கின்றார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராக உயர் கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகளைப் பெற்றுள்ளார். திரு. கருணாரத்ன அவர்கள் நிதி மற்றும் கணக்கியல் துறையில் தனது திறனையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துவதன் மூலம் தனது கடமைகளைச் செய்கின்றார். அவரது தொழில்துறையில் தொழில்முறை திறன் மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றின் உயர் தரங்களை பராமரிப்பதற்கான அவரது அர்ப்பணிப்பு மெச்சப்படுகின்றது.

# பிரதி **பொது முகாமையாளர்கள்**



**திரு. எஸ்.பி.ஆர்.டி. பெர்னாந்து**
பிரதிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)

தற்போது தகவல் தொழில்நுட்பம் பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றும் திரு. பிரதீப் பெர்னாந்து, தகவல் தொழில்நுட்பத் துறையில் 19 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு தொழிற்துறை நிபுணர் ஆவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் மென்பொருள் பொறியியலில் நிபுணத்துவம் பெற்ற அவர் கணினி விஞ்ஞானத்தில் இளங்கலைப் பட்டத்தையும் தகவல் பாதுகாப்பில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தனது தொழில் வாழ்க்கை முழுவதும், பாரிய தொழில்நுட்ப அமைப்புகளை நிர்வகிப்பதிலும், முக்கிய டிஜிட்டல் உருமாற்றத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், முன்னெச்சரிக்கை தகவல் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் அவர் வலுவான திறன்களை வெளிப்படுத்தியுள்ளார். புத்தாக்கங்களை இயக்குவதிலும், செயல்பாடுகளை மேம்படுத்துவதிலும், அதன் மூலம் நிறுவனத்தின் ஒட்டுமொத்த இலக்குகளை அடைய உதவுவதிலும் அவரது தலைமைத்துவமும் தொழில்நுட்ப நிபுணத்துவமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.



**திருமதி பி.எல்.சி.பி. அல்விஸ்**
உதவிப் பொது முகாமையாளர்
(அமுலாக்கல் வலயம் III)
பிரதிப் பொது முகாமையாளர்
(பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்) பதவியில் கடமைகளை மேற்கொள்ளல்

திருமதி. பி.எல்.சி.பி. அல்விஸ் பிரதிப் பொது முகாமையாளர் (பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்) பதவிக்கான மேலதிக பொறுப்புகளுடன் உதவிப் பொது முகாமையாளராக (அமுலாக்கல் வலயம் III) பணியாற்றுகின்றார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதல் தரப் விஞ்ஞானமாணி இளங்கலைப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவத்துடன் முதுமாணிப் பட்டத்தையும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் இலங்கை பிரயோக புள்ளிவிபர நிறுவனத்தில் பிரயோக புள்ளிவிபரவியல் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தற்போது, திருமதி அல்விஸ் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டு தனது தொழில்முறைத் தகைமைகளை மேலும் வலுப்படுத்திக் கொண்டுள்ளார்.

# உதவி பொது முகாமையாளர்கள்



## திரு. கே.ஜி.என். ரத்நாயக்க
உதவிப் பொது முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

திரு. கே.ஜி.என். ரத்நாயக்க அவர்கள் உதவிப் பொது முகாமையாளராக நிர்வாக மற்றும் மனித வள மேற்பார்வையைச் சிறப்பாகச் செய்து வருகின்றார். அவர் களனிப் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்றவர் மற்றும் ஆளணி முகாமை பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ளார்.



## திரு. புஷ்பரங்க வீரசேகர
உதவிப் பொது முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)

திரு.புஷ்பரங்க வீரசேகர அவர்களின் பெயருக்கு முன்னால் நிறைய தகுதிகள் உள்ளன. தற்போது உதவிப் பொது முகாமையாளராக (தகவல் தொழில்நுட்பம்) பணியாற்றி வருகின்றார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கணினி பொறியியலில் நிபுணத்துவத்துடன் பொறியியல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவர். மேலும், அவர் ஐக்கிய இராச்சியத்தில் UK Staffordshire பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட பொறியியல் கணினித் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். திரு.வீரசேகர இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் இணை உறுப்பினராகவும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பிரிட்டிக்ஷ் கணினி சங்கத்தின் உறுப்பினராகவும் உள்ளார். திரு. வீரசேகர அவர்கள் இலங்கை பொறியியல் சபையினால் பதிவு செய்யப்பட்ட பொறியியல் நிபுணராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், அவர் செயற்கை நுண்ணறிவு அமைப்பு திட்டத்தில் டிப்ளோமா மற்றும் ஜாவா கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் டிப்ளோமையும் நிறைவு செய்துள்ளார்.



## திரு. எச்.ஜி.டி. நிஹால் பிரசன்ன
உதவிப் பொது முகாமையாளர்
(அங்கத்தவர் சேவைகள்)

திரு. எச்.ஜி.டி. நிஹால் பிரசன்ன அவர்கள் உதவிப் பொது முகாமையாளராக (அங்கத்தவர் சேவைகள்) செயற்படுகின்றார். அவர் ருஹூனு பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டத்தையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவ முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் சீனாவின் வுஹானில் உள்ள (HUST) பல்கலைக்கழகத்தில் உயர் தொழில்முறை நிகழ்ச்சித்திட்டத்தை முடித்துள்ளார். அவரது கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்ற அவருக்கு மேலதிக பலத்தை அளிக்கின்றது.



## திரு. அனுர விக்ரமசேகர
உதவிப் பொது முகாமையாளர்
(பங்களிப்பு சேகரிப்பு மற்றும் மேலதிக் கட்டணம்)

திரு. அனுர விக்ரமசேகர பங்களிப்பு சேகரிப்பு மற்றும் மேலதிகக் கட்டணம் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அரச முகாமைத்துவத்தில் இளங்கலை (சிறப்பு) பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகக் கற்கையில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சான்றளிக்கப்பட்ட வணிகக் கணக்காளர் ஆவார்.

திரு. அனுர விக்ரமசேகர 2024 டிசம்பர் 3 ஆம் திகதி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் இணைந்துள்ளார்.



# முகாமைத்துவக் குழு

## நிறுவன அலுவலகம்

### பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

**திருமத. கே.எம்.டி.ஏ.யூ. குணவர்தன**
நிதி முகாமையாளர் (பங்களிப்புத் தொகை சேகரிப்பு)

**திருமத. ஏ. விதானபத்திரண**
முகாமையாளர் (மேலதிகக் கட்டணம்)

**திருமதி. என்.சி. ஏபா**
நிதி முகாமையாளர் (பங்களிப்புத் தொகை சேகரிப்பு)
2024.03.01

**திரு. ஏ.ஜே.ஆர் அனுர**
முகாமையாளர் (சுயதொழில் மற்றும் இடம்பெயர்வு சேவைகள்)

### அங்கத்தவர் சேவைகள்

**திரு. எம் ரஹூப்தீன்**
முகாமையாளர் (அங்கத்துவ கணக்குகள்)

**திருமதி. ஏ.எச்.என். பிரியந்தி**
நிதி முகாமையாளர் (நலன் கொடுப்பனவுகள்)

**திருமதி. ஐ விஜேதுங்க**
முகாமையாளர் (அங்கத்துவக் கணக்குகள் - சிறிய வகை)

**திருமதி. டபிள்யூ.ஆர். நந்தசீலி**
முகாமையாளர் (நலன்களைத் தீர்மானித்தல்)

**திரு. எச்.கே.கே.பி. புஷ்பகுமார**
முகாமையாளர் (நலன்கள்)

**திருமதி. சீதா குமாரி பஸ்நாயக்க**
முகாமையாளர் (நலன் நிர்வாகம்)
(2025.07.24 ஆம் திகதி முதல் ஓய்வுபெற்றுள்ளார்)

### முதலீடுகள்

**திருமதி. என்.ஆர்.என். பெர்னாந்து**
நிதி முகாமையாளர்

**திருமதி. எச்.எம்.சி. தமயந்தி**
நிதி முகாமையாளர்

**திருமதி. டபிள்யூ.ஏ.ஏ. ஹங்சமாலி**
முகாமையாளர் (முதலீடு)

### நிதிப் பிரிவு

**திருமதி. எம்.ஏ.வி. குமுதினி**
நிதி முகாமையாளர் (நிதி)

### உள்ளக கணக்காய்வு

**திரு. டி.எல்.சி.டி. குமார**
முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு)

## நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்

**திரு. பீ. சரத்**
முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

**திருமதி எஸ். வீரசிங்க**
முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)

**திரு. டி.எம்.ஐ. அமிடோன்**
முகாமையாளர் (கொள்முதல்)

**திரு. ரி.எச்.சி.பி. குமார**
முகாமையாளர் (உற்பத்தித்திறன்)

## தகவல் தொழில்நுட்பம்

**திரு. பீ. டி. வடுகே**
முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

## சட்டம்

**திருமதி எஸ்.ஆர்.எஸ். புஞ்சிஹேவா**
முகாமையாளர் (சட்டம்)

**திருமதி எஸ்.பி. ராஜபக்ஷ**
முகாமையாளர் (சட்டம்)

# பிராந்திய அலுவலகங்கள்

**திரு.எம்.ஏ. சந்திரசேன**
பிராந்திய முகாமையாளர் (கொழும்பு 1 - 7)

**திரு. கே.என். அசோக**
பிராந்திய முகாமையாளர் (கொழும்பு 8-15)

**திரு. யு.எச்.எஸ். ரஞ்சித்**
பிராந்திய முகாமையாளர் - நுவரெலியா

**திரு. என்.கே.யு.கே. நாகசிங்க**
பிராந்திய முகாமையாளர் - பதுளை

**திருமதி. பிரியங்கி யூஜேரத்ன**
பிராந்திய முகாமையாளர் - களுத்துறை

**திரு. டி.எம்.கே.ஜி.ஏ.திசாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் - குருநாகல்

**திரு. டி.கே.எஸ்.எஸ். திஸாநாயக்க**
பிராந்திய முகாமையாளர் - ஹம்பாந்தோட்டை

**திரு. ஈ.எம்.எஸ்.கே. ஏகநாயக்க**
பிராந்திய முகாமையாளர் - கண்டி

**திருமதி. ஏ.கே.என். பிரசாங்கனி**
முகாமையாளர் - (சட்டம்) கண்டி

**திருமதி எஸ்.எம். குணசிங்க**
பிராந்திய முகாமையாளர் - கேகாலை

**திரு. சாகர ஹேவாகம**
பிராந்திய முகாமையாளர் - கம்பஹா

**திருமதி. சி. அபேகுணசேகர**
பிராந்திய முகாமையாளர் - மாத்தறை

**திருமதி. டபிள்யு.எம்.ஏ.ஜே.ஜே. வேலேன்திர**
முகாமையாளர் - (சட்டம்) மாத்தறை

**திரு. ப. ஹெட்டியாராச்சி**
பிராந்திய முகாமையாளர் - அநுராதபுரம் (பதில் கடமை)

**திரு.ஜெ. தமிழழகன்**
பிராந்திய முகாமையாளர் - யாழ்ப்பாணம்

**திரு. ஏ ஜி ஜி குணேந்திரா**
பிராந்திய முகாமையாளர் - காலி

**திரு. அருதுஸ்தன்**
பிராந்திய முகாமையாளர் - வவுனியா

**திரு. டி.டி.குலரத்ன**
பிராந்திய முகாமையாளர் - இரத்தினபுரி

**செல்வி. ஜே.சி. ஜயசிங்கஆராச்சி**
பிராந்திய முகாமையாளர் - அம்பாறை



# ஆளுகை அறிக்கை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அரசாங்க நியதிச்சட்ட நிறுவனமாக இருக்கும் நிலையில், எல்லா நியிதிச்சட்ட மற்றும் ஒழுங்குமுறை ரீதியான தேவைகளுக்கும் இணங்கக் கூடிய உறுதியான ஆளுகை நடைமுறைகள் ஊடாக அங்கத்தவர்களுக்கு உயர் பெறுமானத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது. சபையின் செயற்பாடுகளின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படைத்தன்மையினை மிக உயர்ந்த தரத்திற்கு கடைபிடித்தல், நம்பகத்தன்மை மற்றும் இணங்கி ஒழுகுதல் என்பன நன்கு நிறுவப்பட்ட மூவகை வழிகாட்டல் நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

### நிறுவன ஆளுகையின் செயல் சட்டகம்

சபையின் நிர்வாக அமைப்பு கீழே வரைபடமாக விளக்கப்பட்டுள்ளது:

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிறுவன ஆளுகை அமைப்பு குறிப்பிட்ட பொறுப்புகள் மற்றும் தெளிவான அறிக்கையிடல் நிரல்களைக் கொண்ட பல அடுக்கு ஆளும் குழுக்களைக் கொண்டுள்ளது. அதன் பணிப்பாளர்கள் சபை, சபையின் செயல்பாடுகள் தொடர்பான அதன் மேற்பார்வை பணியை வழங்கும் அதே வேளையில் அதன் மூலோபாய திசைமுகம், நிதி இலக்குகள், வள ஒதுக்கீடு மற்றும் இடர் நோக்குநிலை குறித்து சபையின் உயர் நிர்வாகத்துடன் தொடர்ந்தும் தொடர்பு கொள்கின்றது.




**சபையின் துணைக்குழுக்கள்**

சபையின் துணைக்குழுக்கள் குறிப்பிட்ட பொறுப்புகள் மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஆணைகளுக்குள் செயல்படுகின்றன. குழுக்கள் திறம்பட செயல்படுவதற்கும் அந்தந்த செயல்பாடுகள் குறித்து சபைக்கான பரிந்துரைகளை செய்வதற்கும் குழுவின் தலைவர்கள் பொறுப்பாக உள்ளனர்.

**முகாமைத்துவக் குழுக்கள்**

செயல்பாட்டு முடிவுகளின் முகாமை பொது முகாமையாளரின் தலைமையிலான சிரேஸ்ட நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாளாந்த செயல்பாட்டு முடிவுகளை எடுப்பதற்கும் தலைவர்/ பிரதம நிர்வாக அதிகாரிக்கு பரிந்துரை செய்வதற்கும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டுள்ளது.

நிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரங்களைப் பராமரிப்பதும் அதன்படி செயல்படுவதும் பணிப்பாளர் சபையின் கடமை மற்றும் பொறுப்பு என்பதை இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை, நல்லாட்சி கட்டமைப்புகளை செயல்படுத்துதல் மற்றும் கொள்கை கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் அதிக பொறுப்பைக் கொண்டுள்ளது. மேலும் அவை சபையின் பணி மற்றும் நோக்கத்திற்கு மிக உயர்ந்த அளவிலான ஒத்துழைப்பை சிறப்பாக வழங்குதல் வேண்டும். ஒழுங்குமுறை மாற்றங்கள், சாத்தியமான அபாயங்கள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் உள்ளக மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் நிர்வாக நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

கீழே பட்டியலிடப்பட்டுள்ள பல வெளிப்புற மற்றும் உள்ளக மாற்றக் கருவிகளுக்கு இணங்க சபையின் ஆளுகை கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது:

- 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்.
- நிதி ஒழுங்கு விதிகள் (அரசாங்க)
- பொது தொழில்முயற்சி வழிகாட்டுதல்கள் (பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்)
- சிறந்த நடைமுறைகள் மற்றும் நடத்தைக் கோவை (பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்)
- முக்கிய பங்குதாரர் குழுக்களின் உரிமைகளை நிறைவேற்றும் போது பெரு நிறுவனங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தெரிவிக்கும் CA ஸ்ரீலங்காவினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் நடத்தைக் கோவை.
- இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலை கண்காணிப்பு சபை சட்டம்
- தேசிய கொள்முதல் வழிகாட்டு நெறிகள் கோவை.
- ஊழியர் உரிமைகளப் பாதுகாக்கும் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள்
- வசூலிக்கும் முகவர்களுக்காக வரிவிதிப்பு அதிகாரிகளால் வெளியிடப்பட்ட சட்டங்கள், சுற்றறிக்கைகள், வர்த்தமானிப் பத்திரிகைகள்.
- தொடர்புடைய அரசாங்க சுற்றறிக்கைகள் (திறைச்சேரி. பொது நிர்வாக அமைச்சு)

## 1. பணிப்பாளர் சபை

### 1.1. சபை

அரசாங்க மற்றும் அதன் பங்குதாரர்கள் சார்பாக நிதியத்தின் நிர்வாகத்தில் பணிப்பாளர் சபைக்கு சட்டபூர்வமான பொறுப்பு உள்ளது. நிர்வாகமானது திறமையான செயல்பாடுகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணங்குவதற்கான உத்தரவாதத்தை வழங்கும் ஒரு பயனுள்ள உள்ளக கட்டுப்பாடு அமைப்பைப் பராமரிக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு சபை முயற்சி எடுக்கின்றது.

#### 1.1.1 பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள்

பணிப்பாளர்கள் சபை பரந்த அளவிலான பின்னணியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றது. (நிதி, வர்த்தகம், தொழில் வழங்குனர் கூட்டமைப்பு, தொழிற்சங்கம் போன்றவை) அதிக பன்முகத்தன்மையை ஊக்குவித்தல். சபைக் கூட்டங்களில் கலந்துரையாடப்படும் விடயங்கள் தொடர்பான ஒரு சுயாதீனமான பார்வையை வழங்க இது அவர்களுக்கு உதவுகின்றது.

சபையானது பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- அமைச்சரினால் நிமிக்கப்படும் நான்கு உறுப்பினர்கள்
- நிதி விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- வர்த்தக விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- இலங்கை தொழில் வழங்குநர் சங்கத்தால் நியமிக்கப்படும் ஓரு உறுப்பினர்
- ஒவ்வொன்றும் 100,000 அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுக் குழுவுடன் ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்.

#### 1.1.2 பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள்

பணிப்பாளர் சபை தனது கட்டாய உரிமைகளையும் பொறுப்புகளையும் நேர்மையுடனும், பொது வளங்களின் பாதுகாவலராக நல்ல நம்பிக்கையுடனும் பயன்படுத்த வேண்டும். சபை எப்போதுமே அதன் பிரதான பொறுப்புகள் குறித்து விழிப்புடன் இருத்தல் வேண்டும். எந்தவொரு தீர்மானம் மற்றும் செயல்களின் முடிவுகள் இறுதியில் பொதுமக்களால் பொறுப்பேற்க வேண்டியிருப்பதனால் சரியான திட்டமிடலுடன் செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். சபை கூட்டங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் பின்வருமாறு :-

- கொள்கை உருவாக்கம்
- நிதியத்தின் செயலாற்றுகையை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- துணை நிறுவனங்கள் / கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் மற்றும் பிற முதலீடுகளின் செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- வருடாந்த செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்
- செயற்பாட்டு மூலதனத்தை முகாமை செய்தல்
- காலாண்டு, அரை ஆண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்

சபையானது வழமையாக ஒரு மாத இடைவெளியில் மற்றும் தேவைப்படும் போது ஒன்றுகூடும். இவ்வாண்டினுள் சபை பதினொரு 15 தடவைகள் ஒன்றுகூடியது. சபைக் கூட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக சபைக் கூட்டங்களுக்கு மூன்று நாட்களுக்குக் குறையாத வேலை நாட்களுக்கு முன்னர் மற்றும் நன்கு முன்கூட்டியே சபை குறிப்பாணைகள் வழங்கப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போதான வரவு கீழே தரப்பட்டுள்ளது.

| பெயர் | பங்கு பற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை | 2024 நிதி ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திரு. டி.எல்.பி. ரோஹண அபயரத்ன (2024.10.05 ஆம் திகதி வரை) | 12 | 15 |
| திரு. சோமசிறி ஏகநாயக்க (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்) | 03 | 15 |
| திரு. கே.ஜி.எம். ஹரிந்திர (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்) | 12 | 15 |
| திரு. எஸ்.எப்.எச். பெர்னாந்து | 13 | 15 |
| திரு. எம்.பி. பார்த்தீபன் | 08 | 15 |
| திரு. எம்.சி. சுபசிங்க (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்) | 02 | 15 |
| திருமதி. கே.ஏ.பி. டி சில்வா | 10 | 15 |
| திரு. அதுல ஹரிச்சந்திர (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்) | 03 | 15 |
| திரு. இந்திகா பத்தேவிதன (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்) | 03 | 15 |
| செல்வி. கே.எஸ். தயாரத்ன (2024.10.25 வரை) | 08 | 15 |
| திரு. கே.டி.ஐ. பிரேமரத்ன (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார் | 02 | 15 |
| திரு. ஜூட் டினால் பீரிஸ் | 07 | 15 |
| திரு. எல். எஸ். தேவேந்திர (2024.10.11 ஆம் திகதி வரை) | 10 | 15 |
| திரு. டபிள்யூ. எம். நுராஜித் சிங் (2024.10.11 ஆம் திகதி வரை) | 08 | 15 |
| திரு. சி. எஸ். திசாநாயக்க (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்) | 03 | 15 |
| திரு. கே. என். பிரேமசாந்த (2024.10.07 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்) | 03 | 15 |

### 1.1.3 பணிப்பாளர் சபையின் நடுநிலமை

நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் நிறுவனத்தை திறம்பட நிர்வகிப்பதற்கும், நல்ல நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரத்திற்கு இட்டுச் செல்வதற்கும், பெருநிறுவன நோக்கங்களை அடைவதற்கும் தேவையான நிபுணத்துவம், திறன்கள் மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். தொலைநோக்கு, தலைமைப் பண்பு, பெற்ற திறமை, நேரடி நேர்மை ஆகிய குணங்கள் கொண்டவர்கள். குழு உறுப்பினர்களின் தனிப்பட்ட தொழில்முறை விவரங்கள் இந்த அறிக்கையின் பக்கம் 176இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

### 1.1.4. பயனுள்ள பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு போதுமான நேரம்

சபை வழக்கமாக மாதாந்தம் கூடுகிறது. ஒரு குழு கூட்டத்திற்கு சராசரியாக 3 மணி நேரம் செலவிடப்படுகிறது. சபைக்கூட்ட பத்திரங்கள் ஆய்வு செய்வதற்கும் சபை உறுப்பினர்களுக்குப் போதுமான நேரம் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், கூட்டத்திற்கு 3 வேலை நாட்களுக்கு முன்னதாகவே சபைக்கூட்ட பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

### 1.1.5. சபை செயலாளர்

சபை நடைமுறைகள், சட்டம் மற்றும் தொடர்புடைய விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க சபைக்கு ஆலோசனை வழங்குவதும் நம்பகமான மற்றும் பொருத்தமான தகவல்களை உறுதி செய்வதும் சபைக்குப் பொறுப்பான தொழில்சார் தகுதிவாய்ந்த நிறுவன செயலாளரின் பொறுப்பாகும். சபைக்குரிய ஆலோசனை சேவைகளை சபையின் அனைத்து உறுப்பினர்களும் சபை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். சபை கூட்டங்களை நிர்வகிக்கும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதையும் சபை ஆவணங்களை சரியான நேரத்தில் விநியோகித்து சபையின் திறமையான செயல்பாட்டை செயலாளர் உறுதிசெய்கின்றார்.

### 1.1.6 சபை செயலாளரின் வகிபாகம்

சபை நடைமுறைகள் பின்பற்றப்படுவதை சபை செயலாளர்

உறுதி செய்ய வேண்டும். சபை நடவடிக்கைகள் தொடர்பான சட்ட தேவைகள் குறித்த வழிகாட்டுதலை வழங்க வேண்டும். செயலாளரின் பிரதான கடமைகள் பின்வருமாறு :

- பணிப்பாளர் சபை கூட்டங்கள், கூட்டங்களின் குறிப்புகள், சபை ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களின் தகவல்களை அறிவித்தல்.
- பணிப்பாளர் சபை முடிவுகளின் நடவடிக்கைகளைப் பின்னூட்டம் செய்தல்.
- உள்வாரி மற்றும் வெளிவாரி தகவல்களை வழங்குவதன் மூலம் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு உதவுதல்.

### 1.2 தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

முழு நிர்வாக கட்டமைப்பினதும் முக்கிய இணைப்பாக இருக்கும் தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்துவார். முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் அதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அவர் பொறுப்புடையவர்.

#### 1.2.1 தவிசாளரின் நியமனம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான தவிசாளர் அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

#### 1.2.2 தவிசாளரின் பொறுப்புக்கள்

முழு நிர்வாக கட்டமைப்பினதும் முக்கிய இணைப்பாக இருக்கும் தவிசாளர் ∴ பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்துவார். முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் அதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அவர் பொறுப்புடையவர்.

#### 1.2.3 மூலோபாய மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளின் சமநிலை

பொறுப்புகளை திறம்படப் பிரிப்பதன் மூலம் அதிகாரத்தின் சரியான சமநிலை உறுதி செயயப்படுகிறது. தவிசாளரின் பங்கு பொது முகாமையாளரிடம் இருந்து வேறுபட்டது. தவிசாளர் ஒரு நிர்வாக பணிப்பாளராக உள்ளார் மற்றும் குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குகிறார், அதே நேரத்தில் பொது முகாமையாளர் செயல்பாட்டுத் தலைமையை வழங்குகிறார் மற்றும் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கவில்லை. தவிசாளர் மற்றும் பொது முகாமையாளரின் முக்கிய பங்கு∴ பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**தவிசாளர்**

சபையின் ஒட்டுமொத்த மூலோபாய பார்வை

மூலோபாய நடத்தையை உயர் மட்டத்தில் பேணல்

அனைத்து மூலோபாய திசைகளுக்கும் பணிப்பாளர் சபையின் செயல்திறனை உறுதி செய்தல்

இலங்கை அரசாங்கம் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் பயனுள்ள தொடர்பை பேணுதல்

அனைத்து பணிப்பாளர்களுக்கும் போதுமான தகவல்கள் கிடைப்பதை உறுதி செய்தல்

பணிப்பாளர் சபை முழுவதும் நெறிமுறை நடத்தையை நிறுவுதல்

**பொது முகாமையாளர்**

நோக்கங்களை எட்டுவதற்கு மூலோபாய பார்வையை செயல்படுத்துதல்

நிறுவன திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட செயல்திறன் இலக்குகளை அடைதல்

லக்குகளை தொடர்ந்து கண்காணித்து அதன் சாதனைகளை பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல்

அங்கீகரிக்கப்பட்ட இடர் மற்றும் வலுவான உள்ளக கட்டுப்பாட்டிற்குள் சபை செயல்படுவதை உறுதி செய்தல்.

சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு செயல்பாட்டுத் தலைமைத்துவத்தை வழங்குதல்.



# கணக்காய்வு குழு
## அறிக்கை - 2024

### குழுவின் பொருந்தனை

கணக்காய்வுக்குழு பணிப்பாளர் சபையின் துணைக்குழுவாக, நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றும் செயற்பாட்டில் பணிப்பாளர் சபைக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்குதல்.

### குழுவின் அமைப்பு மற்றும் கூட்டங்கள்

கணக்காய்வுக்குழு, சுயாதீன நிறைவேற்றுத்தரத்தைச் சாராத பணிப்பாளர்கள் இருவரைக் கொண்டுள்ளது.

| பெயர் | பதவி | கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திருமதி. கே.எஸ். தயாரத்ன | குழுவின் தலைவர் | 2/2 |
| திரு. கே.ஜீ. மதுசான் | குழு உறுப்பினர் | 1/2 |
| திருமதி. கே.ஏ.பி. டி.சில்வா | குழு உறுப்பினர | 2/2 |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | குழுச் செயலாளர் | |

### கணக்காய்வுக் குழுவின் கடமைப் பொறுப்பு

**குழுவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:**

- நடைமுறையிலுள்ள உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதி, நிதி அறிக்கையிடல் செயன்முறை, ஏற்புடைய கணக்கீட்டுத் தரங்களுக்கான இசைவு மற்றும் ஏற்புடைய ஒழுங்குபடுத்தல் தேவைகள் போன்ற எண்ணளவான மற்றும் பயனுறுதிமிக்க மீளாய்வை மேற்கொள்ளல்.
- முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் அர்த்தமுள்ள மதிப்பீடுகள் மற்றும் உறுதிப்பாடுகளை மீளாய்வு செய்தல்.
- பணிப்பாளர் சபைக்கு பொருத்தமான பரிந்துரைகளை செய்தல்.

### உள்ளக கணக்காய்வு

சபையின் உள்ளக கணக்காய்வுப் பணிகள், பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) அவர்களின் தலைமையில் வழிநடாத்தப்படுகின்றதோடு, உள்ளக கணக்காய்வின் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் மற்றும் அவற்றுக்கு முகாமைத்துவம் வழங்கும் பதிலளிப்புக்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. மொத்த நிர்வாகக் கட்டமைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் அந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றம் குறித்து அடிக்கடி பின்னூட்டம் செய்யப்படும்.

### வெளிவாரி கணக்காய்வு

கணக்காய்வுக் குழுவினால் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைகளை முறையாக கருத்திற்கொண்டு அவற்றை மீளாய்வு செய்து கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்றது.

### கவனம் செலுத்தப்படும் பிரதான துறைகள்

வேறுபடுத்தாத வருமதிகள், பொருள் சுற்றாய்வுச் சபை, பிராந்திய அலுவலகங்கள் மூலம் செய்யப்படும் சேகரிப்புக்கள் மற்றும் நிதி மற்றும் காசோலைகளை வங்கியில் வைப்பிலிடல், சட்டத்திற்குச் செய்யப்படும் திருத்தங்களின் முன்னேற்றம், நவம் மாவத்தையில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தின் வருமானம், அங்கத்துவ நலன்களை செலுத்தும் செயன்முறை விடயத்தில் உள்ளக கட்டுப்பாட்டு விதிகள், நிதி அறிக்கையிடல் செயன்முறை மற்றும் நீதிமன்றத்தின் ஊடாக பங்களிப்புத் தொகை மற்றும் மேலதிகக் கட்டணம் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வுக் குழுவினால் வருடத்தினுள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### அறிக்கையிடல்

குழுவின் கண்டுபிடிப்புகள் மற்றும் அவற்றுக்குரிய பரிந்துரைகள், எழுத்துமூல மற்றும் வாய்மூலமாக சுருக்கமாக குறிப்பிடுதல் மற்றும் குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்படும் விடயங்களை அறிக்கைகள் மூலம் சபைக்கு முன்வைப்பதன் மூலம் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்படுகின்றது.

### முடிவுரை

வருடத்தில் குழுக் கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் மற்றும் ஏற்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பற்றிய ஆழமாக பரிசீலனைக்கு எடுத்து அவை தொடர்பில் பணிப்பாளர் சபைக்குத் தேவையான பரிந்துரைகளை சமர்ப்பித்து சபையின் சிரேட்ட முகாமைத்துவத்திற்குத் தேவையான வழிகாட்டல்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்படுகின்றது. முதலீட்டுகளை பாதுகாப்பாக பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு, நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதி நிலைமை மற்றும் பெறுபேறுகள், உண்மையான தகவல்களுடன் எண்ணிக்கை அடிப்படையிலான வழுக்கள் இன்றி காணப்படுவதாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அந்த நடவடிக்கைகள் போதுமானவை என்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும்.

கணக்காய்வுக்குழு சார்பாக,

**ஒப்பம் : திருமதி கே.எஸ். தயாரத்ன**
தலைவர்
கணக்காய்வுக்குழு

# இடர் முகாமைத்துவக் குழுவின்
## அறிக்கை



### நோக்கம்

நிறுவன இடர் முகாமை (நுசுஆ) என்பது நமது வணிகச் சூழலில் உள்ளார்ந்த அபாயங்களைக் கண்டறிந்து, மதிப்பிடவும், நிர்வகிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறை சாத்தியமான பாதகமான இடர் சூழ்நிலைகளை எதிர்பார்க்கவும், அவற்றுக்கு சிறந்த முறையில் பதிலளிக்கவும் உதவும். நமது இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பரீட்சயங்கள் மூலோபாய நோக்கங்களை அடைவதிலும், நமது பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும் ஒரு முக்கிய அங்கமாக காணப்படும்.

### இடரைக் கட்டுப்படுத்தல்

பணிப்பாளர் சபை, கணக்காய்வுக் குழுவின் மற்றும் இடர் முகாமைத்துவக் குழுவின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு இடர் முகாமைத்துவ செயன்முறைக்கு பொறுப்பாகும்.

### பிரதான அபாயங்கள்

| ஆபத்து | சமாளிக்கும் உத்திகள் |
|---|---|
| **கடன் ஆபத்து**<br>தொழில் வழங்குநர் ஒருவருக்கு தனது உறுப்பினர் ஒருவரின் பங்களிப்பு பொறுப்பு மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்ற இயலாதவிடத்து கவனம் செலுத்தப்படும். | • அடிக்கடி மீளாய்வு<br>• தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள்<br>• முனைப்புடன் அமுல்படுத்தும் செயற்பாடுகள் |
| **சட்ட மற்றும் ஒழுங்குமுறை ஆபத்து**<br>சட்டப்பூர்வ மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்காததால் எழுகிறது. | • அனைத்து கொள்கை மாற்றங்கள் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் புரிந்து வைத்திருத்தல்.<br>• ஒழுங்குமுறை விழிப்புணர்வை மேம்படுத்துதல். |
| **முதலீட்டு அபாயங்கள்**<br>எந்தவொரு முதலீட்டின் எதிர்கால இழப்பு அல்லது குறைவான செயல்திறன் அபாயத்துடன் தொடர்புடையது. | • வழக்கமான முதலீட்டுக் குழு கூட்டங்கள்.<br>• பங்கு நிறுவனங்களின் சந்தை மறு மதிப்பீட்டை அளவிடுதல்.<br>• முதலீட்டுக் கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் இணங்குதல்.<br>• பணிப்பாளர் சபையினால் தொடர்ந்து மீளாய்வுகளை மேற்கொள்ளல். |

| | |
|---|---|
| **வட்டி விகித ஆபத்து**<br>நிதிக் கருவிகளின் பெறுமதியைப் பாதிக்கும் வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் ஆபத்து. | • வழக்கமான பொருளாதார மீளாய்வு<br>• இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி மதிப்பீடுகள்.<br>• அறிவியல் ரீதியான முன்னறிவிப்பு முறைகளைப் பயன்படுத்துதல். |
| **மனித அபாயங்கள்**<br>சீரேட்ட மற்றும் நடுத்தர நிர்வாக மட்டத்தில் திறமையான ஊழியர்களை ஈர்க்க மற்றும் தக்கவைக்க முடியாத ஆபத்து. | • தொடர்ச்சியான திட்டமிடல்.<br>• திறன்விருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள்.<br>• தொழிலாளர் வருவாயைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.<br>• நிரல் அமைச்சகத்துடன் வழக்கமான தொடர்புகள் |
| **செயல்பாட்டு அபாயங்கள்**<br>போதுமான அல்லது தோல்வியுற்ற உள் செயல்முறைகள், அமைப்புகள், நபர்கள் அல்லது வெளிப்புற நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு ஆபத்து. | • செயல்முறை கண்காணிப்பு மேம்பாடுகள்.<br>• உள்ளக கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியான மீளாய்வு<br>• கைமுறையாக வேலை செய்வதற்குப் பதிலாக கணினி நிகழ்ச்சித்திட்டங்களைப் பயன்படுத்துதல்.<br>• உள்ளக கணக்காய்வு |
| **தொழில்நுட்பத்தின் ஆபத்து**<br>தகவல் தொடர்பாடல் தோல்விகள், முறிவுகள் மற்றும் செயலிழப்புகளுக்கான சாத்தியக்கூறுகளுடன் தொடர்புடையது, இதையொட்டி, மீட்பு இல்லாமை பற்றிய ஆரம்ப விழிப்புணர்வை ஏற்படுத்தல். | • காப்புப்பிரதிகளின் சரியான பராமரிப்பு.<br>• கணினி முறைமைகளின் பாதுகாப்பு மேம்பாடுகள். |
| **சைபர் பாதுகாப்பு ஆபத்து**<br>தகவல் தொழில்நுட்ப அமைப்புகளின் தோல்வி அல்லது சைபர் தாக்குதல்களால் சாத்தியமான நிதி இழப்புகள், செயல்பாடுகளில் இடையூறு மற்றும் நற்பெயர் சேதம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆபத்து. | • மெய்நிகர் தனியார் இணைய (vpn) சேவைகளைப் பயன்படுத்துதல்.<br>• மேம்படுத்தப்பட்ட கணினி முறைமைப் பாதுகாப்பு.<br>• நிபுணர்களின் ஆலோசனை. |

## முடிவுரை

சாத்தியமான அபாயங்களைக் கண்டறிவதற்கும், அவற்றை நிர்வகித்து தணிப்பதற்குப் போதுமான முகாமைத்துவ கட்டமைப்பு இருப்பதை இடர் முகாமைத்துவ உறுதிசெய்தல் வேண்டும்.

**ஒப்பம் : கே.எஸ். வெலிவிட்ட**
பிரதிப் பொது முகாமையாளர்
(உள்ளக கணக்காய்வு)
இடர் முகாமைத்துவ இணைப்பாளர்

# முதலீட்டுக் குழுவின்
## அறிக்கை



சபையின் முதலீட்டுக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, முதலீட்டுப் பிரிவின் முதன்மை முதலீட்டு நோக்கங்களான பாதுகாப்பு, பணப்புழக்கம் மற்றும் வருமானங்களை அடைவதில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக சபையின் முதலீட்டுக் குழு நிறுவப்பட்டுள்ளது. மேலும், முதலீட்டுக் கொள்கையில் சொத்து ஒதுக்கீடு வழிகாட்டல்கள் மற்றும் கட்டுப்பாடுகளின் கட்டமைப்பிற்குள் பல்வேறு நிதி தயாரிப்புகளில் செய்யப்படும் முதலீடுகளின் செயல்திறனைக் கண்காணிப்பதில் சபைக்கு உதவுவதற்கும் இந்தக் குழு கடமைப்பட்டுள்ளது. அபாய அடிப்படையிலான முதலீடுகள் (பங்கு கொள்முதல் திட்டங்கள் மற்றும் கடன் பத்திரங்கள் போன்றவை) குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்கும் நிலையான வருமானப் பத்திரங்கள் மற்றும் பங்கு முதலீடுகளின் செயல்திறனை மீளாய்வு செய்வதற்கும் குழு ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை கூடுகின்றது.

### கட்டமைப்பு

வருடத்தில் முதலீட்டுக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு:

| பெயர் | பதவி |
|---|---|
| திரு. அத்துல ஹரிச்சந்திர* | பணிப்பாளர் |
| திருமதி. கே.வீ.சீ. தில்ருக்ஷி | திறைசேரியின் பிரதிநிதி |
| திரு. ஆர்.கே. ஜயலத் | பொது முகாமையாளர் (பதில் கடமை) |
| திரு. எம்.ஏ.கே. அலுத்கமகே | பிரதிப் பொது முகாமையாளர் (முதலீடு) |
| திரு. டி.ஏ.பி. கருணாரத்ன** | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) |

* 2024 ஒக்டோபர் மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

** 2024 நவம்பர் மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

| பெயர் | கலந்துகொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. அத்துல ஹரிச்சந்திர* | 2/10 |
| திருமதி. கே.வீ.சி. தில்ருக்ஷி | 10/10 |
| திரு. ஆர்.கே. ஜயலத் | 4/10 |
| திரு. எம்.ஏ.கே. அலுத்கமகே | 10/10 |
| திரு. டி.ஏ.பி. கருணாரத்ன** | |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | 8/10 |

* கிட்டத்தட்ட மற்றும் பௌதீக ரீதியில்



# முகாமைத்துவக் குழு
## அறிக்கை

### அமைப்பு

மீளாய்வுக்குரிய வருடத்தில் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு:

### தவிசாளர், பொது முகாமையாளர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம்

நிதியத்தின் செயற்பாடுகளின் முகாமைத்துவத்திற்கான பொறுப்பு தலைவர் மற்றும் சிரேக்ஷ்ட முகாமைத்துவத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை பயனுறுதிமிக்கதாகச் செயற்படுத்துவதற்கு அவர்கள் பொறுப்பாயுள்ளனர். நன்கு கவனத்திற்கொண்ட தீர்மானங்களைப் பெறுவதற்கு இயலுமாக்க சபைக்கு தகவல்களையும் தேவையான விளக்கங்களையும் தலைவரும் சிரேக்ஷ்ட முகாமைத்துவக் குழுவும் வழங்கும். சபையின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் நிதியத்தின் பயனுறுதிமிக்க முகாமைத்துவத்திற்கு செயற்படு திட்டங்கள், வரவுசெலவுகள், முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பேணுதல் ஆகியவற்றை அவர்கள் முறைப்படுத்துவார்.

எனவே, பருவகால முன்னேற்றக் கண்காணிப்பிற்காக சபையிலுள்ள முக்கியமானதொரு கருவியாக முகாமைத்தவக் கமிட்டி உள்ளது. இக்கமிட்டி கவனஞ் செலுத்தவேண்டிய முக்கிய விடயங்களாக உள்ளடங்க வேண்டியவை:-

- இன்னும் செயற்படுத்தப்படாத முன்னைய கூட்டங்களில் எடுத்த சபைத் தீர்மானங்கள்
- மாற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவசியமான விலகல்களுக்கான காரணங்களை இனங்காணல் மற்றும் இலக்குகளுக்கு எதிரான உண்மையான செயலாற்றுகைகளை மீளாய்தல்
- பணப்பாய்ச்சல்களின் விமர்சனமிக்க மதிப்பீடு மற்றும் எதிர்வரும் காலாண்டிற்கான திட்டமிடப்பட்ட தேவைகள்
- கடன் ∴காசு முகாமைத்தவம்
- அவசரக் கொள்வனவுகளைத் தவிர்ப்பதற்கு கொள்வனவுத் தாமதங்களை (ஏதேனும் இருப்பின்) பின்னூட்டம் செய்தல்
- EPF, ETF மற்றும் வரிகள் போன்ற சட்ட ரீதியான கட்டணங்களின் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல்
- சபையினால் தீர்மானங்களை எடுத்தலை எளிதாக்குவதற்கு நியாயப்படுத்துகைகளுடன் தேவையான தொழில்நுட்ப மேம்பாடு
- மேம்படுத்தல்/ திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்கான மாற்று நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கு ஊடகங்கள் ஊடான முறைபாடுகள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர் திருப்தி/ அதிருப்தி குறித்து பின்னூட்டஞ் செய்தல்
- திருத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஏதேனும் புதிய முன்மொழிவுகள்
- நிர்வாகம் மற்றும் தாபனத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும்
- வேறு ஏதேனும் நாளாந்த செயற்பாட்டுப் பிரச்சினைகள்.

# இடர் முகாமைத்துவம்




## பின்னணி

நன்கு நிர்வகிக்கப்படும் சட்டப்பூர்வ அமைப்பாக, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் பணி வெளிப்பாடுகளில் சில அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அத்தோடு, வணிக வாய்ப்பாக ஆபத்தை எதிர்கொள்கின்றது. வணிக நோக்கங்களின் வரையறையுடன் ஆரம்பிக்கும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இடர் முகாமைத்துவம் கருதப்படுகிறது. அதன் பின்னர் அனுமானிக்கக்கூடிய பின்பற்றப்படக் கூடாத வணிக வெளிப்பாடுகள் குறித்த பின்வரும் கொள்கைகளின் சிக்கல்கள் மற்றும் ஆபத்துக் காரணிகளை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்தல். உள்ளார்ந்த நடவடிக்கைகள் தொடர்பான இடர் முகாமைத்துவ முறைகள் மற்றும் நடைமுறைகளையும் அது குறிக்கும்.

ஒவ்வொரு நிறுவனமும் அதன் வெற்றியை அச்சுறுத்தும் அபாயங்களை எதிர்கொள்கின்றது. அதிர்ச்சிகள் அல்லது இயற்கை நிகழ்வுகள், தொற்றுநோய் நெருக்கடிகள் மற்றும் சுற்றுச்சூழல்/சமூக/நிர்வாகச் சிக்கல்கள் ஆகியவை தேசிய மற்றும் உலகப் பொருளாதாரங்களை மோசமாகப் பாதிக்கும் நிகழ்வுகளாகும். தொழில்நுட்பம் நம் வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது. ஆனால் புதிய தொழில்நுட்பங்களின் முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சியை உந்தித் தள்ளும் உற்பத்தித்திறன் அளவைத் தடுக்கின்றது.

இருப்பினும், (Fintech) மற்றும் ரெக்டென் (Regtech) கிரிஸ்டொஎசட்ஸ் (Cryptoassets) நிதிக் குற்றங்கள் (Financial Crimes) சய்பர் பாதுகாப்பு (Cyber Security) மற்றும் தரவுப் பாதுகாப்பு (Data Security) போன்ற சீர்குலைக்கும் புதிய கண்டுபிடிப்புகள் இடர் முகாமைத்துவ செயல்பாட்டில் சாதகமற்ற செயற்பாடுகளாகும்.

## பயனுள்ள கொள்கைகளுக்கான பயணப் பாதை

ஆளுமை, இடர் மற்றும் இணக்கம் அல்லது (GRC) என்ற சுருக்கப் பெயரானது மிகவும் மதிக்கப்படும் சொற்றொடர் ஆகும். மேலும் இந்த அம்சங்கள் ஒரு புதிய வகை பிரதிபலிப்பாக மாறியுள்ளன. இன்றைய நிறுவனங்கள் தங்கள் வணிக செயல்பாடுகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை பின்பற்றுகின்றன. நிர்வாகம், இடர் மற்றும் இணக்கம் அல்லது (GRC) எவ்வாறு சிறந்த முறையில் தங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படலாம் என்பதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## அபாயக் கட்டுப்பாடு

பணிப்பாளர் சபை இடர் முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பை இடர் முகாமைத்துவக் குழுவிற்கு வழங்கியுள்ளது.

அனைத்து வகையான இடர்களையும் அடையாளம் காணுதல், அளவீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை சுயாதீனமாக மீளாய்வு செய்யும் நோக்கில் இடர் முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாகும். மேலும், இடர் முகாமைத்துவக் குழு, நிறுவனத்தின் வணிக உத்திகளுக்கு இணங்க, ஒரு விவேகமான இடர் எடையுள்ள நிதியை அங்கீகரிக்க பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைக்கிறது. அபாயத்தை புரிந்துகொள்ளல் மற்றும் முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காகஇடர் பகுப்பாய்வு, அளவீடு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த மூன்று வகை உத்திகளும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பின்பற்றப்பட்டுள்ளது.


நிர்வாகம்
உள்ளக கொள்கைகள்
செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பு மூலம்
வலுவான ஒழுக்க நடத்தை வினைத்திறன்
மூலோபாயங்கள்
செயன்முறை
பொதுமக்கள்
தொழில்நுட்பம்
இடர் முகாமைத்துவம்
அபாய தாக்கம்
வெளிவாரி ஒழுங்குவிதிகள்
இசைவு

# அபாய
# இணக்கம்




ஏனைய அனைத்து பிரிவுகளும்
ஊ.ந.பொ.நி.ச.
உலகளாவிய ஆபத்து நிறமாலை
மூலோபாய மற்றும் செயற்பாடுகள்
கடன், திரவத்தன்மை, சந்தை முதலீடு

| உள்ளக அபாய இயக்கி | அபாயத் துறைகள் | தணிப்பு மூலோபாயங்கள் |
|---|---|---|
| மூலோபாய அபாயம் | வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பாதகமான வணிக முடிவுகள், தவறான முடிவுகளைச் செயல்படுத்துதல் அல்லது வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பதிலளிக்காத தன்மை ஆகியவற்றால் எழும் வருவாய் மற்றும் மூலதனத்திற்கு தற்போதைய அல்லது எதிர்கால ஆபத்து. | தொடர்புடைய வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்குதல், முழு நிறுவனத்திற்கான திட்டம் மற்றும் செயல் திட்டத்தை முன்கூட்டியே தயாரித்தல் மற்றும் மாறுபாடுகளை தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் உள்ளக மற்றும் வெளிப்புற மூலோபாய ஆபத்து குறைக்கப்படுகிறது. |
| செயற்படுத்தல் அபாயம் | போதிய அல்லது தோல்வியுற்ற உள்ளக செயல்முறைகள், நபர்கள் மற்றும் அமைப்புகள் அல்லது வெளிப்புற நிகழ்வுகளால் ஏற்படும் இழப்பு ஆபத்து. | கட்டுப்பாடுகள், உத்தரவாதம் மற்றும் கணினி கணக்காய்வுகள் மற்றும் வழக்கமான தகவல் தொழில்நுட்ப அமைப்பு புதுப்பிப்புகள், வணிக தொடர்ச்சி திட்டமிடல் மற்றும் பேரழிவு மீட்பு நடைமுறைகள், தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு மற்றும் பௌதீக பாதுகாப்பு ஆபத்து விழிப்புணர்வு பயிற்சி ஆகியவற்றின் மூலம் செயல்பாட்டு ஆபத்து குறைக்கப்படுகிறது. |
| கடன் அபாயம் | தங்களது பொறுப்புகளை நிறைவேற்று வதற்காக எதிர் தரப்பு அல்லது வழங்குநரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படும் இழப்பு ஆபத்து. | ஒப்பந்தங்களில் கையொப்பமிடுதல், கடன் வரம்புகளை பராமரித்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் பிணையத்தைப் பெறுதல் ஆகியவற்றின் மூலம் கடன் ஆபத்து குறைக்கப்படுகிறது. |
| சந்தை அபாயம் | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று உள்ளூர் நிதிச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் வருமானத்தை ஈட்டுவதாகும். இதன் தன்மை விலை நிச்சயமற்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டது. நிதிச் சான்றிதழ்களின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களால் இழப்புகள் ஏற்படும். | தனித்துவமான முதலீட்டு முகாமைத்துவ முறைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் நிலையற்ற இடர் சந்தைகளில் பணப்புழக்கம் ஆபத்து, வட்டி விகித ஆபத்து மற்றும் பங்கு விலை ஆபத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சந்தை அபாயம் குறைக்கப்படுகிறது. |
| முதலீட்டு அபாயம் | முதலீடு என்பது தற்போதைய வளங்களைப் பயன்படுத்துவதை கைவிடுவதற்கான முடிவாகும். மாறாக, இந்த எதிர்கால வருமானங்கள் அவற்றின் தற்போதைய மதிப்புகளில் முதலீடு செய்வதன் அபாயத்தை விட அதிக எதிர்கால வருமானத்தை உருவாக்கப் பயன்படும் என்ற நம்பிக்கையில் எதிர்கால நலன்கள் செயல்படாது அல்லது தேவையான அளவை விட குறைவது ஆபத்தாகும். | சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக காரணிகள் மூலம் பொறுப்பான முதலீடு என்ற கருத்தை கருத்தில் கொண்டு முதலீட்டுக் கொள்கையை பின்பற்றுவதன் மூலம் முதலீட்டு அபாயங்கள் குறைக்கப்பட்டுள்ளன. |
| திரவத்தன்மை அபாயம் | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணப்புழக்கம், மற்றவற்றுடன், உறுப்பினர் உரிமைகோரல்களைச் செலுத்து வதற்கான உடனடி பணத் தேவை, தற்போது வைத்திருக்கும் பணத்தின் அளவு மற்றும் அதன் முதலீட்டுச் சொத்துக்களை பணமாக மாற்றுவது ஆகியவற்றைப் பொறுத்தது. | பணப்புழக்க அபாயமானது முதிர்வு வரம்பின் கட்டுமானம், உண்மையான மற்றும் ஒப்பந்த பண ரசீதுகளின் பகுப்பாய்வு, 'ரெபோ' போன்ற தலைகீழ் மறு கொள்முதல் திரவச் சொத்துக்களில் முதலீடு, பன்முகப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தக்கூடிய பங்குச் சந்தையில் முதலீடு போன்றவற்றால் குறைக்கப்படுகிறது. |

## செற்பாட்டு அபாய முகாமைத்துவம்

செயற்பாட்டு அபாயத்தை அடையாளம் கண்டு பல்வேறு காரணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. செயன்முறைகள், ஆட்கள், முறைமைகள் மற்றும் வெளி நிகழ்வுகள் காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை முகம் கொடுக்கும் பல்வேறுபட்ட செயற்பாட்டு ஆபத்துகளை மதிப்பீடு செய்து பின்னர் செயற்பாட்டு அபாயத்தின் பின்விளைவு ஆபத்தை குறைப்பதற்காக முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிப்பதற்காக அபாயங்களை தரப்படுத்தி அபாயப் பதிவேடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு/கிளை/குழு | | | | சந்தை இடைநேர்வுக் கட்டுப்பாடு - 2 ஆவது வரிசைப் பாதுகாப்பு | | | | | | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| 1 | ஆங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | × | | | தகவல் தொழில்நுட்பத் தொகுதி கட்டுப்பாட்டு விதிகள் மூலம் கடமைகளை ஒதுக்கி பணிப்புரை வழங்கல் |
| 2 | கடவுச்சொல் கட்டுப்பாடு | ஆயுளுளு முறையின் பிழையான கடவுச் சொல் ஒதுக்கீடு – மோசடியான இடர்நேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | | | × | i. IT தரவுத் தளத்தைப் பராமரித்தல்<br>ii. மிக சிக்கலான கடவுச்சொற்கள் |
| 3 | தகவல் தொழில்நுட்பக் கொள்கை | செயற்பாட்டு இடைநேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | | | × | i. விரிவான IT கொள்கைள்<br>ii. IT முறையிலான கணக்காய்வு |
| 4 | அங்கத்தவர்களின் பிரதான கோப்புக் தரவுகளில் மாற்றங்கள் நிகழ்தல் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | × | | | i. மின் பதிவு வசதி மற்றும் அங்கத்தவர் பிரதான கோப்புக்களின் தரவு மாற்றங்களை வரையறுத்தல் |
| 5 | நலன் கோரிக்கை - பற்றுச்சீட்டுக் கொடுப்பனவு | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | × | | | வங்கிகளில் பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுக்காக MASS முறைமையில் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை ஒன்றிணைத்தல் |
| 6 | நலன் கோரிக்கை – வேலைப் பத்திரம் தயாரிப்பு | மோசடியான இடர்நேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | வேலைப் பத்திரங்களுக்குத் தேவையான தரவுக் குறிப்பு பிரவேசங்கள் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப தொகுதி கட்டுப்பாடு |
| 7 | ஒதுக்கப்படாத வருமதிகள் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | | | × | வேறுபடுத்தாத வருமதிகள் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு கட்டுப்பாடு |
| 8 | அங்கத்தவரின் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் அற்ற அங்கத்தவர் கணக்குகள் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள் | | | × | | | × | i. குடிப்பெயர்வுக் கணக்குகளை தடுத்து வைத்தல்<br>ii. 2015 ஆம் ஆண்டுக்கு முந்திய கணக்குகளை தடுத்து வைத்தல்<br>iii. 2015 ஆண்டு முதல் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்தை மாதாந்தம் குழுவுக்கு சமர்ப்பித்தல் |

| பிரிவு/கிளை/குழு | | | | சந்தை இடைநேர்வுக் கட்டுப்பாடு - 2 ஆவது வரிசைப் பாதுகாப்பு | | | | | | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| 9 | MASS முறைமையினுள் நுழைவுப் பராமரிப்பு | மோசடியான இடர்நேர்வு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | backups களை 03 வருடங்கள் வரை நீடித்தல் |
| 10 | புதிய NIC உட்படுத்தும் போது பழைய NIC அழித்தல் | i. மோசடியான இடர்நேர்வு<br>ii. இருமுறை கொடுப்பனவு இடைநேர்வு<br>iii. தரவுகள் இழப்பு | உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | தலையீடுகளை கண்டறிதல் |
| 11 | நவம் மாவத்தை வாகனத் தரிப்பிட வருமானம் | i. வருமானம் இழப்பு<br>ii. கடன் ஆபத்து / தவறுகை இடைநேர்வு<br>iii. மோசடியான இடர்நேர்வு<br>iv. நட்டஈட்டு இடைநேர்வு | உதவிப் பொது முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனிதவளம் | | | × | × | | | i,ii,iii. சிறந்த மேற்பார்வை மற்றும் கடன் முகாமைத்துவம்<br>iv. செல்லுபடியான மற்றும் உறுதியான உடன்படிக்கைகள் |
| 12 | நுவரெலியா பிராந்திய அலுவலகம் - கோப்புக்களை நடைமுறைப் படுத்தல் | i. இசைவு இடைநேர்வு<br>ii. மோசடியான இடர்நேர்வு<br>iii. சட்ட இடைநேர்வு<br>iv. வருமானம் இழப்பு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் | | | × | × | | | i. சிறந்த கண்காணிப்பு மற்றும் செயன்முறையை விரிவுபடுத்தல் |
| 13 | பொருள் பதிவேடு முகாமைத்துவம் | i. சொத்துக்களின் பிழையான ஒதுக்கீடு<br>ii. சொத்துக்கள் இழப்பு | பிரதிப் பொது முகாமையாளர் - நிதி | | | × | × | | | i. பொருள் சுற்றாய்வு<br>ii. பொருள் பதிவேட்டு முகாமைத்துவம் |
| 14 | MASS முறையில் செலுத்தப் பட்டிருப்பினும் செலுத்தப்பட வில்லை எனக் காண்பிக்கும் அங்கத்தவர் கணக்குகள் | மோசடியான இடர்நேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள், உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | i. சகல இணைக் கணக்குகளையும் அடையாளம் கண்டு தடுத்தல் |

| பிரிவு/கிளை/குழு | | | | சந்தை இடைநேர்வுக் கட்டுப்பாடு - 2 ஆவது வரிசைப் பாதுகாப்பு | | | | | | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| 15 | போலியான தொழில் வழங்குநர் கணக்குகள் | மோசடியான இடர்நேர்வு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் பிரதிப் பொது முகாமையாளர் அங்கத்தவர் சேவைகள், உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | நிலையான தொழில் வழங்குநர் கணக்குகள் |
| 16 | சுயதொழில் - அங்கத்தவர் உரிமைகள் - குடிப்பபெயர்வு ஊழியர்கள் (புதிதாக எழுதப்பட்ட உரிமைகள்) | இருமுறை கொடுப்பனவு / மோசடியான கொடுப்பனவு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | × | | × | | | MASS பகுப்பாய்வு முறை ஊடாக உரிமை கோரிக்கை செயன்முறை |
| 17 | மோட்டார் வாகன காப்புறுதி | வாகன விபத்துக்கள் / களவு/ சேதம் | உதவிப் பொது முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனிதவளம் | | | × | × | | | நிலவும் சந்தைப் பெறுமதிக்கு காப்புறுதி செய்தல் |
| 18 | i. கையினால் எழுதப்பட்ட சுய நலக் உரிமைக் கொடுப்பனவுகள்<br>ii. 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கையினால் செலுத்தப்பட்ட சுய அங்கத்தவர் கணக்குகள் | இருமுறை கொடுப்பனவு / மோசடியான கொடுப்பனவு | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் உதவிப் பொது முகாமையாளர் தகவல் தொழில்நுட்பம் | | | × | × | | | MASS பகுப்பாய்வு முறை ஊடாக உரிமை கோரிக்கை செயன்முறை |

| | பிரதான அபாய இடைநேர்வுப் பகுதிகள் | செயற்பாடுகள் அல்லது விசேட இடைநேர்வு | அபாயத்திற்குப் பொறுப்பானவர் | ஆபாயத்தின் தாக்கம் அல்லது தீவிரம் | | | நிகழ்வதற்கான இடம்பாடு அல்லது சாத்தியம் | | | ஆபாய தணிக்கை உத்தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குறைந்த | நடுத்தர | கூடிய | குறைந்த | நடுத்தர | கூடிய | |
| | | | | | | | | | | |
| 19 | வளாகங்களை வாடகைக்கு விடுதல் / குத்தகைக்கு வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்தல் | செயற்பாட்டு இடைநேர்வு | பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம் - உதவிப் பொது முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனிதவளம் | | | × | × | | | செல்லுபடியான மற்றும் கடப்பாடுடைய ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் |
| 20 | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் காணாமல் போதல் / சேதங்கள் | பிரதிப் பொது முகாமையாளர் - நிதி | | × | | × | | | சரியான வருடாந்த பொருள் சுற்றாய்வுச் சபை<br>தகவல் தொழில்நுட்பப் பிரிவில் காணப்படும் தகவல் தொழில்நுட்ப சொத்துப் பதிவேடு.<br>காலத்திற்கு அமைய அகற்றல். |
| 21 | பிராந்திய அலுவலகங்களின் காசோலைகள் / பண வைப்பு | களவு / நட்டம் / தாமதம் | பதில் கடமை பிரதிப் பொது முகாமையாளர் - அங்கத்தவர் பணம் சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள் | | × | | | × | | உரிய மேற்பார்வை மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் |

## முடிவுரை

தனது நிறுவனம் தற்போது எதிர்கொள்ளக்கூடிய பரந்த அளவிலான அபாயங்கள் மற்றும் ஒவ்வொரு வகையின் அடிப்படை இயக்கிகள் பற்றிய புரிதலைப் பெற்ற பின்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை, அது எதிர்கொள்ளும் உண்மையான அபாயங்களை நிர்வகிக்கக்கூடிய பல்வேறு வழிகளில் கவனம் செலுத்தியது. ஒவ்வொரு வகை அபாயத்துக்கும் ஒரு அபாயப் பதிவேடு உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. இது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையுடன் தொடர்புடைய அபாயங்களையும் அதனுடன் தொடர்புடைய தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் புரிந்து கொள்ளவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் கண்காணிப்பதற்கும் உதவியது.

# நிதிக் தகவல்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2024 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **மொத்த வருமானம்** | | | | | |
| வட்டி வருமானம் | 4 | 62,194,449 | 64,834,198 | 61,819,095 | 64,380,505 |
| தேறிய வியாபார வருமானம் | 5 | 1,275,472 | 2,148,913 | - | - |
| பங்கிலாப வருமானம் | 6 | 1,494,462 | 1,209,331 | 1,494,462 | 1,209,331 |
| இலாப / நட்டக் கணக்கின் மீது ஆரம்ப சொத்துக்கள் சாதாரண பெறுமதிக்கு செம்மையாக்கப்பட்ட இலாபம் / (நட்டம்) | 7 | 2,040,218 | 1,528,360 | 2,040,218 | 1,528,360 |
| ஏனைய வருமானங்கள் | 8 | 670,069 | 756,921 | 634,132 | 674,482 |
| | | **67,674,670** | **70,477,723** | **65,987,907** | **67,792,678** |
| | | | | | |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 9 | 1,766,683 | 1,940,835 | 1,400,616 | 1,324,106 |
| நிர்வாகச் செலவினங்கள் | 10 | 397,739 | 388,683 | 325,385 | 312,763 |
| நிதிச் செலவினங்கள் | 11 | 4,614 | 4,385 | 4,336 | 4,013 |
| அங்கத்தவர் செலவினங்கள் | 12 | 597,330 | 711,058 | 591,126 | 704,507 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன்கழிப்பு | 13 | 78,088 | 61,812 | 46,129 | 40,554 |
| நடப்பு ஆண்டில் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | | 448,625 | 499,157 | 448,625 | 499,157 |
| உரிமையாண்மை முதலீடுகளின் பெறுமதி இழப்பு | 14 | (4,910) | (51,452) | (4,910) | (51,452) |
| ஏனைய செலவினங்கள் | 15 | 216,672 | 208,011 | - | - |
| | | **3,504,841** | **3,762,488** | **2,811,307** | **2,833,648** |
| | | | | | |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **64,169,829** | **66,715,235** | **63,176,600** | **64,959,030** |
| | | | | | |
| வருமானவரிச் செலவினங்கள் | 16 | (8,969,846) | (9,582,180) | (8,678,062) | (9,016,645) |
| | | | | | |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | | **55,199,983** | **57,133,055** | **54,498,538** | **55,942,384** |
| | | | | | |
| **இலாபம் குறிக்கக்கூடியது:** | | | | | |
| கம்பனி பங்குதாரர்கள் | | 55,129,839 | 57,013,988 | 54,498,538 | 55,942,384 |
| கட்டுப்பாடற்ற உரிமைகள் | | 70,144 | 119,067 | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **55,199,983** | **57,133,055** | **54,498,538** | **55,942,384** |

# இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2024 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஆண்டு 5 புலமைப் பரிசில் திட்டம் | 12.1.1 | 109,425 | 96,734 | 109,425 | 96,734 |
| நிபுனதா சவிய | 12.1.1 | 7,366 | - | 7,366 | - |
| விஸ்வா யாத்ரா உயர் கல்வித் திட்டம் | 12.1.1 | 39,468 | 99,216 | 39,468 | 99,216 |
| | | **452,742** | **549,153** | **452,742** | **549,153** |

12.1.1 பின்வரும் அட்டவணையில் ஊ.ந.பொ.நி. சுபையினால் உயர் கல்வி, தரம் ஐந்து புலமைப் பரிசில் மற்றும் நிபுணதா சவிய ஆகிய திட்டங்களுக்கு 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகைகள் காட்டப்பட்டுள்ளன.

| **கல்வி கருத்திட்டம்** | **ஏற்புடைய ஆண்டு** | **மாணவர்களின் எண்ணிக்கை** | **தொகை (ரூபா)** |
|---|---|---|---|
| தரம் ஐந்து புலமைப் பரிசில் | 2021 | 16 | 240,000 |
| | 2022 | 212 | 3,180,000 |
| | 2023 | 7323 | 109,845,000 |
| | | **7551** | **113,265,000** |
| நிபுணதா சவிய புலமைப் பரிசில் | 2022 | 5 | 91,142 |
| | | **5** | **91,142** |
| உயர் கல்வி புலமைப் பரிசில் | 2020 | 5 | 60,000 |
| | 2021 | 167 | 2,004,000 |
| | | **172** | **2,064,000** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **12.2** | **அங்கத்தவர் சேவைகள்** | | | | | |
| | தபால் மன்றும் தந்திகள் | | 22,319 | 24,734 | 22,319 | 24,734 |
| | அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | | 26,177 | 45,588 | 26,177 | 45,588 |
| | அங்கத்தவர் தொடர்பிலான செலவினங்கள் | | 1,009 | 245 | 1,009 | 245 |
| | ஊழியர் விழிப்பூட்டல் திட்டம் | | 52 | - | 52 | - |
| | பிரயாணச் செலவு மற்றும் இணைந்த படிகள் | | 12,393 | 11,447 | 6,189 | 4,897 |
| | ஊடகம் மற்றும் விளம்பரம் | | 40 | - | 40 | - |
| | புலமைப் பரிசில் செலவினங்கள் | | 954 | 943 | 954 | 943 |
| | | | **62,944** | **82,958** | **56,740** | **76,407** |
| **12.3** | **தகவல் தொழில்நுட்ப சேவைகள்** | | | | | |
| | வன்பொருள் பராமரிப்பு | | 3,203 | 5,810 | 3,203 | 5,810 |
| | மென்பொருள் பராமரிப்பு | | 13,029 | 14,140 | 13,029 | 14,140 |
| | பெறுமானத் தேய்வு | | 37,050 | 33,556 | 37,050 | 33,556 |
| | காப்புறுதி | | 393 | 305 | 393 | 305 |
| | குத்தகை மீதான கூலி | | 27,969 | 25,137 | 27,969 | 25,137 |
| | | | **81,644** | **78,948** | **81,644** | **78,948** |
| **13** | **பெறுமானத் தேய்வு மற்றும் கடன் கழிப்பு** | | | | | |
| | சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளுக்கான பெறுமானத் தேய்வு | | 66,016 | 59,055 | 46,129 | 40,554 |
| | குத்தகைக் காணி மற்றும் அபிவிருத்திப் பணியின் மூலதனமாக்கல் | | 875 | 875 | - | - |
| | உயிரியல் சொத்தக்களின் பெறுமானத் தேய்வு / பெறுமதி இழப்பு | | 11,197 | 1,883 | - | - |
| | | | **78,088** | **61,812** | **46,129** | **40,554** |
| **14** | **கழிப்பனவுக் கட்டணங்கள் மற்றும் மீளளிப்பு** | | | | | |
| | கடனாளிகள் மீதான கழிப்பனவு | | (4,792) | (49,804) | (4,792) | (49,804) |
| | SMIB கருத்திட்ட வைப்புக்கான கழிப்பனவு | | (30) | (871) | (30) | (871) |
| | NDB கருத்திட்ட வைப்புக்கான கழிப்பனவு | | (72) | (585) | (72) | (585) |
| | நிலையான வைப்புக்கான கழிப்பனவு | | (16) | (191) | (16) | (191) |
| | | | **(4,910)** | **(51,452)** | **(4,910)** | **(51,452)** |

| | | இலங்கை உப்புக் கம்பனி | |
|---|---|---|---|
| | | 2024 | 2023 |
| | | ரூ. '000 | ரூ. '000 |
| **15** | **ஏனைய செலவினங்கள்** | | |
| | விற்பனை ஊக்குவிப்புச் செலவினங்கள் | 29,116 | 34,767 |
| | டீேவு செலவினங்கள் | 73,921 | 86,245 |
| | தண்டங்களும் மிகை அறவீடுகளும் | 230 | 70 |
| | உயிரியல் சொத்துக்களுக்கான செலவினங்கள் | 9,646 | 7,334 |
| | சூழல் வேலைத்திட்டங்கள் | 38,538 | 27,490 |
| | சுற்றுலா விடுதி பராமரிப்புச் செலவினங்கள் | 14,590 | 9,494 |
| | உப்பு நூதனசாலை செலவினங்கள் | 6,624 | 4,185 |
| | துப்புரவுச் செலவினங்கள் | 23,959 | 15,867 |
| | யுவசஅைநய செலவினங்கள் | 1,454 | 1,059 |
| | சேவை நிலைய செலவினங்கள் | 14,296 | 10,361 |
| | கனிய வரிச் செலவினங்கள் | 4,298 | 11,140 |
| | | **216,672** | **208,011** |

| | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|
| | | **2024** | **2023** |
| | | **ரூ. '000** | **ரூ. '000** |
| **16** | **வருமான வரிச் செலவினங்கள்** | | |
| | **வரிக்கு முன்னரான கணக்கியல் இலாபம் / நட்டம்** | **63,176,600** | **64,958,463** |
| | | | |
| | விலக்கலிப்பு மற்றும் பிற வருமான மூலங்கள் | (2,742,071) | (2,742,071) |
| | அங்கீகரிக்கப்படாத செலவுகள் | 1,122,278 | 1,122,278 |
| | அங்கீகரிக்கப்பட்ட செலவுகள் | (24,299) | (24,299) |
| | **முதலீட்டில் இருந்து மதிப்பிடக்கூடிய வருமானம்** | **61,532,509** | **63,314,371** |
| | | | |
| | மொத்த வருமான வரிச் செலவினம் @ 14% | 8,614,551 | 8,864,012 |
| | பங்கிலாபம் - இறுதி WHT கொடுப்பனவு மீதான வரி (1,059,588.42*15%) | 978 | 159 |
| | விடுவிக்கப்பட்ட வருமானத்தின் மீதான வரி | 296 | 108 |
| | தற்போதைய வருமான வரிச் செலவு | 188,934 | 152,366 |
| | | **8,678,062** | **9,016,645** |

| | | | இலங்கை உப்புக் கம்பனி | |
|---|---|---|---|---|
| | | | **2024** | **2023** |
| | | | **ரூ. '000** | **ரூ. '000** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து வரிக்கு முன் கணக்கியல் இலாபம் / (நட்டம்)** | | | **993,229** | **1,756,205** |
| | | | | |
| அங்கீகரிக்கப்படாத வரிக்கான செலவுகள் | | | 267,686 | 138,636 |
| அங்கீகரிக்கப்பட்ட வரிக்கான செலவுகள் | | | (60,498) | (515,390) |
| | | | | |
| வணிக வருமானத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபம் | | | 823,386 | 924,039 |
| வட்டி வருமானத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபம் | | | 377,031 | 455,412 |
| **நிகர வரிவிதிப்பு இலாபம் / (நட்டம்)** | | | **1,200,416** | **1,379,451** |
| | | | | |
| **தற்போதைய வரிச் செலவினம்** | | | | |
| வியாபார வருமானம் மீதான வருமான வரி | 823,386 | 30% | 247,016 | 413,835 |
| முதலீட்டு வருமானம் மீதான வருமான வரி | 377,031 | 30% | 113,109 | 136,624 |
| **தற்போதைய வருமான வரிக் கட்டணம்** | | | **360,125** | **550,459** |
| | | | | |
| **பிற்போடப்பட்ட வருமான வரி** | | | | |
| முன்னைய ஆண்டுகளுக்கான தற்போதைய வரி வழங்கல் | | | (13,171) | 34,894 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்புக் கட்டணம் / (நேர்மாற்றம்) | | | (55,170) | (19,818) |
| **வருமானக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட வருமான வரிச் செலவினம்** | | | **291,784** | **565,534** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 17 | **(FVTPL) நிதிசார் சொத்துக்கள்** | | | | | |
| | விலைகூறிய பங்கு முதலீடு (வியாபாரம்) | | 2,646,191 | 4,463,977 | 2,646,191 | 4,463,977 |
| | | | **2,646,191** | **4,463,977** | **2,646,191** | **4,463,977** |
| 18 | **துணை நிறுவனத்தில் முதலீடு** | | | | | |
| | இலங்கை உப்புக் கம்பனி | | - | - | 470,961 | 470,961 |
| | | | **-** | **-** | **470,961** | **470,961** |
| 19 | **வேறு விரிவான வருமானத்தினால் சாதாரணப் பெறுமதிக்கு (FVOCI) நிதிச் சொத்துக்கள்** | | | | | |
| | விலைகூறிய பங்கு முதலீடு நீண்ட கால | | 14,536,111 | 10,578,443 | 14,536,111 | 10,578,443 |
| | பங்கு முதலீடு பட்டியலிடப்பட்ட | | 45 | 45 | 45 | 45 |
| | விலைகூறா பங்கு முதலீடு | | 3,779 | 4,923 | 3,779 | 4,923 |
| | விலைகூறிய அலகுகள் | | 169,039 | 181,556 | 169,039 | 181,556 |
| | வாக்குறுதிச் சீட்டுக்கள் | | 12,174 | 12,174 | 12,174 | 12,174 |
| | கழிக்க: வாக்குறுதிச் சீட்டுக்கள் மீதான மதிப்பிழப்பு | | (12,174) | (12,174) | (12,174) | (12,174) |
| | | | **14,708,973** | **10,764,966** | **14,708,973** | **10,764,966** |
| 20 | **கடன் கழிப்புக்கு விடப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள்** | | | | | |
| | திறைசேரி முறிகள் | | 547,431,692 | 420,107,732 | 547,431,692 | 420,107,732 |
| | திறைசேரி உண்டியல்கள் | | 3,119,900 | 59,813,248 | 3,119,900 | 59,813,248 |
| | விலைகூறிய - தொகுதிக்கடன் | | 4,995,749 | 6,380,273 | 4,995,749 | 6,380,273 |
| | கழிக்க - தொகுதிக்கடன் மீதான பெறுமதி இழப்பு | | (29,456) | (34,248) | (29,456) | (34,248) |
| | நிலையான வைப்புக்கள் | | 2,983,405 | 2,580,475 | 505,948 | 522,191 |
| | கழிக்க - நிலையான சொத்துக்கள் மீதான பெறுமதி இழப்பு | | (88) | (104) | (88) | (104) |
| | மீள்கொள்வனவு ஒப்பந்தம் | | 4,915,443 | 9,037,497 | 4,915,443 | 9,037,497 |
| | தொகுதிக்கடன் விலைகூறாதவை | | 835,296 | 2,232,315 | 835,296 | 2,232,315 |
| | SMIB - வீட்டுத்திட்ட வைப்பு | | 383,073 | 343,156 | 383,073 | 343,156 |
| | கழிக்க: SMIB - வீடமைப்பு வைப்பு மீதான பெறுமதி இழப்பு | | (383) | (414) | (383) | (414) |
| | NDB - வீட்டுத்திட்ட வைப்பு | | 496,325 | 579,361 | 496,325 | 579,361 |
| | கழிக்க: NDB - வீடமைப்பு வைப்பு மீதான பெறுமதி இழப்பு | | (177) | (249) | (177) | (249) |
| | **பணிக்குழாத்தினர் கடன்கள்** | | | | | |
| | விசேட கடன் | | 29,423 | 34,094 | 29,423 | 34,094 |
| | விசேட இடர்பாட்டுக் கடன் | | 428,148 | 340,218 | 321,496 | 264,049 |
| | உற்சவகால முற்பணம் | | 34 | 423 | 34 | 423 |
| | விசேட உற்சவகாலக் கடன் | | 1,785 | 1,422 | 1,785 | 1,422 |
| | விசேட முற்பணம் | | - | 21 | - | 21 |
| | வாகனக் கடன் | | 242,444 | 224,009 | 242,444 | 224,009 |
| | | | **565,832,614** | **501,639,231** | **563,248,506** | **499,504,778** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 21 | **ஏனைய சொத்துக்கள்** | | | | | |
| | திரண்ட வருமானம் | 21.1 | - | - | - | - |
| | கிடைப்பனவுகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 21.2 | 4,661,911 | 3,631,424 | 4,540,227 | 3,490,252 |
| | சரக்கிருப்புக்கள் | 21.3 | 350,269 | 579,046 | 12,036 | 13,360 |
| | | | **5,012,179** | **4,210,470** | **4,552,263** | **3,503,613** |
| | | | | | | |
| 21.1 | **திரண்ட வருமானம்** | | | | | |
| | கிடைக்கவேண்டிய வட்டி | | 24,966 | 24,966 | 24,966 | 24,966 |
| | கழிக்க: ஐயப்பாடான வருமானத்திற்கு எதிராக ஏற்பாடு | 21.1.1 | (24,966) | (24,966) | (24,966) | (24,966) |
| | | | - | - | - | - |

21.1.1 பின்வருமாறு வட்டி பெறப்பட்டுள்ளது

| நிறுவனம் | கருவி | பெறப்பட்ட வட்டி |
|---|---|---|
| எல்கடுவ பிலான்டேசன் | பெயர் குறிக்காத கடன் பத்திரங்கள் | 9,392 |
| ஆடீஎளுடு வனிக் | பெயர் குறிககப்பட்ட கடன் பத்திரங்கள் | 206 |
| ஏயமெை இன் கோபரேசன் | பெயர் குறிக்கப்பட்ட கடன் பத்திரங்கள் | 15,000 |
| உத்தரவாதப் பத்திரங்கள் | உத்தரவாதப் பத்திரங்கள் | 368 |
| **சந்தேகததிற்கிடமான வுரமானத்திற்கு எதிரான ஏற்பாடு** | | **24,966** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 21.2 | **கிடைப்பனவுகள் மற்றும் முற்கொடுப்பனவுகள்** | | | | | |
| | வியாபாரக் கடன்பட்டோர் | | 58,381 | 76,359 | - | - |
| | கிடைக்க வேண்டிய வரி | | 43,657 | 49,137 | - | - |
| | கிடைக்கவேண்டிய பங்களிப்பு | | 3,716,377 | 3,229,995 | 3,716,377 | 3,229,995 |
| | காசுக் கட்டளை கட்டுப்பாடு | | 5,577 | 2,838 | 5,577 | 2,838 |
| | தபால் அச்சு இயந்திர கட்டுநிதி | | 914 | 462 | 914 | 462 |
| | சம்பள முற்பணம் | | 40 | 13 | 40 | 13 |
| | நானாவிதக் கடன்பட்டோர் | | 317,570 | 122,491 | 317,570 | 122,491 |
| | முன்னாள் ஊழியர்களிடமிருந்து நிலுவைகள் | | 7,346 | 2,579 | 7,346 | 2,579 |
| | பாதுகாப்பு வைப்புக்கள் | | 4,860 | 4,653 | 4,860 | 4,653 |
| | முற்கொடுப்பனவுகள் | | 30,307 | 33,637 | 10,661 | 17,962 |
| | முன்செலுத்தப்பட்ட ஊழியர் கடன் செலவு | | 108,678 | 95,163 | 108,678 | 95,163 |
| | பங்கிலாபம் கிடைக்க வேண்டியவை | | 361,730 | - | 361,730 | - |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 6,474 | 7,478 | 6,474 | 7,478 |
| | வைப்பு கடன் தீர்ப்பு | | - | 6,619 | - | 6,619 |
| | | | **4,661,911** | **3,631,424** | **4,540,227** | **3,490,252** |

| | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 21.3 | **கையிருப்புகள்** | | | | |
| | பொதுவான உப்பு இருப்பு | 89,587 | 333,101 | - | - |
| | யுசவஉைஅநய ளுவழஉம இருப்பு | 940 | 1,811 | - | - |
| | முடிவுறாத வேலைகள் | 47,498 | - | - | - |
| | நுகர்வுப்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 6,091 | 2,897 | - | - |
| | ‘காகிதாதிகள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் இருப்பு’ | 204,542 | 239,652 | 10,425 | 11,775 |
| | ‘நூலகம்’ | 272 | 272 | 272 | 272 |
| | ‘விடுமுறை பங்களா பொருட்பதிவேடு’ | 1,339 | 1,313 | 1,339 | 1,313 |
| | | **350,269** | **579,046** | **12,036** | **13,360** |

## 22. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

### 22.1 குழுமம்

| | காணி | கட்டிடங்கள் | மோட்டார் வாகனங்கள் | கணனிக் கருவிகள் | தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக கருவிகள் | குத்தகை காணியிலுள்ள கட்டிடங்கள் | பொறித் தொகுதி மற்றும் கருவிகள் | கடனீட்டு உயிர் சொத்துக்கள் | | அபிவிருத்திப் பணிகள் | நடைபெறும் கட்டுமானப் பணிகள் | மொத்தம் (ரூ. '000) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | முதிர்ச்சி யடையாத தாவரங்கள் | முதிர்ச்சி யடைந்த தாவரங்கள் | | | |
| **செலவினம்** | | | | | | | | | | | | |
| 2023 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 20,000 | 23,620 | 317,954 | 163,733 | 148,280 | 612,987 | 294,641 | 11,075 | 18,826 | 326,250 | 8,156 | 1,945,521 |
| மூலதனக் கொள்கை மாற்றத்தின் தாக்கங்கள் | - | - | 25,597 | 42,354 | 61,361 | 18,845 | 21,251 | - | - | - | 36,388 | 205,796 |
| கூட்டல் | | | 6,800 | | | | | | | | | 6,800 |
| சீராக்கம் | - | - | - | - | - | - | - | (575) | (1,108) | - | - | (1,683) |
| அகற்றல் | - | - | (3,971) | (1,906) | (1,743) | - | - | - | - | - | - | (7,621) |
| மீள் மதிப்பீடு / இடமாற்றம் | - | - | - | - | - | - | - | - | - | - | (36,484) | (36,484) |
| **2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **20,000** | **23,620** | **346,379** | **204,180** | **207,897** | **631,831** | **315,892** | **10,500** | **17,717** | **326,250** | **8,060** | **2,112,328** |
| | | | | | | | | | | | | |
| 2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 20,000 | 23,620 | 346,379 | 204,180 | 207,897 | 631,831 | 315,892 | 10,500 | 17,717 | 326,250 | 8,060 | 2,112,328 |
| கூட்டல் | - | - | 3,187 | 5,709 | 22,507 | 10,482 | 5,350 | - | - | - | 20,703 | 67,938 |
| அரசாங்க நிதியளிப்பு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| சீராக்கம் | - | - | - | - | - | - | - | (6,463) | (5,475) | - | - | (11,938) |
| அகற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மீள் மதிப்பீடு / மாற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | (10,465) | (10,465) |
| **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **20,000** | **23,620** | **349,566** | **209,889** | **230,404** | **642,314** | **321,241** | **4,038** | **12,242** | **326,250** | **18,298** | **2,157,863** |

| | காணி | கட்டிடங்கள் | மோட்டார் வாகனங்கள் | கணனிக் கருவிகள் | தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக கருவிகள் | குத்தகை காணியிலுள்ள கட்டிடங்கள் | பொறித் தொகுதி மற்றும் கருவிகள் | கடனீட்டு உயிர் சொத்துக்கள் | | அபிவிருத்திப் பணிகள் | நடைபெறும் கட்டுமானப் பணிகள் | மொத்தம் (ரூ. '000) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | முதிர்ச்சி யடையாத தாவரங்கள் | முதிர்ச்சி யடைந்த தாவரங்கள் | | | |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | | | |
| 2023 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | - | 591 | 171,148 | 28,471 | 76,014 | 181,112 | 219,767 | - | 2,634 | 291,953 | - | 971,690 |
| மூலதனக் கொள்கை மாற்றத்தின் தாக்கங்கள் | - | 591 | 37,473 | 37,458 | 18,352 | 15,287 | 23,672 | - | 354 | 20,353 | - | 153,540 |
| ஆண்டுக்கான தேய்மானக் கட்டணங்கள் | | | 567 | | | | | | | | | 567 |
| அகற்றல் | - | - | (1,059) | (508) | (460) | - | - | - | (155) | - | - | (2,182) |
| **2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **-** | **1,182** | **208,128** | **65,421** | **93,906** | **196,399** | **243,439** | **-** | **2,833** | **312,307** | **-** | **1,123,614** |
| | | | | | | | | | | | | |
| 2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | - | 1,182 | 208,128 | 65,421 | 93,906 | 196,399 | 243,439 | - | 2,833 | 312,307 | - | 1,123,614 |
| ஆண்டுக்கான தேய்மானக் கட்டணங்கள் | - | 591 | 40,110 | 41,227 | 25,009 | 15,836 | 16,230 | - | 245 | 12,152 | - | 151,399 |
| அரசாங்க நிதியளிப்பு கடன் கழிப்பு | - | - | 1,360 | - | - | - | - | - | - | - | - | 1,360 |
| அகற்றல் | - | - | - | - | - | - | - | - | (986) | - | - | (986) |
| **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **-** | **1,772** | **249,598** | **106,648** | **118,915** | **212,234** | **259,669** | **-** | **2,092** | **324,459** | **-** | **1,275,388** |
| | | | | | | | | | | | | |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | | | | | | | | | | | | |
| 2023 ஜனவரி 01 ஆம் திகதியன்று | 20,000 | 23,029 | 146,806 | 135,262 | 72,266 | 431,875 | 74,874 | 11,075 | 16,192 | 34,297 | 8,156 | 973,831 |
| | | | | | | | | | | | | |
| 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | 20,000 | 22,438 | 138,251 | 138,759 | 113,991 | 435,433 | 72,453 | 10,500 | 14,884 | 13,944 | 8,060 | 988,714 |
| | | | | | | | | | | | | |
| **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **20,000** | **21,848** | **99,968** | **103,241** | **111,489** | **430,079** | **61,572** | **4,038** | **10,150** | **1,791** | **18,298** | **882,475** |

**22. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்...**

| | | காணி | கட்டிடங்கள் | மோட்டார் வாகனங்கள் | கணினி உதிரிப்பாகங்கள் | தளபாடங்கள் மற்றும் ஏனைய கருவிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **22.2** | **சபை** | | | | | | |
| | **2023 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **100,495** | **163,733** | **45,393** | **353,241** |
| | கூட்டல் | - | - | - | 42,354 | 39,427 | 81,780 |
| | அரசாங்க நிதியளிப்பு | - | - | 6,800 | - | - | 6,800 |
| | சீறாக்கம் | - | - | - | - | - | - |
| | அகற்றல் | - | - | (3,971) | (1,906) | (1,743) | (7,621) |
| | மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - |
| | **2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **103,324** | **204,180** | **83,076** | **434,200** |
| | | | | | | | |
| | **2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **103,324** | **204,180** | **83,076** | **434,200** |
| | கூட்டல் | - | - | - | 5,709 | 8,491 | 14,200 |
| | அரசாங்க நிதியளிப்பு | - | - | - | - | - | - |
| | சீராக்கம் | - | - | - | - | - | - |
| | அகற்றல் | - | - | - | - | - | - |
| | மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - |
| | **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **20,000** | **23,620** | **103,324** | **209,889** | **91,567** | **448,400** |
| | | | | | | | |
| | **திரண்ட தேய்மானம்** | | | | | | |
| | **2023 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **591** | **20,099** | **28,471** | **6,825** | **55,986** |
| | மூலதனக் கொள்கை மாற்றத்தின் தாக்கங்கள் | - | 591 | 19,570 | 37,458 | 11,453 | 69,071 |
| | ஆண்டுக்கான தேய்மானக் கட்டணம் | - | - | 567 | - | - | 567 |
| | அகற்றல் | - | - | (1,059) | (508) | (460) | (2,027) |
| | மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - |
| | **2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **1,182** | **39,176** | **65,421** | **17,818** | **123,596** |
| | | | | | | | |
| | **2024 ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **1,182** | **39,176** | **65,421** | **17,818** | **123,596** |
| | ஆண்டுக்கான தேய்மானக் கட்டணம் | - | 591 | 19,305 | 41,227 | 16,136 | 77,259 |
| | அரசாங்க நிதியளிப்பு கடன் கழிப்பு | - | - | 1,360 | - | - | 1,360 |
| | அகற்றல் | - | - | - | - | - | - |
| | மீள்மதிப்பீடு | - | - | - | - | - | - |
| | **2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | **-** | **1,772** | **59,841** | **106,648** | **33,954** | **202,215** |
| | | | | | | | |
| | **தேறிய புத்தகப் பெறுமதி** | | | | | | |
| | 2023 ஜனவரி 01 ஆம் திகதியில் | 20,000 | 23,029 | 80,396 | 135,262 | 38,568 | 297,255 |
| | | | | | | | |
| | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் | 20,000 | 22,438 | 64,147 | 138,759 | 65,258 | 310,604 |
| | | | | | | | |
| | **2024 டிசம்பர் 31 ஆம் திகதியில்** | **20,000** | **21,848** | **43,483** | **103,241** | **57,613** | **246,185** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 23 | **குத்தகைச் சொத்துக்கள்** | | | | | |
| | **செலவு** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு | | 20,910 | 20,910 | - | - |
| | கூட்டல் | | - | - | - | - |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு** | | **20,910** | **20,910** | **-** | **-** |
| | | | | | | |
| | **திரண்ட மதிப்பிறக்கம்** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை | | 20,213 | 19,516 | - | - |
| | வருடத்திற்கான கட்டணம் | | 697 | 697 | - | - |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | | **20,910** | **20,213** | **-** | **-** |
| | | | | | | |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தேறிய புத்தகப் பெறுமதி** | | **-** | **697** | **-** | **-** |
| | | | | | | |
| 24 | **அருவச் சொத்துக்கள்** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை | | 6,163 | 9,017 | 6,163 | 9,017 |
| | கூட்டல் | | 95 | 2,141 | 95 | 2,141 |
| | வருடத்திற்கான மதிற்பிறக்கம் | | (5,110) | (7,252) | (5,110) | (7,252) |
| | கணினி மென்பொருட்கள் - அரசாங்க மானியம் | 24.1 | 0 | 2,257 | 0 | 2,257 |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | | **1,148** | **6,163** | **1,148** | **6,163** |
| | | | | | | |
| 24.1 | **கணினி மென்பொருட்கள் - அரசாங்க மானியம்** | | | | | |
| | காலப் பிரிவின் ஆரம்பத்தில் மீதி | | 2,257 | 4,512 | 2,257 | 4,512 |
| | கூட்டல் | | - | - | - | - |
| | மதிப்பிறக்கம் | | (2,257) | (2,256) | (2,257) | (2,256) |
| | **காலப் பிரிவின் இறுதியில் மீதி** | | **0** | **2,257** | **0** | **2,257** |
| | | | | | | |
| 25 | **முதலீட்டுச் சொத்துக்கள்** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு நிலுவை | | 4,587,406 | 4,587,406 | 4,587,406 | 4,587,406 |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை** | | **4,587,406** | **4,587,406** | **4,587,406** | **4,587,406** |

## 26. INTEREST BEARING BORROWINGS

| இலங்கை உப்புக் கம்பனி | 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் | | | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் செலுத்த வேண்டிய தொகை | ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த வேண்டிய தொகை | மொத்தம் | ஒரு வருடத்தினுள் செலுத்த வேண்டிய தொகை | ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த வேண்டிய தொகை | மொத்தம் |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| நிதிக் குத்தகை | - | - | - | - | - | - |
| வங்கி மேலதிகப் பற்று | 403,727 | - | 403,727 | 7,620 | - | 7,620 |
| | **403,727** | **-** | **403,727** | **7,620** | **-** | **7,620** |

## 27. கொடைகள் மற்றும் மானியங்கள்

| | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|
| | **2024** | **2023** |
| | ரூ. '000 | ரூ. '000 |
| **காலப் பிரிவின் ஆரம்பத்தில்** | 8,490 | 4,512 |
| கூட்டல் | - | 6,800 |
| மதிப்பிறக்கம் | (3,617) | (2,823) |
| **காலப் பிரிவின் இறுதியில்** | **4,873** | **8,490** |

| | அயடீன் இயந்திரம் | கட்டிடம் | குழாய் நிலையம் | ஊழியர் நட்டஈடு | இலங்கை உப்புக் கம்பனி மொத்தம் 2024 | இலங்கை உப்புக் கம்பனி மொத்தம் 2023 |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **செலவு** | | | | | | |
| ஜனவரி 1 ஆந் திகதியில் | 19,515 | 41,124 | 1,387 | 6,500 | 68,527 | 68,527 |
| **டிசம்பர் 31 ஆந் திகதியில்** | **19,515** | **41,124** | **1,387** | **6,500** | **68,527** | **68,527** |
| | | | | | | |
| **கடன்கழிப்பு** | | | | | | |
| ஜனவரி 1 ஆந் திகதியில் | 19,515 | 17,050 | 578 | 1,475 | 38,618 | 36,905 |
| வருடத்தில் மீள் மாற்றீடுகள் | - | 1,028 | 35 | 650 | 1,713 | 1,713 |
| **டிசம்பர் 31 ஆந் திகதியில்** | **19,515** | **18,078** | **613** | **2,125** | **40,331** | **38,618** |
| | | | | | | |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | | |
| **டிசம்பர் 31 ஆந் திகதியில்** | **-** | **23,047** | **775** | **4,375** | **28,196** | **29,909** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **28** | **நிலையான நலன் திட்டங்கள்** | | | | | |
| | ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப நிலையான நலன்களின் பொறுப்பு | | 303,379 | 466,499 | 303,379 | 215,479 |
| | வட்டிச் செலவினம் | | 39,439 | 38,786 | 39,439 | 38,786 |
| | நடப்பு ஆண்டின் சேவைக் கட்டண செலவு | | 476,238 | 52,068 | 14,511 | 9,548 |
| | நலக் கொடுப்பனவு | | (59,484) | (27,972) | (55,624) | (24,299) |
| | பொறுப்பின் மீதான காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | | 79,318 | 63,865 | 79,318 | 63,865 |
| | **டிசம்பர் 31 ஆம் திகதியில் இறுதி நிலையான நலன்களின் பொறுப்பு** | | **838,890** | **593,245** | **381,024** | **303,379** |
| | | | | | | |
| **29** | **நடப்பு வரி பொறுப்புக்கள்** | | | | | |
| | **மொத்த வரி பொறுப்புக்கள்** | | **8,678,062** | **9,016,645** | **8,678,062** | **9,016,645** |
| | (-) மதிப்பீடு செய்யப்பட்ட வருமான வரி செலுத்தல்கள் | | (4,384,010) | (4,152,577) | (4,384,010) | (4,152,577) |
| | (-) WHT வரி (பெறுமதி சேர்க்கப்பட்ட) | | - | - | - | - |
| | (-) கடந்த ஆண்டு மிகை / குறைவு ஒதுக்கீடு | | - | - | - | - |
| | **IRDக்கு செலுத்த வேண்டிய வரி** | | **4,294,051** | **4,864,069** | **4,294,051** | **4,864,069** |
| | | | | | | |
| **30** | **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | |
| | செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் நானாவித கடன்படுநர் | 30.1 | 471,513 | 680,320 | 144,088 | 115,112 |
| | | | **471,513** | **680,320** | **144,088** | **115,112** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 30.1 | **செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் நானாவித கடன்படுநர்** | | | | | |
| | வர்த்தக மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 30.1.1 | 325,649 | 563,913 | - | - |
| | நலன் உரித்துக்கள் மீதான நிறுத்தி வைக்கப்பட்ட வரி | | 2,828 | 4,937 | 2,828 | 4,937 |
| | செலுத்த வேண்டிய முத்திரை வரி | | 927 | 1,203 | 927 | 1,203 |
| | செலுத்த வேண்டிய பங்கிலாபம் | | 1,777 | 1,294 | - | - |
| | செலுத்தாத வேதனம் | | 76 | 60 | 76 | 60 |
| | செலுத்த வேண்டிய முத்திரை வரி | | 111 | 97 | 111 | 97 |
| | செலுத்த வேண்டின EPF | | 18,546 | 11,870 | 18,546 | 11,870 |
| | செலுத்த வேண்டிய ETF | | 2,226 | 1,584 | 2,226 | 1,584 |
| | திரண்ட செலவினம் | | 68,603 | 50,237 | 68,603 | 50,237 |
| | மீண்டும் அனுப்பப்பட்ட நலன்கள் (காசோலை) | | 2,257 | 2,187 | 2,257 | 2,187 |
| | மீண்டும் அனுப்பப்பட்ட நலன்கள் (நலன்புரி) | | 159 | 19 | 159 | 19 |
| | மீண்டும் அனுப்பப்பட்ட நலன்கள் (சிட்டை) | | 5,416 | 8,323 | 5,416 | 8,323 |
| | செலுத்தாத மரண நலன்கள் | | 27,943 | 23,370 | 27,943 | 23,370 |
| | W.H.T வரி | | 3,352 | 1,608 | 3,352 | 1,608 |
| | VAT வரி | | 776 | 666 | 776 | 666 |
| | இணங்காத மீதி | | 14 | 14 | 14 | 14 |
| | நூலக நிதியம் | | 14 | 11 | 14 | 11 |
| | நானாவித கொடுப்பனவுகள் | | 207 | 207 | 207 | 207 |
| | மீளளிக்கப்பட வேண்டிய வைப்பு | | 70 | 70 | 70 | 70 |
| | பாதுகாபபு வைப்புக்கள் - வாகனத் தரிப்பிடம் | | 10,035 | 8,303 | 10,035 | 8,303 |
| | சம்பள கட்டுப்பாடு | | - | 219 | - | 219 |
| | சம்பள அறவீடுகள் தடைநீக்கம் | | 429 | 79 | 429 | 79 |
| | முன்னர் செலுத்தப்பட்ட ஆதாயம் | | 101 | 47 | 101 | 47 |
| | | | **471,513** | **680,320** | **144,088** | **115,112** |

| | | இலங்கை உப்புக் கம்பனி | |
|---|---|---|---|
| | | 2024 | 2023 |
| | | ரூ. '000 | ரூ. '000 |
| 30.1.1 | **வர்த்தக மற்றும் ஏனைய பொறுப்புக்கள்** | | |
| | **நிதிப் பொறுப்புக்கள்** | | |
| | செலுத்த வேண்டிய வர்த்தக மீதி | 81,948 | 104,399 |
| | செலுத்த வேண்டிய உப்பு போக்குவரத்து செலவுகள் | - | - |
| | செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 35,825 | 106,611 |
| | செலுத்த வேண்டிய சமூகப் பாதுகாப்பு வரி | 6,003 | 7,128 |
| | செலுத்த வேண்டிய காணி வாடகை | 18,925 | 9,234 |
| | **நிதி சாரா பொறுப்புக்கள்** | | |
| | திரண்ட செலவுகள் | 81,134 | 197,059 |
| | செலுத்த வேண்டிய - வேறு | 31,167 | 69,103 |
| | பெறுமதி சேர் வரி - செலுத்த வேண்டிய | 37,201 | 36,933 |
| | செலுத்த வேண்டிய நட்டஈடு ஒதுக்கீடு | 33,445 | 33,445 |
| | ஊக்குவிப்புக் கொடுப்பனவு - செலுத்த வேண்டிய | - | - |
| | செலுத்த வேண்டிய ஒப்பந்தச் செலவுகள் | - | - |
| | | **325,649** | **563,913** |

| | | இலங்கை உப்புக் கம்பனி | | | |
|---|---|---|---|---|---|
| | | வரி நடவடிக்கைக்கான மூலதன கொடுப்பனவுகள் | நிலையான நலன் திட்டங்கள் | வரி நட்டங்களுக்கு ஈடு செய்யக்கூடிய பிற்போடப்பட்ட வரி | மொத்தம் |
| | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **31** | **பின்போடப்பட்ட வரி பொறுப்புக்கள்** | | | | |
| | 2023 ஜனவரி 01 ஆம் திகதியில் | 165,989 | (75,306) | - | 90,684 |
| | வருடத்தின் இலாபத்துடன் அலலது நட்டத்துடன் செம்மையாக்கல் | (8,164) | (11,654) | - | (19,818) |
| | 2024 ஜனவரி 01 ஆம் திகதியில் | 157,825 | (86,960) | - | 70,865 |
| | வருடத்தின் இலாபத்துடன் அலலது நட்டத்துடன் செம்மையாக்கல் | (4,769) | (50,400) | - | (71,264) |
| | **2024 டிசம்பர் 31 ஆம் திகதியில்** | **153,056** | **(137,360)** | **-** | **15,696** |

| | | | |
|---|---|---|---|
| | பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்கள் | (153,056) | (157,825) |
| | பிற்போடப்ப்ட்ட வரிச் சொத்துக்கள் | 137,360 | 86,960 |
| | முன்கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தாத வர்த்தக நட்டங்கள் | - | - |
| | **தேறிய பிற்போடப்பட்ட வரி** | **(15,696)** | **(70,865)** |

| | | குறிப்பு | குழுமம் | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2024 | 2023 | 2024 | 2023 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **32** | **ஏற்பாடுகள்** | | | | | |
| | கணக்காய்வு கட்டனங்களுக்கான ஏற்பாடுகள் | | 2,500 | 2,500 | 2,500 | 2,500 |
| | ஊழியர் விபத்து நட்டஈட்டுத் திட்டத்திற்கான ஏற்பர்டுகள் | | 2,000 | 2,000 | 2,000 | 2,000 |
| | ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான ஏற்புடுகள் | | 73,975 | 79,229 | 73,975 | 79,229 |
| | பெற்றுக்கொள்ளாத விடுமுறைக்கான கொடுப்பனவு ஏற்பாடுகள் | | 16,320 | 19,698 | 16,320 | 19,698 |
| | உயர் கல்வி புலமைப் பரிசில்களுக்கான ஏற்பாடுகள் | | - | 172,596 | - | 172,596 |
| | நிபுணதா சவிய புலமைப் பரிசில் ஏற்பாடுகள் | | 91,275 | - | 91,275 | - |
| | விஸ்வ யாத்ரா புலமைப் பரிசில் ஏற்பாடுகள் | | 126,000 | - | 126,000 | - |
| | 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்களுக்கான ஏற்பாடுகள் | | 135,300 | 139,140 | 135,300 | 139,140 |
| | | | **447,371** | **415,163** | **447,371** | **415,163** |

| | | ஊ.ந.பொ.நி.சபை | |
|---|---|---|---|
| | | 2024<br>ரூ. '000 | 2023<br>ரூ. '000 |
| **33** | **அங்கத்தவர் நிதியம்** | | |
| | ஜனவரி 01 ஆம் திகதிக்கு ஆரம்ப அங்கத்துவ நிதி நிலுவை | **504,434,709** | **459,630,606** |
| | கடந்த ஆண்டு பங்களிப்பு சீராக்கம் | (3,558) | 5,336 |
| | கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 42,028,214 | 37,223,825 |
| | பங்களிப்பு மீளளிப்பு | (33,434,593) | (38,286,377) |
| | அங்கத்துவ நிதி மதீயின் மீதான வட்டி | 15,390,525 | 13,758,500 |
| | பங்கிலாபம் | 35,911,278 | 32,102,819 |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இறுதி அங்கத்துவ நிதி நிலுவை** | **564,326,576** | **504,434,709** |

# மேலதிக தகவல்கள்

கணக்காய்வாளர் அதிபதியின்
அறிக்கை 2024

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. LSW/F/ETF/1/2024/14
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2025 மே 30 ஆம் திகதி

தவிசாளர்,
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை,

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டமுறையான தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 'சபை' மற்றும் அதன் நிர்வாகத்தின் 'குழுமம்' 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, உரிமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிக் கூற்றுக்கள், சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை வருங்காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பிரிவில் விளக்கியுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தை தவிர சபையின் மற்றும் குழுமத்தின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியல் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு அனுப்பப்படும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி அந்தந்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வைப்பிலிடப்பட வேண்டுமெனினும், 1981 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மற்றும் 2015 ஆம் ஆண்டு முதல் 2023 வரை முறையே 14 மில்லியன் ரூபா மற்றும் 597 மில்லியன் ரூபா தொகை வரவு வைக்கப்படவில்லை.

(ஆ) அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் செல்லுபடியான அடையாள அட்டை இன்றி பேணிவரப்படும் அடையாளம் காணப்படாத 212 கணக்குகளுக்கு ஏற்புடைய 1.22 மில்லியன் ரூபா தொகை 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அங்கத்தவர்களின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படவில்லை.

(இ) தொழில் வழங்குநர்கள் மூலம் பங்களிப்புத் தொகை சபைக்கு அனுப்பப்பட்ட போதிலும், அந்தத் தொழில் வழங்குநர்களை அடையாளம் காண முடியாமல் ரூ.மில். 6.62 மீதி V999 மற்றும் V100 தொங்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை காணப்படும் அந்த மீதிகளை உரிய அங்கத்தவர் கணக்குகளுக்கு வரவு வைத்து தீர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் தலைப்பின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 சபையின் 2024 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையில் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட சபையின் 2024 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்காது. நான் அது தொடர்பில் எவ்வித அத்தாட்சிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ சமர்ப்பிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது கணக்காய்வுக்கு அமைய எனது பொறுப்பாவது மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடனோ அல்லது கணக்காய்வின் போதோ அல்லது வேறு முறையிலோ பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு அமைய எண்ணிக்கை அளவில் வித்தியாசம் உண்டா என்பது தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கைக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீது மற்றும் என்னால் புரியப்பட்ட பணிகள் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் எண்ணிக்கை ரீதியில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து அந்த விடயங்களை நான் அறிக்கையிடல் வேண்டும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிட ஏதும் இல்லை.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிப்பதற்காக மற்றும் நியாயமாக முன்வைப்பதற்காக மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிகழுவதற்கு இடம்பாடுள்ள எண்ணிக்கை ரீதியாக பிழையான கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொருட்டு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது சபையினால் தொடர்ச்சியாக பேண முடியுமான ஆற்றலை தீர்மானிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்துக்கு உரியதாகும். முகாமைத்துவம் சபையை கலைப்பதற்கு உத்தேசிக்குமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாத விடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தேர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைப் பற்றிய பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் தற்கால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்கள் அல்ல என்ற சாதாரண உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்பாடு உயர் மட்டத்திலான சான்றிதழ் என்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் எண்ணிக்கை ரீதியான பிறழ் கூற்றுக்களை இனம்காணக்கூடிய உறுதிப்பாடாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டாக தாக்கம் செலுத்தும் எண்ணிக்கை ரீதியான பிறழ்கூற்றுக்கள் நிகழ முடியுமாயினும் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தாக்கத்தை செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் ரீதியான முடிவு மற்றும் தொழில் ரீதியான தீர்ப்புடன் மற்றும் தொழில் ரீதியான சந்தேகத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நிகழ முடியுமான எண்ணிக்கை ரீதியான பிழையான கூற்றுக்களின் ஆபத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை விட மோசடியினால் நிகழும் தாக்கம் பாரியது. கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தட்டிக்கழித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை கைவிடுதல் மோசடி நிகழுவதற்கு காரணமாகும்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக சபையின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க இங்கு முன்வரவில்லை.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமையை மதிப்பிடல்.
- நிகழ்வுகள் அல்லது நிலமைகள் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய எண்ணிக்கை ரீதியான எதிர்பாராத விளைவுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையைப் பயன்படுத்துவதன் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவு எதிர்பாரா நிகழ்வு உள்ளதாக நான் முடிவு செய்யுமிடத்து நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாத விடத்து எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு முடிவடைய முடியும்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களில் வெளியிடல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்தல்.
- ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான அபிப்பிராயத்தை முன்வைப்பதற்காக குழுமத்தினுள் காணப்படும் நிறுவனங்கள் மற்றும் வியாபாரச் செயன்முறைகளின் நிதித் தகவல்கள் தொடர்பில் போதியளவு பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. குழும கணக்காய்வின் போது வழிநடாத்தல், மேற்பார்வை மற்றும் செயலாற்றுகைக்கு நான் பொறுப்பாகும். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் முழுமையாக பொறுப்புடையவன்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்களை அறிவூட்டுதல்.

## 02. வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

### 2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது விசாரணை மூலம் தெரியவரும் விடயம் யாதெனில், சபை உரிய முறையில் நிதி அறிக்கைகளை பேணிவந்துள்ளது என்பதாகும். அதனை இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணைந்து செல்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, இந்த அறிக்கையில் 1.2 (அ) அவதானிப்புக்கள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் ஆளுநர் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு சபையுடன் இணைந்து ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளதென,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுநர் சபையினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரென,

| | சட்டங்கள்கூகட்டளைகளுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2022 டிசம்பர் 22 ஆம் திகதிய 2311/39 எனும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் | 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல், குறைந்தபட்சம் 15 ஊழியர்களைக் கொண்ட ஒவ்வொரு தொழில் வழங்குநரும், பங்களிப்புகள் மற்றும் மாதாந்த அறிக்கைகளை சபைக்கு இணைய வழிமுறையில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த நடவடிக்கையின் முதன்மை நோக்கம், அங்கத்தவர்களுக்கு பங்களிப்புகள் தாமதமின்றி விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதாக இருந்தாலும், செயலில் உள்ள மற்றும் செயல்படாத நிறுவனங்களுடன் தொடர்புடைய விநியோகிக்கப்படாத தொகை 2015 முதல் 2022 வரை முறையே ரூ.மில். 171 ஆகவும், 2023 இல் ரூ.மில்.117 ஆகவும் காணப்பட்டது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் (i) 396 (ஈ) | மொத்தம் ரூ. 744,665 பெறுமதியான வழங்கப்பட்டு 06 மாதங்கள் கழிந்த 16 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) 756 (6) | 2023 ஆம் ஆண்டுக்கான பொருள் சுற்றாய்வினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்தோடு, மீளாய்வுக்குரிய வருடத்திற்கான பொருள் சுற்றாய்வு இது வரை நடாத்தப்படவில்லை. |
| | (ii) 1646 (ஈ) | பிரயாணங்கள் தொடர்பிலான மாதாந்த பொழிப்புக்களின் மூலப் பிரதிகளுடன் அந்தந்த மாதத்தின் நாளாந்த பயணக் குறிப்புகள் ஒவ்வொரு மாத முடிவிலும் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளரின் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பினும் 52 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) | (இ) 2016 நவம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை. (i) 3.1 பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்குப் பிறகும் 12 மாத காலத்திற்குப் பிறகு அல்லது 25,000 கி.மீ தூரம் ஓட்டிய பிறகு அல்லது ஒரு பெரிய இயந்திர பழுதுபார்ப்புக்குப் பிறகு, எது முதலில் வருகிறதோ, அதற்குப் பிறகு எரிபொருள் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என்றாலும், சபைக்குச் சொந்தமான 52 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) 5.1 பந்தி | மீதமுள்ள எரிபொருள் அளவு மற்றும் இயக்கப்படும் தூரம் தினசரி பதிவுப் புத்தகத்தில் உள்ளிடப்பட வேண்டும் என்றாலும், அது செய்யப்படவில்லை. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென.

| தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை (திருத்திய) சட்டத்தின் 4 ஆம் பந்தியால் திருத்தப்பட்ட 37 (அ) பிரிவு. | தொழில் வழங்குநர் ஒருவர் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அவ்வப்போது அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை சட்டத்தின் பிரிவு 22 | நிதியத்தின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து ஆண்டுக்கு மூன்று சதவீதத்திற்குக் குறையாத வட்டி விகிதம் அந்த ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி நிதியத்தின் ஒவ்வொரு உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கிலும் வரவு வைக்கப்பட வேண்டும் எனினும், சபையின் முதலீட்டு வருமானம் கடந்த 5 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது, ஆனால் சபை அதன் ஆரம்பத்திலிருந்து அங்கத்தவர்களுக்கு 3 சதவீத வருவாய் விகிதத்தை மட்டுமே செலுத்தியுள்ளது. |

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் ஏற்புடைய காலப் பிரிவில் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைய பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தவில்லையென,

(அ) கொள்முதல் தேவைகளை துல்லியமாக மதிப்பீடு செய்வதற்குத் தவறியதால், 2018 முதல் 2024 வரை சபையின் ஊழியர்களுக்கு விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூ.மில். 3.5 மில்லியன் பெறுமதியான சீருடைகள் 2 முதல் 6 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூ.மில். 2.23, ரூ.மில். 2.48 மற்றும் ரூ.மில். 10.8 பெறுமதியுள்ள 45 QR-குறியீடு ஸ்கேனர்கள் (QR-Code Scanners), 21 QR-குறியீடு பிரிண்டர்கள் (QR-CodePrinters) மற்றும் 11 ஆவண ஸ்கேனர்கள் (Document Scanners) பயன்படுத்தப்படாமல் களஞ்சயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

(இ) நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சபையின் செயற்பாடுகள் மற்றும் சேவைகளின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு, சபைக்கும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே 2016 நவம்பர் 27 ஆம் திகதி ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் கருத்திட்டப் பணிகளை 2021 அக்டோபர் மாதத்திற்குள் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டது. திட்டமிடல் காலம் அவ்வப்போது திருத்தப்பட்ட போதிலும் 2025 ஏப்ரல் மாதத்திற்குள் கருத்திட்டப் பணிகளை நிறைவுசெய்து நேரடி செயல்பாட்டு செயல்முறையாக மாற்றியமைக்க முடியவில்லை. மேலும், கருத்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மிகவும் அவசியமானதாக அடையாளம் காணப்பட்ட வன்பொருள் கொள்வனவிற்கு ரூ.மில்.145.7 செலவிடப்பட்டிருந்தாலும், ரூ.மில்.18.6 மதிப்புள்ள உபகரணங்கள் 2025 மார்ச் மாதம் இறுதி வரையில் களஞ்சியத்தில் செயலற்ற நிலையில் இருந்தன. சேவை அலகுகளை நிறுவுதல், ஏற்கனவே உள்ள அமைப்பிலிருந்து புதிய அமைப்புக்கு சரியான தரவு பரிமாற்றம், ஒதுக்கப்படாத பங்களிப்புகள் மற்றும் டுயமெய ஊடநயச மற்றும் அதன் நோக்கங்களை அடைதல் தொடர்பான பணிகளை சபை இதுவரை நிறைவுசெய்வதற்கு தவறியுள்ளது.

(ஈ) பிராந்திய அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக சபையால் செய்யப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து, காணி ஆணையாளர் நாயகம் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சிரிபோபுர 90 கிராம அலுவலர் பிரிவில் 0.1012 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட காணி வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு சபைக்கு கையளிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை காணிக்கு ஆண்டுதோறும் ரூ.240,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஏற்புடைய நோக்கத்தை அடைய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(உ) 2006 ஆம் ஆண்டு முதல், இலங்கை வங்கிக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி, மறு கொள்முதல் ஒப்பந்தங்களில் ரூ.மில். 10 மில்லியன் மற்றும் நிலையான வைப்புகளில் ரூ.மில். 490 முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன் பெறுமதி ரூ.மில். 500 ஆகும். இலங்கை வங்கியில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பராமரிக்கப்பட்டு வரும் இந்த வைப்புத்தொகைகள் தொடர்பாக, சபைக்கு அதிக வருமான விகிதத்தைப் பெறுவதற்கு ஒப்பந்தங்களைத் திருத்தவோ அல்லது பிற பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### 2.3 வேறு விடயங்கள்

(அ) 2024 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி நவம் மாவத்தை வாகன நிறுத்துமிட உரிமையாளர்களர் செலுத்த வேண்டிய மொத்த வரி நிலுவைத் தொகை ரூ.மில். 6.79 ஆக காணப்பட்டது. அதில் ரூ.மில். 3.65 தொகை 2016 முதல் 2024 வரையிலான காலத்திற்கு 63 நிறுவனங்களிடமிருந்து செலுத்த வேண்டியிருந்தது. தரிப்பிட உரிமையாளர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நிலுவைத்

தொகையை முறையாக அறவிடுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தடையாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1994 ஆம் ஆண்டு ஒரு பெருந்தோட்ட நிறுவனத்தில் 14.48 சதவீத நிலையான வட்டி விகிதத்தில் சபையினால் செய்யப்பட்ட ரூ.மில். 15 கடன் பத்திர முதலீட்டிற்கு 2024 டிசம்பர் 31 ஆம் திகதிய நிலவரப்படி நிலுவையில் உள்ள வட்டித் தொகை ரூ.மில். 26.29 ஆகும். இது தொடர்பாக, உரிய நிறுவனங்கள் மற்றும் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் தலையீட்டோடு நடந்த கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, நிலுவைத் தொகையை சபைக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், 2025 மே மாத நிலவரப்படி, இந்தப் பணம் அறவிடப்பட்டதற்கான உறுதியான உறுதிப்படுத்தல் எதுவும் காணப்படவில்லை.

(இ) 2002 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் ஒரு நிறுவனத்தின் உறுதிமொழிப் பத்திரங்கள் மற்றும் கடன் பத்திரங்களில் முறையே ரூ.மில். 12.17 மற்றும் ரூ.மில். 7.45 தொகைக முதலீடுகளுக்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூ.மில். 15.58 ஆகும். இந்த நிறுவனத்தை கலைப்பதற்கான உத்தரவுகளை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்திருந்தாலும், 2025 மே மாதம் வரை கூட இந்தப் பணத்தை மீட்டெடுப்பது குறித்து சபையிடம் எந்த உறுதியான உறுதிப்படுத்தலும் இல்லை. இதன் காரணமாக, அங்கத்தவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் ரூ.மில்.15.58 தொகை குறைக்கப்பட்டுள்ளது.

(ஈ) 2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெற்ற கணக்குக் குழு கூட்டத்தில் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரைகளை செயல்படுத்துவது பூரணப்படுத்தப்படவில்லை.

(i) சபை அரசாங்கப் பத்திரங்களில் நிதியை முதலீடு செய்யும் ஒரு முக்கிய நிறுவனமாக இருந்தாலும், பத்திர ஏலங்களில் நேரடி ஏல வசதியைப் (Direct Bidding Facility) பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியில் முதன்மை வாடிக்கையாளராகப் பதிவு செய்தல்.

(ii) சபையின் உறுப்பினர் நிதியின் முதலீட்டு முகாமைக்காக பட்டய நிதி ஆய்வாளர் பதவிக்கு ஒரு நிரந்தர அதிகாரியை விரைவாக நியமித்தல்.

(iii) சபையின் தலைமை நிர்வாக அதிகாரி கூட்டிணைக்கப்பட்ட சட்டத்தின்படி சபையின் தலைவராக இருந்தாலும், நிதி விவகாரங்களுடன் தொடர்புடைய ஒரு நிறுவனமாக, சபையின் தலைமை நிர்வாக அதிகாரி அதன் தலைவராக இருப்பார் எனும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 5 (2) ஐத் திருத்துதல்,

(உ) சபையின் நிதி நடவடிக்கைகளின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் சபையினால் எதிர்பார்க்கப்படும் (ஊழசந ளுலளவநஅ) கருத்திட்டங்களுடன் கணக்கியல் செயல்முறையை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு, சபை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் ஒரு தனியார் நிறுவனத்திற்கும் இடையே முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 2021 ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் 2022 ஆகஸ்ட் மாதம் வரை ஒரு வருடத்திற்கு பராமரிப்பு மற்றும் சேவையை வழங்க ஒப்புக்கொண்டிருந்த போதிலும் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் 2025 பெப்ரவரி 27 ஆம் திகதி வரை ஒத்துழைப்பு மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் கணக்கியல் அமைப்பு தொடர்பான சிக்கலான சூழ்நிலைகளுக்காக சபை ஏற்புடைய நிறுவனத்திற்கு ரூ.705,820 மேலதிக செலவுகளைச் செய்ய வேண்டியிருந்தது. 2022 முதல் 2024 வரை மென்பொருளைப் பயன்படுத்துவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூ.மில். 5.65 தொகையும் செலுத்தப்பட்டது. வணிக நோக்கமாக இருந்த (ஊழசந ளுலளவநஅ) உடனான ஒருங்கிணைப்பு பணிகள் இன்றுவரை முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை.

(ஊ) நாரஹேன்பிட்டி விசேட பொருளாதார மையத்தில் வாடகை அடிப்படையில் பராமரிக்கப்படும் சபையின் காப்பகங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.மில். 6.4 ஆகும். மேலும் 2022 ஏப்ரல் மாதம் முதல் முறையான வாடகை ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை.

(எ) சபையின் சேவையை விட்டு வெளியேறிய 14 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடர் மற்றும் வாகனக் கடன்களிலிருந்து ரூ.மில். 5.5 தொகையை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**ஜீ.எச்.டி. தர்மபால**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில் கடமை)

# 2024 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில்

முகாமைத்துவத்தின் கருத்துக்களை முன்வைத்தல்

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தில் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் கருத்து**

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) 1981 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை மொத்த விநியோகிக்கப்படாத பங்களிப்புத் தொகை ரூ. 597 மில்லியனாக இருந்தபோதிலும், 1981-2014 வரையிலான காலகட்டத்துடன் தொடர்புடைய விநியோகிக்கப்படாத மீதி ரூ.14.547 மில்லியன் ஆகும், மேலும் இந்த மீதி முக்கியமாக 03 தொழில் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடையது.

| S/N | Employer No. | Employer Name | Amount (Rs.) |
|---|---|---|---|
| 01 | M 618 | Sri Lanka Sugar Corporation, Hingurana. | 10,222,460.48 |
| 02 | F 2926 | Terre Des Hommes, Nuwara Eliya. | 229,931.00 |
| 03 | B 30440 | Excel Apparel (Pvt) Ltd., Boralesgamuwa. | 83,443.50 |
| | | **Total** | **10,535,834.98** |

இந்த தொழில் வழங்கும் நிறுவனங்கள் முறையே 35 ஆண்டுகள், 31 ஆண்டுகள் மற்றும் 17 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டுள்ளதால், அந்தப் பணத்தை விநியோகிப்பதற்கான உறுப்பினர் விபரங்கள் எங்களிடம் இல்லை. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் 1981-2014 காலகட்டத்துடன் தொடர்புடைய விநியோகிக்கப்படாத பணத்தை தற்காலிகமாகத் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025.06.13 ஆம் திகதிய நிலவரப்படி, 2015-2023 காலகட்டத்திற்கான மொத்த ஒதுக்கப்படாத பங்களிப்புத் தொகை ரூ.535 மில்லியனாகக் குறைந்துள்ளது. மேலும் செயலில் உள்ள நிறுவனங்களுக்கான உறுப்பினர் விபரங்களை வழங்காத தொழில் வழங்குநர்களிடமிருந்து ஒவ்வொரு பெறுகைக்குமான விபரங்கள் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் இந்த நிலுவைகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், செயல்படாத தொழில் வழங்கும் நிறுவனங்களின் தொழில் வழங்குநர்களால் மேற்கூறப்பட்ட காலத்திற்கு மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட "C" அறிக்கைகளை நாம் கோரியுள்ளோம், மேலும் 150 தொழில் வழங்குநர்களின் சுமார் 790 "C" அறிக்கைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

2025.06.13 ஆம் திகதிய நிலவரப்படி, சுமார் 250 "C" அறிக்கைகளின் படிவம் II அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகளைச் சரிபார்த்து, Header உள்ளடக்கி, தரவுகளை கணினிமயமாக்கிய பின்னர் நிதி விநியோகிக்கப்பட்டு ஏற்புடைய உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

(ஆ) அடையாளம் காண முடியாத பங்களிப்புகள் தொடர்பான உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் அடையாள அட்டை எண்களைக் கொண்ட 212 உறுப்பினர் கணக்குகளில், 3 உறுப்பினர் கணக்குகள் தொடர்பாக உறுப்பினரின் பெயர் உள்ளிடப்பட்டுள்ளது.

Y/9274/80500 – ஏற்புடைய உறுப்பினருக்கு பங்களிப்புத் தொகை வரவுவைக்கப்பட்டுள்ளது. (உறுப்பினர் இலக்கம் 1220)

A-15892-07

A-28833-65

மேலும், இந்த 212 உறுப்பினர் கணக்குகளில், 65 உறுப்பினர் கணக்குகள் 37 செயலற்ற தொழில் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடையவை, மேலும் 147 உறுப்பினர் கணக்குகள் 30 செயலில் உள்ள தொழில் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடையவை. இந்த 212 உறுப்பினர் கணக்குகளில் சுமார் 90% 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொழில் வழங்குநர்களால் செலுத்தப்பட்ட பங்களிப்புகளாக இருப்பதனால், இந்த உறுப்பினர் நிதி யாருக்கு வரவு வைக்கப்பட வேண்டும் என்பதற்கான சரியான உறுப்பினர்களின் தகவலைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. செயலில் உள்ள தொழில் வழங்கும் நிறுவனங்களிலிருந்து தொலைபேசி மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு பல சந்தர்ப்பங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவர்களிடம் அந்தத் தகவலும் இல்லை என கூறப்பட்டது.

மேலும், உறுப்பினர் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் எண்களில் 136, இந்த செயலில் உள்ள நிறுவனங்களின் பெயர் மற்றும் செல்லுபடியாகும் அடையாள அட்டை இலக்கம் இன்றி நாம் வழங்கிய தற்காலிக எண்கள் என்பதால், தொழில் வழங்குநர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வது கடினம். மேலும், 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் படிவம் ஐஜ அறிக்கைகள் உறுப்பினர் சேவைகள் பிரிவால் அகற்றப்பட்டுள்ளதால், இந்த உறுப்பினர்களின் தகவல்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

எனவே, இந்தக் கணக்குகள் செயலிழக்கச் செய்யப்பட்டு, ஏற்புடைய உறுப்பினரின் உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் ஒரு கட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டால், கணக்கு மீண்டும் செயல்படுத்தப்பட்டு பணம் செலுத்தப்படும், மேலும் உறுதிப்படுத்தக்கக்கூடிய ஆவணங்கள் ஏற்புடைய உறுப்பினர் அல்லது தொழில் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்டால், அந்த உறுப்பினர் கணக்குகளின் பெயர்கள் உள்ளடக்கப்படும்.

(இ) சில தொழில் வழங்குநர்கள் சபைக்கு பங்களிப்புகளை அனுப்பியிருந்தாலும், திட்டமிட்டபடி அந்தப் பணம் செலுத்திய தொழல் வழங்குநர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறியதால், அடையாளம் காண முடியாத தொகைகள் V 100 மற்றும் V 999 எதிர்பாரா கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டு, தொழில் வழங்குநரின் தகவலைப் பெற்ற பின்னர் ஏற்புடைய கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன. கணினி அமைப்பு மூலம் பெறப்பட்ட எதிர்பாரா கணக்குகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட தெமாழில் வழங்குநர்களின் விபரங்கள் பின்வருமாறு.

V 100 மற்றும் V 999 கணக்கு வைக்கப்பட்டுள்ள மீதிகள் பற்றிய தகவல்கள்

i. 2024.12.31 ஆம் திகதிக்கு பங்களிப்புத் தொகைகள் எதிர்பாரா கணக்குகளில் வைக்கப்பட்ட விபரம் பின்வருமாறு.

| கணக்குகளின் எண்ணிக்கை | 2024.12.31 ஆம் திகதிக்கு மீதி |
|---|---|
| 02 | 6,616,156.52 |

ii. 2024.12.31 ஆம் திகதிக்கு வயதுப் பகுப்பாய்வு

| வருடம் | பங்களிப்புத் தொகை (ரூ) | மேலதிகக் கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 1982 | 333,758.40 | |
| 1983 | 346,376.38 | |
| 1984 | 316,512.62 | |
| 1985 | 62,374.00 | |
| 1986 | 522,207.80 | |
| 1987 | 152,798.57 | |
| 1988 | 1,055,049.72 | |
| 1989 | 139,706.38 | |
| 1991 | 976.73 | |
| 1992 | 215.78 | |
| 1994 | 238.67 | |
| 1995 | 120.00 | |
| 1996 | 934,299.89 | |
| 1997 | 932,033.66 | |
| 1998 | 137,581.19 | |
| 1999 | 125,079.64 | 793.20 |
| 2000 | 566,905.58 | 52,601.98 |
| 2001 | 301,057.94 | 18,772.22 |
| 2002 | 55,752.45 | |
| 2003 | 69,385.58 | |
| 2004 | 81,288.15 | 11,311.98 |
| 2006 | 2,000.00 | |
| 2020 | 306,694.90 | |
| 2021 | 66,517.00 | |
| 2022 | 16,200.00 | |
| | **6,525,131.03** | **91,025.49** |

அந்தத் தொகையில், 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொழில் வழங்குநர்களால் வைப்பிலிடப்பட்ட ரூ.389,411.90 தொகை தொடர்பான கட்டண விபரங்கள், தொழில் வழங்குநர்களால் அவ்வப்போது வழங்கப்படுகின்றன. மேலும் ஏற்புடைய சந்தர்ப்பங்களில், அந்தக் கொடுப்பனவுகள் V999 கணக்கிலிருந்து சரியான தொழில் வழங்குநர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும்.

இருப்பினும், 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் செய்யப்பட்ட ரூ.6,226,744.62 வரவுகளை தற்போது அடையாளம் காண முடியாததாலும், இது தொடர்பாக எந்த கோரிக்கைகளும் செய்யப்படாததாலும், எதிர்காலத்தில் பணிப்பாளர் சபை ஆவணம் மூலம் திரும்பப் பெறுவதற்கான அனுமதியைப் பெற்ற பின்னர் அந்தப் பணத்தை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**2.2.2**

(அ) 2022 டிசம்பர் 22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல. 2311/39 இன் பிரகாரம், 15 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள தொழில் வழங்குநர்கள் சபைக்கு இணைய வழிமுறையில் பங்களிப்புகளை செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர் சேவைகள் பிரிவு, பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பங்களிப்பு சேகரிப்பு பிரிவு என்பவற்றின் மூலம் தொழில் வழங்குநர்களுக்குத் தேவையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டிற்கான செயலில் உள்ள மற்றும் செயல்படாத நிறுவனங்களிலிருந்து படிவம் II அறிக்கைகள் 1353 பெறப்படாததால் விநியோகிக்க முடியாத பங்களிப்புகளின் மீதி ரூ.112 மில்லியனாகக் குறைந்துள்ளது. 2025.05.14 ஆம் திகதிய நிலவரப்படி, இது ரூ.117 மில்லியனாகவும், 2025.06.13 ஆம் திகதிய நிலவரப்படி, முன்னேற்றம் 05 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது.

2015 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கு இடையில், செயலில் உள்ள மற்றும் செயல்படாத தொழில் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பான படிவம் II அறிக்கைகள் 2,833 இன்னும் பெறப்பட உள்ளன. மேலும் விநியோகிக்கப்பட வேண்டிய பங்களிப்புகளின் அளவு ரூ.148 மில்லியன் குறைந்திருப்பதனால் அது 23 மில்லியன் ரூபா முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

பங்களிப்புத் தொகைகளை விநியோகிப்பதற்காக, செயலில் உள்ள தொழில் வழங்குநர்களின் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. தற்போது அந்த பிராந்திய அலுவலகங்களால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள அறிக்கைகள் எதிர்காலத்தில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செயலற்ற தொழில் வழங்குநர்களின் படிவம் II அறிக்கைகளைப் பெறுவதற்காக மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, 150 தொழில் வழங்குநர்களிடமிருந்து சுமார் 790 "C" அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. படிவம் II அறிக்கைகள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் மீதமுள்ள பங்களிப்புத் தொகைகளை விநியோகித்து அவற்றை ஏற்புடைய அங்கத்தவர் கணக்குகளில் வரவு வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

(ஆ) i காசோலைகளின் பட்டியலில் பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படாத ரூ.744,665/- பெறுமதியுள்ள 16 காசோலைகள் தொடர்பான விரிவான விளக்கங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

ii நிதி ஒழுங்குவிதிகள் 756 (6) இன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு 2025 ஏப்ரல் 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நிதிப் பிரிவில் உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள் இருப்பதால் பொருட்கள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தாமதமாகிவிட்டாலும், அது தற்போது இறுதிக் கட்டத்தில் இருப்பதால், பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை ஜூலை 15 ஆம் திகதிக்கு முனனர் சமர்ப்பிக்கப்படும்.

அவ்வாறே, 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையும் ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

iii சபையினால் பயன்படுத்தப்படும் தற்போதைய ஓட்டுநர் பதிவுப் புத்தகம் வழக்கமாக சுமார் 3 மாதங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் ஒரு மாதத்தின் முடிவில், அடுத்த மாதத்தில் ஒரு புதிய ஓட்டுநர் பதிவுப் புத்தகம் வழங்கப்படமாட்டாது. அதற்கமைய, வாகன ஓட்டுநர் பதிவுப் புத்தகங்கள் ஒவ்வொரு மாத இறுதியிலும் போக்குவரத்துப் பிரிவுக்கு கிடைக்கப்பெறுவதில்லை. இனிமேல், எம்மிடம் கிடைக்கப்பெறும் ஓட்டுநர் பதிவுப் புத்தகங்களின் சுருக்கங்களை அவற்றைப் பூர்த்தி செய்த பிறகு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) i வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை பரீட்சிப்பதற்கு சபையின் உதவிப் பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்) தலைமையில் மூன்று பேர் கொண்ட உள்ளக குழு நியமிக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தற்போது சரிபார்க்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதிக பணிச்சுமை காரணமாக, பிராந்திய அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட வாகனங்களில் ஏற்புடைய பரிசோதனைகளை மேற்கொள்ள முடியவில்லை. மேலும் விரைவில் ஏற்புடைய பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ii சபையின் வாகனங்களுக்கான எரிபொருள், பதிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு ஓட்டுநருடன் சென்று அதை முழுமையாக நிரப்பும் நடவடிக்கை உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுகின்றது. அங்கு, ஓட்டுநருக்கு ஒரு வவுச்சர் வழங்கப்படுவதில்லை, மேலும் வாகனத்தில் உள்ள எரிபொருள் இயக்கப்படும் தூரத்துடன் செம்மையாக்கம் செய்யப்படுவதில்லை. இது செய்யப்பட்டால், எரிபொருள் நிரப்பும் போது பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவிற்கும் கணக்கிடப்பட்ட எரிபொருளின் அளவிற்கும் இடையே முரண்பாடு ஏற்படும்.

**2.2.3**

(அ) 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் ‘சட்டம்’ என அழைக்கப்படும்) பிரிவு 37 (அ) இல் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

37 (அ)இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவின்படியோ அல்லது சபையினால் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவின்படியோ பங்களிப்புத் தொகைகள் தொடர்பான காலமுறை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய ஒரு தொழில் வழங்குநர் அத்தகைய சட்டம், உத்தரவு அல்லது வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அத்தகைய அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறினால் அல்லது தவறான அல்லது முழுமையற்ற அறிக்கையை சமர்ப்பித்தால், அத்தகைய அறிக்கையை வழங்கத் தவறியதற்கான அல்லது அத்தகைய காலத்திற்குள் தவறான அல்லது முழுமையற்ற அறிக்கையை வழங்கத் தவறியதற்கான காரணத்தை சபையின் அல்லது சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அதிகாரி திருப்தியடையும் வகையில் தொழில் வழங்குநர் காட்டுவதற்கு முடியாவிடத்து அத்தகைய அறிக்கை தொடர்புடைய பங்களிப்புத் தொகையில் ஒவ்வொரு முழு மாதத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் ஒரு சதவீத மேலதிகக் கட்டணத்தை அந்தத் திகதியிலிருந்து சபைக்கு முறையாக முழுமையான மற்றும் சரியான அறிக்கை கிடைக்கப்பெற்ற திகதி வரை நிதிக்கு செலுத்துவதற்கு தொழில் வழங்குநர் கட்டுப்பட்டுள்ளார்.

மேலும், குற்றங்கள் மற்றும் தண்டனைகள் தொடர்பாக, மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 39 இன் கீழ் பின்வரும் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

39 ஒவ்வொரு நபரும்

(அ) இந்தச் சட்டத்தின் எந்தவொரு விதியையும் அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் மீறும் அல்லது பின்பற்றத் தவறிய எந்தவொரு நபரும்,

(ஆ) இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எந்தவொரு உத்தரவு அல்லது உத்தரவையும் பின்பற்றத் தவறிய எந்தவொரு நபரும்,

(இ) இந்தச் சட்டத்தின் பிரிவு 37 இன் கீழ் வழங்கப்பட வேண்டிய எந்தவொரு கால அறிக்கை அல்லது தகவலையும் தவறென தெரிந்தே வழங்கும் அல்லது வழங்குவதற்கு காரணமான எந்தவொரு நபரும்,

ஒரு குற்றத்திற்காக குற்றவாளியாக இருப்பார், மேலும், ஒரு நீதிவான் முன்னிலையில் நிரூபிக்கப்பட்டால், ஆயிரம் ரூபாய்க்கு விஞ்ஞாத அபராதம் அல்லது ஆறு மாதங்களுக்கு விஞ்ஞாத சிறைத்தண்டனை அல்லது அத்தகைய அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்படுத்தப்படுவார்.

சட்டத்தின் பிரிவு 37(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்புடைய காலமுறை அறிக்கைகள் உரிய திகதிக்குப் பின்னர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டால், சட்டத்தின் விதிகளின்படி கணக்கிடப்பட்ட மேலதிகக் கட்டணங்களை செலுத்த வேண்டிய பொறுப்பைத் தவிர்ப்பதற்காக, கடந்த காலத்திற்கான ஏற்புடைய காலமுறை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதைத் தவிர்த்து, பங்களிப்புத் தொகைகளை மாத்திரம் செலுத்தியிருப்பது கண்டறியப்பட்டாலும், போதுமான தகவல்களின் மூலம் ஏற்புடைய உறுதிப்படுத்தல் இன்றி ஒரு முடிவுக்கு வருவது கடினம். சட்டத்தின் ஏற்புடைய விதிகளின்படி மேற்கொள்ளப்படும் இந்த செயல்முறைக்கு சபையின் பல குறிப்பிட்ட பிரிவுகள் பங்களிக்கின்றன. இது தொடர்பாக சட்டத்தின் ஏற்புடைய விதிகளுக்கு இடையில் எந்த முரண்பாடும் இல்லை, மேலும் அந்த விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

அதற்கமைய, உரிய பிரிவுகள் தொழில் வழங்குநர்ளிகளிடமிருந்து ஏற்புடைய காலமுறை அறிக்கைகளை உரிய திகதிக்குள் பெற நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் குறிப்பிட்ட காலமுறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தவுடன் அவர்கள் மேலதிக கட்டணங்களுக்கு உட்படுத்தப்படுவர். எந்தவொரு தொழில் வழங்குநரும் சட்டத்தின் விதிகளின்படி செயல்படுவதையும், திட்டமிட்டபடி ஏற்புடைய காலமுறை அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிக்காமல் இருப்பதை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் சபையினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரிவு 39 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும் தண்டனைகள் தொடர்பான தற்போதைய விதிகளில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பின்வருமாறு.

39 ஒவ்வொரு நபரும்

(அ) இந்தச் சட்டத்தின் எந்தவொரு விதியையும் அல்லது அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் மீறும் அல்லது பின்பற்றத் தவறிய எந்தவொரு நபரும்,

(ஆ) இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எந்தவொரு உத்தரவு அல்லது உத்தரவையும் பின்பற்றத் தவறிய எந்தவொரு நபரும்,

(இ) இந்தச் சட்டத்தின் பிரிவு 37 இன் கீழ் வழங்கப்பட வேண்டிய எந்தவொரு காலமுறை அறிக்கை அல்லது தகவலையும் தவறென தெரிந்தே வழங்கும் அல்லது வழங்க காரணமான எந்தவொரு நபரும்,

ஒரு குற்றத்திற்காக குற்றவாளியாக இருப்பார், மேலும், ஒரு நீதவான் முன்னிலையில் நிரூபிக்கப்பட்டால், பத்தாயிரம் ரூபாய்க்கு விஞ்ஞாத அபராதம் அல்லது ஆறு மாதங்களுக்கு விஞ்ஞாத சிறைத்தண்டனை அல்லது அத்தகைய அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாக நேரிடும். எந்தவொரு தவறான அறிக்கை அல்லது தகவலை வழங்கிய அல்லது வழங்க காரணமான எந்தவொரு நபரும், அந்த உத்தரவு வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள், சபைக்கு சரியான அறிக்கை அல்லது தகவலை சமர்ப்பிக்க வேண்டுமென நீதவான் உத்தரவிடுவார்.

மேலும், 1981 ஜனவரி 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட, அந்தச் சட்டத்தின் பிரிவு 43 ஆல் அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், வர்த்தமானி இல 125, பகுதி I இன் 3 ஆவது பிரவின் மூலம், பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன:

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 22 இன் படி, 3% என்ற விகிதத்தில் வட்டி தொடக்கத்திலிருந்தே நிதியத்தின் உறுப்பினர்களின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது, மேலும், சட்டத்தின் பிரிவு 14 இன் படி மீதமுள்ள இலாபங்களிலிருந்து பங்கிலாபத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 2020 முதல் 2024 வரையிலான கடந்த 05 ஆண்டுகளில், உறுப்பினர்களின் கணக்குகளுக்கு முறையே 8%, 7.25%, 8.75%, 10% மற்றும் 10% வரவு வைக்கப்பட்டுள்ளன. அதன்படி, குறைந்தபட்ச வட்டி விகிதமான 3% க்கு கூடுதலாக, 5%, 4.25%, 5.75%, 7% மற்றும் 7% ஆகிய கூடிய இலாபங்கள் பங்கிலாபத் தொகையாக உறுப்பினர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளன.

**2.2.4**

(அ) ஒவ்வொரு 3 அல்லது 4 வருடங்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட அப்புறப்படுத்தும் செயல்முறைக்குப் பின்னர், பயன்படுத்தப்படாத/அதிகப்படியான சீருடைகள் களஞ்சியத்திலிருந்து அகற்றப்படுகின்றன. மேலும், 2018 முதல் 2022 வரை குவிந்த சீருடை இருப்புகளை அப்புறப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

2018-2022 வரை குவிந்துள்ள அதிகப்படியான சீருடைகளை அப்புறப்படுத்துவதற்கான விலையை நிர்ணயிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. மேலும் இதற்காக இலங்கை நெசவு மற்றும் ஆடை நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப

வல்லுநரின் சேவைகளும் பெறப்பட்டன. அதன்படி, அப்புறப்படுத்த தேவையான குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கும் போது, துணியின் விலை, தற்போதைய நிலை மற்றும் தற்போதைய சந்தைப் பெறுமதி ஆகியவையும் கருத்தில் கொள்ளப்பட்டு, அதற்கேற்ப குறைந்தபட்ச விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டன.

இந்தத் துணிகளை அப்புறப்படுத்துவதில் சபை ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், ஊழியர்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, சபைக்குள் தீவிரமாக செயல்படும் நலன்புரி சங்கம் மூலம் ஊழியர்களுக்கு இந்த வாய்ப்பை வழங்க முடியும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அதற்கமைய, சபையின் இரண்டு நலன்புரி சங்கங்கள், அதாவது விளையாட்டு சங்கம் மற்றும் அரசாங்க பரஸ்பர உதவிச் சங்கம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த சங்கங்களிலிருந்து விலைகளை அழைத்த பின்னர் அதிகபட்ச விலையை சமர்ப்பித்த சங்கத்திற்கு பொருட்களை வழங்க முடிவு செய்யப்பட்டது.

இருப்பினும், 'விளையாட்டுச் சங்கம்' 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை நல்ல நிலையில் செயற்படவில்லை, மேலும் இந்த காலகட்டத்தில் விலை மனுக்கள் கோரப்பட்டால் ஒரே ஒரு சங்கம் மாத்திரம் விலைகளை சமர்ப்பிப்பதால் விலைப் போட்டி இருந்திருக்காது.

(ஆ) சபைக்கான புதிய மைய அமைப்பு திட்டத்தின் செயற்பாட்டு ஏற்றுக்கொள்ளும் அமர்வுகள் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டது. இந்தச் செயற்பாட்டு ஏற்றுக்கொள்ளல் அமர்வுகள் ஆரம்பிக்கப்படும்போது ஏற்புடைய வன்பொருள் சாதனங்கள் (Hardware Devices) கொள்வனவு செய்யப்படல் வேண்டும் என ICTA வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, நிரல் அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு, மேற்கூறிய QR Code Scanners மற்றும் QR Code Printers கொள்வனவு செய்யப்பட்டன. இருப்பினும், திட்டமிட்டபடி திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்குள் செயற்பாட்டு ஏற்றுக்கொள்ளல் அமர்வுகளைத் ஆரம்பிக்க முடியவில்லை.

இருப்பினும், வணிக செயல்முறைகளை படமெடுத்தல் மற்றும் இயக்க சூழலைத் தயாரிப்பது தொடர்பான செயல்முறைகள் தற்போது அமைப்புடன் தொடர்புடைய அனைத்து துறைகளுடனும் மேற்கொள்ளப்படுகின்றன. மைய அமைப்பில் அதிக எடையைக் கொண்ட அமலாக்கத் தொகுதி தொடர்பான வணிக செயல்முறைகளின் (Enforcement Module) ஆவணங்கள் சுமார் 80% நிறைவடைந்துள்ளன.

முக்கியமான செயற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக திட்டத்தின் பணிகளை விரைவில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபை அனுமதி அளித்துள்ளது.

அமைப்பு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து வன்பொருள்களும் பயன்பாட்டிற்கு வரும்.

பின்வரும் ஆவணங்கள் தற்போது வாரியத்தால் ஸ்கேன் (Scan) செய்யப்பட்டு வருகின்றன.

- Claim Forms
- Claims Schedule
- R1
- Emp. Corrections (Journals)
- Form II
- Form II Letters
- R4
- Self-Claims
- Self-Claim Schedule
- Surcharge
- Member Cards (Self)
- Registration Form (Self)

இதற்காக, எதிர்காலத்தில் அமலாக்க ஆவணங்கள் (Enforcement), சட்ட ஆவணங்கள் மற்றும் கோப்புகளை சேகரிக்க தேவையான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தற்போது, தலைமை அலுவலகத்தின் பல பிரிவுகளிலும் சுமார் 06 பிராந்திய அலுவலகங்களிலும் இந்த ஆவணங்களை ஸ்கேன் செய்யும் செயல்முறை முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆவணங்களை ஸ்கேன் செய்யும் செயல்முறை மீண்டும் ஒரு முறையான செயல்முறையின் கீழ் கொண்டு வரப்பட்டு 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் விரிவுபடுத்துவதற்கு ஆரம்பமானது. புதிய ஆவணங்களை மேலும் சேகரிப்பதன் மூலமும், ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்படும் பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் இந்தச் செயன்முறையை விரிவுபடுத்த தற்போது திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. கொள்வனவு செய்யப்பட்ட ஆவண ஸ்கேனிங் இயந்திரங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளன, மேலும் 2025.05.09 நிலவரப்படி களஞ்சியத்தில் மீதமுள்ள 11 இயந்திரங்கள் மேற்கூறப்பட்ட திட்டத்தை செயல்படுத்துவதில் பயன்படுத்தப்படும்.

(இ) திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்குள் கருத்திட்டம் நிறைவுசெய்யப்படமாக்குப் பல காரணிகள் பாதிப்பை செலுத்தின.

- கருத்திட்ட முகாமை ICTA ஆல் மேற்கொள்ளப்பட்டது மற்றும் திட்ட முகாமை சிக்கல்கள் கருத்திட்ட தாமதத்திற்கு தாக்கம் செலுத்திய முதன்மை காரணிகளாகும்.
- கோவிட் தொற்றுநோய்.
- மாற்ற கோரிக்கையை (CR) நிறைவேற்றுவதற்கு குறிப்பிடத்தக்க காலம் செலவாகியது.
- அமைப்பு செயல்பாட்டுக்கு வருவதற்கு முன்பு பல முக்கிய மாற்றங்கள் நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தது.
- செயல்பாட்டு ஏற்பு அமர்வு (OAT) தொடங்குவதற்கு முன்னர் கணினி சோதனையின் போது கணினியில் உள்ள சிக்கல்கள் மற்றும் பிழைகளை அடையாளம் காணுதல்.

இந்தக் கருத்திட்டத்தின் செயற்பாட்டு ஏற்றுக்கொள்ளல் அமர்வுகள் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டது. செயற்பாட்டு ஏற்றுக்கொள்ளல் அமர்வுகள் ஆரம்பிக்கப்படும்போது ஏற்புடைய வன்பொருள் சாதனங்களை (Hardware Devices) கொள்வனவு வேண்டும் என கருத்திட்ட முகாமையாளராக இருந்த ICTA வலியுறுத்தியது. அதற்குள், எங்கள் குழுவின் ஏற்புடைய பிரிவுத் தலைவர்கள் கருத்திட்டத்தின் அனைத்து தொகுதிகளுக்கும் பயனர் ஏற்றுக்கொள்ளல் பரிசோதனை அறிக்கைகளை (User Acceptance Testing Report) சான்றளித்து கையொப்பமிட்டனர்.

மேலும், சபையின் சாதனங்களின் கடுமையான பற்றாக்குறை காரணமாக, அன்றாட வேலைகள் தடைபட்டன. மேலும் மடிக்கணினிகள், கணினிகள் (PC) மற்றும் ஆவண ஸ்கேனர்கள் (ADF Scanners) ஆகியவற்றிற்கான வலுவான தேவை எழுந்தது.

அடையாளம் காணப்பட்ட தேவைகள் கொள்முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, நிரல் அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வன்பொருள் சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

மேலே உள்ள வன்பொருள் மைய அமைப்புத் திட்டம் மற்றும் அன்றாட செயற்பாடுகள் இரண்டையும் பூர்த்தி செய்வதற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறியவற்றைத் தவிர அனைத்து இயந்திரங்களும் ஏற்கனவே பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு சபையின் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2025.05.09 நிலவரப்படி களஞ்சியத்தில் மீதமுள்ள 11 ஆவண ஸ்கேனர்கள் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்துவதில் பயன்படுத்தப்படும். அமைப்பின் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு அனைத்து (QR Code Scanners) மற்றும் (QR Code Printers) அவசியம்.

தேசிய கட்டண தளத்தின் National Payment Platform (NPP) பொறுப்புடமையை ICTA நிறுவனத்திற்கு உரியதாகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரிவு 3.8 இன் பிரகாரம் இந்த அமைப்பை வழங்குவது ICTA நிறுவனத்தின் பொறுப்பாக இருப்பதால், இந்த அமைப்பு ஏற்கனவே NPP அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உறுப்பினர்கள் மற்றும் தொழில் வழங்குநர்களுக்கு சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சேவை அலகுகளை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. கருத்திட்டம் தொடர்பாக அமைப்புக்கு ஏற்ப கட்டமைக்கப்பட வேண்டிய புதிய வாடிக்கையாளர் சேவை அலகைத் தயாரிப்பதற்கு 'வடிவமைப்பு ஆலோசகரை' தேர்ந்தெடுப்பதற்கான கொள்முதல் செயல்முறை நிறைவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்புடைய அடிப்படை வடிவமைப்புத் திட்டம் வடிவமைப்பு ஆலோசகரால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏற்புடைய விரிவான கருத்திட்டம் கிடைத்த பின்னர் கொள்முதல்

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இந்த ஆண்டுக்குள் அதன் கட்டுமானப் பணிகளை நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட அமைப்பின் செயற்பாட்டு ஏற்பு அமர்வை (OAT) நடத்துவதற்கு, ஏற்கனவே உள்ள அமைப்பிலிருந்து தரவை மாற்ற வேண்டியிருந்தது. மேலும், அந்த செயல்முறையின் ஒரு பகுதியாக தரவு சுத்திகரிப்பு (Data Cleanse) செய்யப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பில் கணினியுடன் நேரடி ஒளிபரப்பு செய்ய முடிவு செய்யப்பட்ட திகதிக்கு சில நாட்களுக்கு முன்பு இறுதி தரவுப் பரிமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

தரவு பரிமாற்றத்திற்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி விவரக்குறிப்பின் (Programme Script) துல்லியத்தை செயல்படுத்துவதற்கு முனனர் அதனை சரிபார்த்தல் வேண்டும். பரிமாற்றம் செய்யப்படும் தரவின் துல்லியத்தை சரிபார்ப்பதற்கு ஒவ்வொரு துறையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது.

செயல்பாட்டு ஏற்பு அமர்வை (OAT) ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைப்பு தொடர்பான பணிப்பாய்வுகளை அடையாளம் கண்டு, கணினி சோதனை செயல்முறைக்கு உட்படுத்த வேண்டியது அவசியம். இந்த நேரத்தில், அமைப்பு தொடர்பான பணிப்பாய்வுகளை சரியான முறையில் அடையாளம் கண்டு, அவற்றை அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் கணினியில் பரிசோதிப்பது முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டது, அதற்கமைய, வேலை செய்யப்படுகிறது. அதன் பிறகு, தரவு பரிமாற்றம் மற்றும் தரவு துல்லியம் சரிபார்ப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைப்பின் செயற்பாட்டு ஏற்பு சோதனை வெற்றிகரமாக முடிந்த பிறகு, வைப்பிலிடப்படாத பங்களிப்புத் தொகை (Unallocated Receipt) மற்றும் Lanka Clear தொடர்பாக அடையாளம் காணப்பட்ட 02 கோரிக்கைகள் குறித்த பணிகளை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வணிக செயல்முறைகளை பமாக்கம் செய்தல் மற்றும் இயக்க சூழலைத் தயாரிப்பது தொடர்பான செயல்முறைகள் அமைப்பு தொடர்பான அனைத்து துறைகளுடனும் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. முக்கிய அமைப்பின் பெரும்பகுதியை எடுத்துக் கொள்ளும் அமுலாக்கத் தொகுதி (Enforcement Module) தொடர்பான வணிக செயல்முறைகளின் ஆவணப்படுத்தல் இப்போது சுமார் 80% நிறைவடைந்துள்ளது.

திட்டத்தின் தற்போதைய நிலை சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

**கருத்திட்ட தரநிலை அறிக்கை**

1. **தொழில்நுட்ப முன்மொழிவின் புலனாய்வு மற்றும் மதிப்பீடு**
   தொழில்நுட்ப முன்மொழிவு குறித்து ஒரு குறிப்பிட்ட மீளாய்வு மற்றும் பல சிறப்பு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. முன்மொழியப்பட்ட தொழில்நுட்ப கட்டமைப்பு நவீன தொழில்துறை தரநிலைகளுக்கு ஏற்பவும் தற்போதைய தொழில்நுட்ப தேவைகளை பூர்த்தி செய்யவும் முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. செலவு செயல்திறனைக் கருத்தில் கொண்டு, பலரால் பரவலாகப் பயன்படுத்தப்படும் திறந்த மூல மென்பொருள் தீர்வுகள் (Open-Source Software Solutions) பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது தீர்வு நிலையானது மற்றும் அளவிடக்கூடியது (Scalable) என்பதை உறுதி செய்கின்றது.

2. **செயன்முறைகளுக்கு இடையிலான வேறுபாடு மற்றும் சிக்கல் பகுப்பாய்வு**
   அமுலாக்கப் பிரிவின் (Enforcement Division) தற்போதைய செயல்முறைகளுக்கும், அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் முக்கிய அமைப்பின் செயல்முறைகளுக்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க ஒப்பீடு செய்யப்பட்டது. கருத்திட்டத்தை செயல்படுத்தும்போது வெற்றிகரமாக தீர்க்கக்கூடிய சிக்கல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்ட முரண்பாடுகளாகும். மேலும் இந்த சிக்கல்களை அடையாளம் காண நேரடிக் கலந்துரையாடல்கள் மற்றும் வணிக செயல்முறை பகுப்பாய்வுகள் (Business Process Analysis) நடத்தப்பட்டன.

3. **பரிசோதனை நடவடிக்கைகள் (Testing)**
   இந்த அமைப்பைச் சரிபார்ப்பதற்கு 500 க்கும் மேற்பட்ட சம்பவக் கற்கைகள் (Test Cases) ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைகளிலிருந்து போதுமான மாதிரிகள் 2025 மே மாதத்தில் அமுலாக்கல் தொகுதியை (Enforcement Module) பரிசோதிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. இது மீதமுள்ள தொழில்நுட்ப சிக்கல்களைக் கண்டறிந்து தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. **பாடுகளை சேகரிக்கும் தடவைகள் (Requirement Gathering Sessions)**
எதிர்வரும் 2 மாதக் காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தல், சேகரித்தல் மற்றும் மேலதிகக் கட்டணப் பிரிவுக்கான (Enforcement, Collection and Surcharge Divisions) தேவைப்பாடுகளை சேகரிப்பு தடவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நேர அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

5. **கருத்திட்ட முகாமைத்துவக் குழுவை நிறுவுதல்**
2025 மே மாதம் இறுதியில் கருத்திட்ட முகாமைத்துவக் குழுவை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. **புதிய ஒப்பந்தம்**
தற்போதுள்ள ஒப்பந்தம் காலாவதியாகியுள்ள காரணத்தினால் ETFB, ICTA மற்றும் Inova IT Systems (Pvt) Ltd. இடையில் புதிய முத்தரப்பு கருத்திட்ட ஒப்பந்தம் 2025 ஜுன் மாதத்திற்குள் நிறைவுசெய்தல்.

(ஈ) ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் 90 கிராம அலுவலர் பிரிவின் சிரிபோபுராவில் 0.1012 ஹெக்டயார் காணி 2020.07.03 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி மூலம் 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது. இது சபைக்கு கையகப்படுத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பிற பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு, தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை 03.:2022 (02) இல் கட்டிடங்களின் கட்டுமானம் மற்றும் வாடகை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை தொ.இல. 07.01 இல் அந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால், அதை கட்டிடங்களை நிர்மாணிக்கப் பயன்படுத்த முடியவில்லை, மேலும் இதுபோன்ற கட்டுப்பாடுகளை எதிர்கொண்டு இதுவரை அதை திறம்பட பயன்படுத்த முடியவில்லை.

(உ) இலங்கை வங்கிக்கும் சபைக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி, சபையின் பிரதான பங்களிப்பு நிதிக் கணக்கைப் பராமரிப்பதற்கு வசதியாக, வருடாந்த அடிப்படையில் 500 மில்லியன் நிலையான வைப்புத்தொகைகள் மற்றும் மறு கொள்முதல் ஒப்பந்தங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், வருடாந்த புதுப்பித்தலின் போது, அந்தத் திகதியில் 3 அரச வங்கிகளின் மறு கொள்முதல் ஒப்பந்தங்கள் மற்றும் நிலையான வைப்புத்தொகைகளில் நிலவும் வட்டி விகிதங்கள் ஒப்பிட்டு, மிகவும் சாதகமான வட்டி விகிதத்தில் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டன. அதன்படி, ஆண்டுதோறும் சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாறுபாட்டிற்கு ஏற்ப வைப்புத்தொகைகள் நடைமுறையில் உள்ள வட்டி விகிதங்களில் பராமரிக்கப்படுகின்றன.

காசோலைகள் மூலம் சபைக்கு வழங்கப்படும் பங்களிப்புகளை சேகரிப்பதற்காக பராமரிக்கப்படும் முக்கிய வங்கிக் கணக்கு இதுவாகும், மேலும் 2024 ஆம் ஆண்டில் 496,027 காசோலைகளுக்கு ரூ.7,049 மில்லியன் பெறுமதியுள்ள பரிவர்த்தனைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், கணக்குடன் தொடர்புடைய அதே ஆண்டில் 1,583 மதிப்பிறக்கம் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூ.30.5 மில்லியன் ஆகும்.

இந்த வங்கிக் கணக்கைப் பராமரிப்பதற்கு இலங்கை வங்கி பின்வரும் சிறப்பு வசதிகளை வழங்கியுள்ளது.

- இலங்கை வங்கியின் பிரதிநிதி ஒருவர் ஒரு நாளைக்கு இரண்டு முறை (மதியம் 12.00 மணி மற்றும் பிற்பகல் 2.30 மணி) காசோலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபைக்கு வருவார்.
- வங்கி அறிக்கைகள் மற்றும் மதிப்பிழந்த காசோலைகள் சபையிடம் ஒப்படைக்கப்படும்.
- மதியம் 12.00 மணி வரை வங்கிக்கு வழங்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி மறுநாள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும், அதன் பின்னர் வழங்கப்படும் காசோலைகளின் பெறுமதி மறுநாள் அல்லது அதற்குப் பிறகு கணக்கில் வரவு வைக்கப்படும்.

அதற்கமைய, 2005 ஆம் ஆண்டில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி வங்கி வழங்கிய சேவைகள் மற்றும் சிறப்பு வசதிகளுக்காக சபையினால் ரூ.100,000/- மாதாந்த சேவை கட்டணம் இன்றுவரை எந்த அதிகரிப்பும் இன்றி செலுத்தப்படும்.

## 2.3 வேறு விடயங்கள்

(அ) வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) நிலுவையில் உள்ள வட்டித் தொகையைத் தீர்க்க எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தால் தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்தும் திட்டம் (Installment Repayment Plan) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை ஆய்வு செய்த பின்னர் இரு தரப்பினரின் ஒப்பந்தத்துடன் திட்டத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இந்த நிறுவனத்தை கலைக்க 2018 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரை ஒரு கலைப்பாளர் நியமிக்கப்படவில்லை.

பின்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த நிறுவனத்தின் கடனாளி ஒருவரால் கலைப்பு வழக்கில் 42.6 மில்லியன் ரூபா தொகை வைப்பிலிடப்பட்டுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியிலிருந்து அறவிடப்பட வேண்டிய அந்தத் தொகையிலிருந்து ஏதேனும் தொகையை மீட்டெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆலோசனை கோரி 2024.03.12 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் வினவப்பட்டு வருகின்றது. ஆனால் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. அதற்கமைய, அந்த பதிலைப் பெற்ற பின்னர் அதன் உள்ளடக்கங்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தொகை குறித்து மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) i இந்த வசதிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதில் உள்ள சிரமங்கள், மூலதனச் செலவினக் கட்டுப்பாடுகள், புதிய பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள கட்டுப்பாடுகள், தற்போதுள்ள சம்பள அளவுகளின் கீழ் தகுதிவாய்ந்த மற்றும் திறமையான அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல், தக்கவைத்துக்கொள்வது மற்றும் மீண்டும் பணியமர்த்துவதில் உள்ள சிரமம் மற்றும் பிற தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த வசதியை ஒரு அரசாங்க வங்கியான மக்கள் வங்கி எந்த செலவும் இல்லாமல் மற்றும் மேலதிக ஊழியர்களைப் பணியமர்த்தாமல் மேற்கொண்டு வருகின்றது.

ii. சபையின் தற்போதைய நிர்வாகப் படிநிலையின்படி, அத்தகைய பதவி இன்னும் நிறுவப்படவில்லை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகளுக்கு மேலதிகமாக, பட்டய நிதி ஆய்வாளர் தகுதி அந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான சிறப்புத் தகுதியாகக் கருதப்படுகிறது. இருப்பினும், இதுவரை அத்தகைய பதவிகள் காலியாக உள்ள சந்தர்ப்பங்களில், அத்தகைய தகுதிகளைக் கொண்ட எந்த நிபுணரும் அந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை.

வாரியத்தின் தற்போதைய ஆட்சேர்ப்பு செயல்முறையின்படி சம்பள அளவு மற்றும் அந்தப் பதவிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட பிற சலுகைகளை ஒப்பிடும் போது, சந்தையில் பட்டய நிதி ஆய்வாளர் தகுதியுடன் ஒரு பதவிக்கு வழங்கப்படும் சம்பள அளவு மற்றும் பிற சலுகைகளுக்கு இடையே ஒரு பெரிய இடைவெளி இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, பணிப்பாளர் சபையினால், ஆலோசகர் மட்டத்தில் முதலீட்டுத் துறையில் அத்தகைய தகுதிகள் மற்றும் போதுமான நிபுணத்துவ அனுபவமுள்ள ஒரு நிபுணரை நியமிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

iii. (1) இந்த விடயத்துடன் தொடர்புடைய சட்டமுறையான ஏற்பாடுகளுக்கு அமைய முன்னர் காணப்பட்ட நிலைமை மற்றும் பின்னர் அதனை திருத்தியமைத்ததன் காரணமாக உள்ள நிலைமை.

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 5(2) இல் 'சபையின் தவிசாளர் அமைச்சரால் நியமிக்கப்படுவார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்தப் பிரிவு 1988 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தின் மூலம் 'சபையின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கும் சபையின் தவிசாளர் அமைச்சரால் நியமிக்கப்படுவார்' என திருத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்தத் திருத்தத்தின் மூலம், தவிசாளர் பதவியை மட்டுமே வகித்த நபருக்குத் தவிசாளர் பதவிக்கு மேலதிகமாக தலைமை நிர்வாக அதிகாரி எனும் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

(2) மேற்படி விடயம் தொடர்பில் அரசாங்க தொழில் முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரை

2016 ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க தொழில் முயற்சிகள் குழுவின் கூட்டத்தில் இது தொடர்பாக பின்வரும் பரிந்துரை செய்யப்பட்டது.

'ஒரே நபர் ஒரு நிதி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் தவிசாளர் பதவியை வகிப்பது பொருத்தமானதல்ல என்றும், இந்த நிலைமையை ஏற்புடைய சட்டத்தில் திருத்தம் செய்வதன் மூலம் மாற்றியமைக்க வேண்டுமென குழுவினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.'

(3) அரசாங்க தொழில் முயற்சிகள் குழுவின் பரிந்துரைக்கு அமைய சட்டத்தை திருத்தியமைப்பதற்கு சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள்.

இந்த விடயத்தை சபை முழுமையாக ஆய்வு செய்து, அந்தப் பரிந்துரையின்படி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரிவு 5(2) ஐத் திருத்துவதற்கு பின்வரும் முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன:

- சபையின் தவிசாளர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி பதவிகளை ஒரே நபர் வகிப்பதற்குப் பதிலாக இரண்டு நபர்கள் வகிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்துதல்.
- சபையின் பொது முகாமையாளர் பதவியை வகிக்கும் நபரை சபையின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்தல்.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தை திருத்தியமைப்பதற்காக சபையினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சுருக்கமாக பின்வருமாறு.

(4) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் இறுதியாக 1993 இல் திருத்தப்பட்டது, அதன்படி, 2016 ஆம் ஆண்டுக்குள் சட்டத்தின் பல பிரிவுகளைத் திருத்துவதற்கான முன்மொழிவுகள் செய்யப்பட்டன.

மேற்கூறிய பரிந்துரை கிடைத்ததிலிருந்து, 2016 ஆம் ஆண்டு முதல் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை உள்ளடங்கும் நிரல் அமைச்சு பல சந்தர்ப்பங்களில் மாற்றமடைந்துள்ளன. மேலும் அப்போது பதவியில் இருந்த பணிப்பாளர்கள் மற்றும் தவிசாளர்களும் பல சந்தர்ப்பங்களில் மாறிவிட்டனர். மேலும், கடந்த காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் தோன்றியதால், சட்டத்தைத் திருத்துவதற்கான முழு செயல்முறையிலும் முடிவெடுப்பது மற்றும் நடவடிக்கை எடுப்பதற்கான செயல்திறன் மற்றும் வினைத்திறன் பாதிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட முறையில் சட்டத்தின் பிரிவு 5(2) ஐத் திருத்துவதற்கான முன்மொழிவு உள்ளிட்ட திருத்தங்கள், அரசாங்க தொழில் முயற்சிகள் குழுவின் பரிந்துரையின்படி 2021.07.26 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேற்படி சபையின் முடிவும் முன்மொழியப்பட்ட திருத்தங்களும் 2021.08.11 ஆம் திகதிய கடிதம் மூலம் நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டன.

(5) நிதி அமைச்சின் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அழைப்பின் பேரில், இந்த முன்மொழியப்பட்ட திருத்தங்கள் குறித்த கலந்துரையாடல் 2021.11.23 ஆம் திகதி நிதி அமைச்சில் நடைபெற்றது. மேலும் பெறப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் பரிந்துரைகளின்படி ஏற்புடைய திட்டங்கள் திருத்தப்பட்டன.

(6) அதன்படி, முன்மொழியப்பட்ட திருத்தங்கள் 2022.05.03 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டன. அந்தக் கூட்டத்தில், இணைய வழியில் பங்களிப்பு தொகைகள் மற்றும் மாதாந்த அறிக்கைகளை இணையவழி முறையில் சமர்ப்பிப்பது தொடர்பான முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கான விதிமுறைகளை அமைச்சர் தயாரிப்பது பொருத்தமானது என அறிவுறுத்தப்பட்டது. இது ஒரு அவசரத் தேவையாகக் கருதப்பட்டது, மேலும் அந்த நேரத்தில் நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மீதமுள்ள முன்மொழியப்பட்ட திருத்தங்களின் பரிசீலனையை 06 மாதங்களுக்கு ஒத்திவைக்க பணிப்பாளர் சபை முடிவு செய்தது.

(7) 2022.06.27 ஆம் திகதி நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில், மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி பல முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்கான விதிமுறைகளைத் தயாரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் அந்த முடிவு திறைசேரியின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது. மேலும் 2022.08.04 மற்றும் 2022.12.14 திகதிய கடிதங்கள் மூலம் விதிமுறைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சரிடம் கோரப்பட்டது. அதன்படி, ஏற்புடைய விதிமுறைகள் 2022.12.22 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

(8) 2022.12.19 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில், பணிப்பாளர் சபை மூலம் சட்டத்தில் முன்மொழியப்பட்ட பல திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டன. இது நிதி அமைச்சரின் 2023 வரவுசெலவுத்திட்ட உரையில் சேர்க்கப்பட்டுள்ள ஏற்புடைய திட்டங்களைச் சேர்த்து மறுவடிவமைப்பு செய்யப்பட்டது. சட்டத்தின் கூறப்பட்ட பிரிவு 5(2) ஐத் திருத்துவது தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடமிருந்து ஆலோசனையைப் பெற்ற பிறகு, அந்த அறிவுறுத்தல்களின்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்க பணிப்பாளர் சபை முடிவு செய்தது. அந்த முடிவுகளை சபையின் தலைவர் 2022.12.21 ஆம் திகதிய கடிதம் மூலம் நிதி அமைச்சின் செயலாளருக்குத் அறிவித்துள்ளார். அதற்கமைய, 2022.12.19 ஆம் திகதி பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட திருத்தங்கள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, அந்தத் திருத்தங்கள் தொடர்பான ஆரம்பகட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

(9) மேலே குறிப்பிட்டுள்ளபடி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் திருத்தத்திற்கு இணையாக, பொது தொழில் முயற்சிகள் குழுவால் வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட பரிந்துரையின்படி திருத்தத்தை செயல்படுத்துவது குறித்து 2023.04.24 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. மேலும் இது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளரின் கருத்துகள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்று, இது தொடர்பாக தேவையான மேலும் நடவடிக்கை எடுக்க சபை முடிவு செய்தது.

(10) அதற்கமைய, மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக 2023.04.24 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு மற்றும் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், சபையின் தவிசாளரினால் 2023.05.02 ஆம் திகதிய கடிதம் மூலம் நிதி அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டன.

(11) பொதுத் திறைசேரியின் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பொதுத் திறைசேரியின், சட்ட விவகாரத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தவிசாளருக்கு பிரதியிட்டு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தவிசாளருக்கு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தற்போது வரைவு செய்யப்படும் சட்டமூலத்தின் பிரிவு 5(2) க்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதற்கமைய, இது தொடர்பாக தற்போது ஏற்புடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(12) அவ்வாறே, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக 2025 ஜனவரி 27 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் 764 ஆவது கூட்டத்தில் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு மேலும் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, சட்டத்தின் பிரிவு 5(2) க்கான முன்மொழியப்பட்ட திருத்தம் தற்போது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இந்தச் செயன்முறையின் முன்னேற்றம் தொடர்பில் தொடர்ச்சியாக பின்னூட்டம் செய்யப்படுகின்றது.

(உ) Evolve Technologies (Pvt) Ltd. நிறுவனத்துடன் பராமரிப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2025.02.17 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பராமரிப்பு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும்.

Core System முறைமையை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தல் ஏற்றுக்கொள்ளும் அமர்வுகளை (OAT) முடிவுறுத்திய பின்னர் அந்த அமைப்புடன் இந்த Accpac அமைப்பை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) இந்தக் களஞ்சிய வளாகம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நாரஹேன்பிட்ட விசேட பொருளாதார மைய முகாமைத்துவ அறக்கட்டளையிடமிருந்து, சபையின் களஞ்சியமாகப் பராமரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு முறையாகக் கையகப்படுத்தப்பட்டது. மேலும் இந்தக் களஞ்சியங்கள் ஏப்ரல் 2022 முதல் பிராந்திய நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் இயக்கப்படல் வேண்டும். பல சந்தர்ப்பங்களில், கடிதங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் அனுப்பப்பட்டு, இது தொடர்பாக தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், இது தொடர்பாக நினைவூட்டல்கள் செய்யப்பட்டன, மேலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சென்று பணிப்பாளர் (காணி அபிவிருத்தி மற்றும் முகாமை) நேரில் சென்று கலந்துரையாடினர். இருப்பினும், எந்த பதிலும் கிடைக்காத காரணத்தினால் 2025.02.17 ஆம் திகதி மீண்டும் ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பி மீண்டும் தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. சபையினால் வாடகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட இந்தக் கட்டிடங்கள் தொடர்பாக குத்தகைதாரர் குத்தகை

ஒப்பந்தங்களைத் தயாரித்தல் வேண்டும். எனவே, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தாமதம் காரணமாக, இந்த ஒப்பந்தம் தாமதமாகியுள்ளது. மேலும் இந்தச் சபையினால் ஒப்பந்தம் இல்லாமல் வாடகைக் கொடுப்பனவுகளைச் செய்ய முடியாது என்பதால், கட்டணங்களுடன் அபராதங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் இல்லாத விடயம் தொடர்பான பிரச்சினை தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுவருகின்றது.

(எ) சேவையிலிருந்து ஓய்வுபெறல், சேவை இடைநிறுத்தம், பதவி நீக்கம் ஆகிய காரணங்களுக்காக தற்போது இந்த உத்தியோகத்தர்கள் சபையின் சேவையிலிருந்து நீங்கியுள்ளதோடு, அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை இறுதி கொடுப்பனவின் போது அறவிடப்படும். அவ்வாறே, பெற்றுக்கொண்டுள்ள கடன்தொகைகளுக்கான ஒப்பந்தங்களின் பிரகாரம் ஏற்புடைய பிணையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, இது தொடர்பான நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்படிக்கு — உண்மையுள்ள
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை



**சோமசிறி ஏக்கநாயக்க**
தவிசாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT
2024

EMPLOYEES' TRUST FUND BOARD

19 – 23 Floors, "MEHEWARA PIYESA",
P.O.Box 807, Kirula Road, Narahenpita, Colombo 05.
Tel: 011 7747201 | Fax: 011 2503917
Email: finance@etfb.lk
Web: www.etfb.lk